திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS



காந்தி அடிகள்

மாலை 11] கீலக - புரட்டாசி - அக்டோபர், 1968 [மணி 1

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



திருவண்ணாமலைக் கோயிலுக்குத் தமிழக அரசின் அறநிலைய அமைச்சர் மாண்மிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன், M.A., அவர்கள் வருகை தந்தபோது, கோயில் மரியாதைகள் செய்யப்பெறுதல்.

பொருளடக்கம்

1. அப்பரும் காந்தியடிகளும்
2. அபிராமி அந்தாதி
3. இந்தியப் பெருந் தத்துவ ஞானிகள்
4. அந்தகக் கவி வீரராகவர்
5. சங்கு தீர்த்த புஷ்கர மேளா
6. பாண்டிய நாட்டுத் தலங்கள்
7. ஸ்ரீராமாயண ரசப்பிரவாகம்
8. மகாபாரதம்
9. வரகுண பாண்டியனின் திருத்தொண்டுகள்
10. மணிவாசகரும், திருக்கழுக்குன்றமும்
11. இயற்கைக் காட்சியில் இன்பச் சுவை

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 11] கிலக - புரட்டாசி - அக்டோபர், 1968 [மணி 1

அப்பரும் காந்தியடிகளும்*

"அனுச யப்பட்டு அதுஇது என்னாதே
கனிம னத்தொடு கண்களும் நீர்பில்கிப்
புனித னைப்பூவ னாரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யாய மனிதரே".

முன்னுரை :

அண்ணல் காந்தியடிகளின் அரும் பெரும் வாழ்க்கை நிகழ்ச்சிகளை நினைவு கூருங்கால், மேற்குறித்துள்ள அப்பர் பெருமானின் அருமைத் திருப்பாடல் நம்மனோர் நினைவிற்போந்து இன்புறுத்து கின்றது. "மனிதரில் தலையாய மனிதர்" காந்தியடிகள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, செய்தற்கரிய செயல்கள் பல செய்து, பெருநிலை பெற்றவராகக் காந்தி யடிகள் இன்னான்று உலக மக்கள் அனை வராலும் உவந்தினிது ஒருங்கே போற்றப் படுகின்றார். அடிகளின் அருமை பெருமை களை ஆராய்ந்து உணருந்தோறும் உண ருந்தோறும், அவர்க்கும் நம் அப்பர் பெரு மானுக்கும் இடையே, பலதிறப் பண்பொப் புமைகளைக் காண்கின்றோம். அவற்றை ஆராய்ந்து அறிந்து சிந்திப்பது, நாம் இவ் விரு பெருஞ் சான்றோர்களுக்கும் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்.

தேசம் உய்ய வந்தவர் :

காந்தியடிகள் நமது தேசம் உய்ய வந் தவர். திருநாவுக்கரசரும் நம் "தேசம் உய்ய வந்தவர்" என்றே, சேக்கிழார் பெரு மானால் பாராட்டப் பெறுகின்றார்.

"ஆசனத்திற் பூசனைகள் அமர்வித்து
விருப்பினுடன்
வாசம்நிறை திருநீற்றுக் காப்பேந்தி
மனந்தழைப்பத்
தேசம் உய்ய வந்தவரைத் திருவமுது
செய்விக்கும்
நேசமுற விண்ணப்பம் செயஅவரும்
அது நேர்ந்தார்"

இருவரும் கோடிக்கணக்கான மக்களின் மனத்திறனை மாற்றி, அவர் தம் வாழ்வைச் சீர்திருத்திப் புனிதம் ஆக்கியவர்கள்[1]. இருவரும் தத்தம் காலத்து மக்களின் வாழ்க்கையிலும், மனப்பான்மையிலும், மிகச் சிறந்த பெரியதொரு மாற்றத்தினை விளைவித்து, நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, எழுச்சி பெற்று உணர்ச்சி யுற்றுப் பின்பற்றி நின்று போற்றும் நிலை யில், செய்தற்கரிய பெருஞ் செயல்களைச் செய்தவர்கள்.

---

*இக்கட்டுரை, காந்தியடிகளின் நூற்றாண்டுச் சிறப்பு விழா நிகழ்ச்சி குறித்து, அவர்க்கு அஞ்சலி செலுத்தும் முறையில், வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்.

(1) "Like a Colossus he stands astride half a century of India's history — a Colossus not of the body but of the mind and spirit".

—Jawaharlal Nehru

அருளியல் :

காந்தியடிகள் ஒரு பெரும் அரசியற் றலைவர்; அப்பரடிகளோ ஒரு பெரும் சமயத் தலைவர். அரசியற் றலைவராயினும், காந்தி யடிகள் சமயநெறியின் தலைநின்ற சான் ரோராக விளங்கினர்[2]. அப்பர் பெருமான் சமய நெறிப் பெருந்தலைவரேயாயினும், ஒரு வகையில் பல்லவர் காலத்தில் அரசி யற்றுறையிற் பெரு விளைவுகள் நிகழக் காரணராக அமைந்தார். ஏறத்தாழ இரு நூறு ஆண்டுகள் அடிமை நிலையுற்றுக் கிடந்த இந்தியப் பெருநாடு, காந்தியடி களால் விடுதலை ஒளி பெற்றது; அப்பர் பெருந்தகையால், பல்லவப் பேரரசு தமிழ்ப் பண்பாட்டு நெறி தழுவித் தழைப்பதா யிற்று. 'கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தம் ஒன்று' நடாத்திக் காந்தியடிகள் ஒரு பெரும் புரட்சியை நிகழ்த்தியவாறுபோல, அப்பரடிகளும் மகேந்திரவர்மன் (கி. பி. 600—638) என்னும் பல்லவப் பேரரசனை மனம் மாறித் திருந்தி உய்யுமாறு செய்து, ஆட்கொண்டு காத்தருளினர்.

புல்லறிவிற் சமணர்க்காப்
பொல்லாங்கு புரிந்தொழுகும்
பல்லவனும் தன்னுடைய
பழவினைப்பா சம்பறிய
அல்லல்ஒழிந் தங்கெய்தி
ஆண்டஅர சினைப்பணிந்து
வல்லமணர் தமைநீத்து
மழவிடையோன் தாளடைந்தான்.

வீடறியாச் சமணர்மொழி
பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை
நகரின்கண் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில்அமண்
பள்ளியொடு பாழிகளும்
கூடஇடித் துக்கொணர்ந்து
குணபரவீச் சரம்எடுத்தான்.

என, அப்பரடிகள் நிகழ்த்தியருளிய அமை திப் புரட்சியின் அரிய விளைவைப் பெரிய புராணம் விளக்கியிருத்தல் காணலாம். சுருங்கக் கூறலுறின், அப்பரும் காந்தி யடிகளும் 'அரசியலை அருளியல் வழிப் படுத்தி நடாத்திய அறவோர்' ஆவர் எனக் குறிப்பிடுதல் பொருந்தும்.

செம்மை நெறி நிற்றல் :

காந்தியடிகள் செம்மைப் பண்புகட்கெல் லாம் சிறந்ததொரு உறைவிடமாகத் திழ்ந்தார்; பல சிறந்த கொள்கைகளை, விரதங்களை உயிரெனப் போற்றிக் கடைப் பிடித்து ஒழுகினர். ஆசாரிய வினோபா பாவே அவர்கள், மராத்திக் கவிதை ஒன்றாக அமைத்துப் பாடியுள்ளபடி, சத் தியம் — அகிம்சை — பிரம்மசரியம் — கள வின்மை—உடைமையின்மை—உழைத்து உண்ணுதல் — நாச்சுவை அடக்குதல் — அஞ்சாமை — சமய சமரச நோக்கு — சுதேசியுணர்வு—தீண்டாமை ஒழிப்பு என் னும் பதினொரு விரதங்களைக், காந்தியடி கள் தாமும் கடைப்பித்துப் பிறருக்கும் அறிவுறுத்தி வந்தார்.

"மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறைஎனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையுள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையும் அன்றே"

என்பன முதலாக வரும் தேவாரப் பாடல் கள், திருநாவுக்கரசர் உலகுக்கு அறிவுறுத் தியருளிய உயரிய அறங்கள் பலவற்றை உணர்த்தும்.

சீர்திருத்தக்காரர் :

காந்தியடிகள் தம்மை முழுக்க முழுக்க ஒரு சீர்திருத்தக்காரர்[3] என்று, கூறிக் கொண்டார். இந்திய மக்கட் சமுதா யத்தில் இருந்த பலபெரும் கறைகளையும்

(2) "Most religious men I have met are politicians in disguise: I, however, who wear the guise of a politician, am at heart a religious man".

—Mahatma Gandhi

(3) "I am a reformer through and through. But my zeal never leads me to the rejection of any of the essential things of Hinduism".

குறைகளையும் அகற்றிக் களைந்தொழிக்க அரும்பாடுபட்டார். திருநாவுக்கரசரும் அத்தகைய சீர்திருத்தக்காரரே என்பது,

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஒங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனுதவர்க் கில்லையே

வேதம் ஓதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி அங்கம்ஓர் ஆறும் உணரிலென்
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே

கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடினும் அரனுக்கு அன்பு இல்லையேல்
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடிவைத் திட்ட மூர்க்கனே டொக்குமே

எனவரும் திருக்குறுந்தொகைப் பாடல்கள் முதலியவற்றல், செவ்விதின் தெளியப் பெறும்.

திருக்குறள் நெறியாளர் :

திருநாவுக்கரசர் தமிழர், 'தமிழ் மொழித் தலைவர்'. காந்தியடிகள் தமிழ் அறிந்தவர்; தென்னுப்பிரிக்காவில் தமிழர்களுடன் கலந்தினிது பழகியவர்; தமிழ் கற்க முயன்றவர்; கவர்ச்சி தரும் இனிய மொழி என்று தமிழைப் பாராட்டியவர். அவர் தமிழ் நூல்களில் தலைசிறந்ததாகிய திருக்குறளின் சிறப்பை யுணர்ந்து போற்றியுள்ளார்.

'கற்க கசடறக் கற்பவை' 'உறங்குவது போலும் சாக்காடு' முதலிய குறள்கள் காந்தியடிகளின் உள்ளத்தினைக் கவர்ந்தன. இவ்வாறே, திருநாவுக்கரசரும் திருக்குறளைச் சிறப்புறப் போற்றியவர்; அதனைத் தெளிவாகப் பயின்றவர்; அதன் சொற்பொருட் சுவைநலங்களில் ஈடுபட்டுத் திளைத்தவர்.

"கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலும் ஆரூ ரரைக்
கையினல் தொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேனே"

"இன்றுளார் நாளை இல்லை எனும்பொருள்
ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர்காள்"

எனவரும் தேவாரப் பாடற் பகுதிகளால், திருநாவுக்கரசர் திருக்குறளை எங்ஙனம் மதித்துப் போற்றியுள்ளனர் என்பது இனிது புலனுகும். அப்பரும் காந்தியடிகளும் ஆகிய இரு பெருஞ் சான்றோர்களின் வாழ்க்கையும், திருக்குறள் கூறும் வாழ்க்கை நெறி விளக்கங்களுக்கு இனியதோர் எடுத்துக்காட்டாகும் என்றுரைத்தல், சிறிதும் மிகையன்று.

உழவாரமும் இராட்டையும் :

காந்தி அடிகளை நினைக்கும்போது முதுமையிலும் அழகு முதிர்ந்து அருள் கனிந்து, நம்மனேரை மயக்கி மகிழ்விக்கும் அவர்தம் இனிய புன்முறுவலும், எளிய உடையும், செந்தண்மை மிக்க சீலமும் பிறவும் நமது மனக்கண் முன்னே நிற்கின்றன. திருநாவுக்கரசரும் இங்ஙனமே திகழ்ந்திருந்ததாகச் சேக்கிழார் பெருமான் விளக்குகின்றார்.

"சிந்தை இடையரு அன்பும்
திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும்
கையுழ வாரப் படையும்..."

எனவரும் பெரிய புராணப் பாடல் ஈண்டு நினைவு கூரற்பாலது. இறைவனிடத்தும் உயிர்களிடத்தும் "இடையருத அன்பு" இவ்விரு பெருமக்களுக்கும் இருந்து வந்தது. இருவரும் ஏறத்தாழ 80 ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்தவராதலின் "திருமேனி தன்னில் அசைவும்" இருவர்க்கும் உண்டு. காந்தியடிகளும் "கந்தை மிகையாம் கருத்து" வாய்ந்தவராய் மிக எளிய ஆடையே அணிந்து வந்தார்.

திருநாவுக்கரசர் தமது திருக்கையில் உழவாரம் ஏந்தியிருந்தார். திருக்கோயில்களிலும் திருவீதிகளிலும் கல்லும் முள்ளும் பெயர்த்தெறிந்து உழவாரத் திருப்பணி புரிந்தார். அதனல் "உடைய அரசு உலகேத்தும் உழவாரப் படையாளி" எனத் திருநாவுக்கரசர் புகழப் பெறுவார். திருநாவுக்கரசரின் அடையாளச் சின்னம் "உழவாரம்" ஆதல்போல, "இராட்டை" காந்தியடிகளின் சின்னமாகத் திகழ்

கின்றது. இராட்டையைப் பற்றிக் காந்தியடிகள் பேசிய பேச்சுக்கும் எழுதிய எழுத்துக்கும் ஓர் அளவில்லை. 'ஒவ்வொரு வீட்டிற்கும் அடுப்பு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது கைராட்டினம்'; 'எளிமை தன்னம்பிக்கை — தன்னடக்கம் — மன்பதைத் தொண்டு முதலிய பண்பு நலங்களுக்கு இராட்டினம் அறிகுறி'; 'இராட்டையினின்று நான் நூற்றெடுக்கும் ஒவ்வோர் இழையிலும் கடவுளைக் காண்கின்றேன். நான் தன்னந்தனியனாக இருக்கும்போது எனக்குக் கெழுதகை நண்பனாகவும், தேற்றரவாளனாகவும் இராட்டை திகழ்கின்றது'. 'இராட்டை ஒழுக்கத்தைக் காக்கின்றது; உணவு அளிக்கின்றது; சோம்பலைப் போக்குகின்றது; மனத்தை ஒருமைப்படுத்துகின்றது' எனக் காந்தியடிகள் ஆங்காங்கே வற்புறுத்தி இருத்தல் காணலாம். இவ்வாற்றால் இருவருமே உழைப்பின் மேன்மையினை (Dignity of Labour) உலகுக்கு உணர்த்தியவராதல் உணரலாம்.

"ஈசர் மிழலை இறையவர்பால்
இமயப் பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம்
திருமா மகனார் ஆதலினால்
காசு வாசி யுடன்பெற்றார்;
கைத்தொண் டாகும் படிமையினால்
வாசி யில்லாக் காசுபடி
பெற்று வந்தார் வாகீசர்"

எனவரும் பெரியபுராணப் பாடலாற் சேக்கிழார் சுவாமிகளும், கைத்தொண்டின் சிறப்பினைக் கட்டுரைத் திருத்தல் காணலாம்.

நாவன்மை :

காந்தியடிகள் பேச்சு வன்மையும் எழுத்துவன்மையும் மிக்குத் திகழ்ந்திருந்தார். அவர் தம் ஆங்கிலமொழி நடைத் திறனை, ஆங்கிலேயரே மிக வியந்து பாராட்டியுள்ளனர். இவ்வாறே திருநாவுக்கரசரும்,

"பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப்
பதிகத்தொடை பாடிய பான்மையினால்
நாவுக்கரசு என்று உலகேழினும் நின்
நாமம் நயப்புற மன்னுக......"

என்று இறைவன் அருளிச் செய்தபடி, நாவன்மையும் பாவன்மையும் வாய்ந்து விளங்கினார்.[4] "சொற்கு உறுதிக்கு அப்பர் எனச்சொல்" என்பது தமிழ்ப் பெருமக்களின் பாராட்டுரை.

அப்பர் என்பதன் அரும்பொருள் :

இஞ்ஞான்று நாம் அனைவரும் காந்தியடிகளை 'நாட்டின் தந்தை' (The Father of the Nation) என்று பாராட்டி வருகின்றோம். அத்தகைய அரும்பெரும் பொருட் குறிப்பிலேயே திருஞான சம்பந்தப் பெருமான் திருநாவுக்கரசரைப் பல இடங்களில் "அப்பர்" எனச் சிறப்பித்துரைத்துக் குறிப்பிடுகின்றார். தமிழ் நாட்டுக்குப் பல்லாற்றானும் 'தந்தை' எனப் போற்றத் தக்கவர் அப்பர்.

"அப்பரே! நீர் வருநாளில் திருவாரூர்
நிகழ்பெருமை வகுத்துரைப்பீர்"
(திருநா. 234)

"திருஞான மாமுனிவர் அரசிருந்த
பூந்துருத்திக்கு
அருகாக எழுந்தருளி எங்குற்றார்
அப்பர்? என..."
(திரு நா. 296)

"அப்பரை இங்கணை யப்பெறும் பேரருள்
உடையோம்யாம்"
(திருஞான 495)

"அப்பரே! வேதவனத்து ஐயர் தம்மை
அபிமுகத்துத் திருவாயில் திறந்து புக்கே
எப்பரிசும் நாம் இறைஞ்ச வேண்டும்! நீரே
இவ்வாயில் திருக்காபபு நீங்கு மாறு
மெய்ப்பொருள்வண் தமிழ்பாடி அருளும்..."
(திருஞான. 581)

"அப்பர்! இந்தப் புனல்நாட்டில் எழுந்தருளி
இருப்பீர்......"
(திருஞான. 617).

---

(4) "Perhaps Gandhi's unsurpassed command of English idiom comes partly from this perfect control over his mind. The hardest thing in our language for a foreigner is our prepositions. I never met an Indian who had mastered them as Gandhi has. I learnt this during the Round Table Conference, when two or three times he asked me to draft some statement for him. I admit that I took a great deal of trouble over this drafting. Mr. Gandhi would glance over my work, and would make just one subtle prepositional change. You might think the change was a trifle. But it did its work. Anyway, it changed my meaning into Mr. Gandhi's meaning..."

—Edward Thompson.

தயாமூல தன்மம் :

அகிம்சையும், மன்னுயிர்த்தொண்டுமே, காந்தியடிகளின் வாழ்க்கையும் குறிக் கோளுமாக இருந்தன. திருநாவுக்கரசரும் 'தொண்டலால் துணையும் இல்லை" என்னும் துணிபினராய், "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் உயரிய குறிக்கோள் உடையவராகத் திகழ்ந்தார். இன்னா செய்யாமை என்னும் "அகிம்சை" காந்தியடிகளின் பேச்சும் மூச்சுமாக இருந்தது. திருநாவுக்கரசர் "தயாமூல தன்மம்" என்னும் தத்துவத்தின் வழி நின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலஞ் செய்யும் தண்ணளி மிக்க செம்மை வாழ்க் கையை நடாத்தினார்.

"குலங்கெடுத்துக் கோள்நீக்க
வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை
இடப்பா லானை
மலங்கெடுத்து மா தீர்த்தம்
ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ்
சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல
தன்மம் என்னும்
தத்துவத்தின் வழிநின்று
தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை
நள்ளாற் றானை
நான் அடியேன் நினைக்கப்பெற்
றுய்ந்த வாறே"

"...தனந்திருத்தும் அவர்திறத்தை
ஒழியப் பாற்றித்
தயாமூல தன்மவழி
எனக்கு நல்கி
மனந்திருத்தும் மழபாடி
வயிரத் தூணே
என்றென்றே நான் அரற்றி
நைகின் றேனே"

சத்தியாக்கிரகம், உண்ணா நோன்பு :

காந்தியடிகளுக்குச் சத்தியாக்கிரகமும் உண்ணா நோன்பும், அவர்தம் வாழ்க்கை யில் மிகச்சிறந்த போர்க்கருவிகள் போல அவ்வப்போது விளங்கிப் பயன்பட்டு நலஞ் செய்தன. அவ்வாறே "பழையாறை வட தளி" என்னும் இடத்தில் திருநாவுக் கரசரும் சத்தியாக்கிரகம், உண்ணாநோன்பு என்னும் இருபெருங்கருவிகளையும் முதன் முதற் புதிது படைத்துக்கொண்டு போராடி, அவற்றின் துணையால் தம் கருத்தும் விருப் பமும் நிறைவேறச் சிறந்ததொரு வெற்றி யினைப் பெற்று மக்களுக்கு நலம் விளைவித் தார். இவ்வுண்மையினை,

"வண்ணங் கண்டு நான்உம்மை
வணங்கி யன்றிப் போகேன்என்று
எண்ணம் முடிக்கும் வாகீசர்
இருந்தார் அமுது செய்யாதே;
அண்ண லாரும் அதுவுணர்ந்தங்
கரசு தம்மைப் பணிவதற்குத்
திண்ண மாக மன்னனுக்குக்
கனவில் அருளிச் செய்கின்றார்."

எனச் சேக்கிழார் சுவாமிகள் சிறந்தெடுத் துரைத்திருத்தல் ஈண்டு மகிழ்ந்துணரற் பாலது. இதன்கண் 'எண்ணம் முடிக்கும்' என்றது, சத்தியாக்கிரகம். 'அமுது செய் யாதே இருந்தார்' என்றது உண்ணா நோன்பு என என உணர்க.

சமய உணர்விற் சமரச நோக்கு :

காந்தியடிகள் தம்மைச் "சநாதன இந்து" என்று பெருமிதத்துடன் கூறிக்கொண் டார். எனினும் பிற சமயங்களையும் மதித்துப் போற்றித் தழீஇ ஒழுகினார்.[5] அவ்வண்ணமே; திருநாவுக்கரசரும் ஒரு சிறந்த சிவநெறிச் சான்றோராக விளங்கு கின்றனரேனும், சமயப்பொறுமை கொண் டிருந்தார். சமயங்கள் தம்முள்ளே உயர்வு தாழ்வு குறித்துப் போரிடுதலை நாவுக்கரசர் விரும்பிற்றிலர்.

"விரிவிலா அறிவி னார்கள்
வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும்
எம்பிராற்கு ஏற்ற தாகும்"

"கூவ லாமை குரைகடல் ஆமையைக்
கூவ லோடொக் குமோகடல் என்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரிது என்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே"

(5) "It would be the height of intolerance and intolerance is a species of violence—to believe that your religion is superior to other religions and that you would be justified in wanting others to change over to your faith."
—Mahatma Gandhi.

தீண்டாமை ஒழிப்பு :

காந்தியடிகள் சாதிவேற்றுமைகளைக் கடிந்து தீண்டாமையினை ஒழிக்கப் பெரிதும் பாடுபட்டார். 'தீண்டாமை என்பது இந்து மதத்திலுள்ள ஒரு கறை; தீண்டாமை சமயத்தின் விளைவன்று; சாத்தானின் சூழ்ச்சியால் விளைந்தது; நான் வீடுபேறு எய்த விழைகின்றேன். நான் மீண்டும் பிறக்க விழைகின்றேன் இல்லை. பிறக்க நேரின், நான் தீண்டாதவனாகப் பிறந்து, அவர்களின் துயரங்களையும் வருத்தங்களையும் அனுபவிப்பதிற் பங்கு கொள்பவனாய், என்னையும் அவர்களையும் இரங்கத்தக்க நிலையினின்றுங் கரையேற்ற முயன்று உழைத்தல் வேண்டும். ஆதலால், மீண்டும் பிறப்புண்டேல் நான் தீண்டாதவனாகப் பிறக்கவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்'[6] என்றெல்லாம் காந்தியடிகள் கூறியிருத்தல் காணலாம். இங்ஙனமே திருநாவுக்கரசரும் சாதி வேற்றுமைகளைக் கடிந்து தீண்டாமையினை ஒழித்தருளும் கருத்துடையராக விளங்கியமை கருதற்பாற்று.

"சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்!
கோத்திரமும் குலமுங்கொண் டென்செய்வீர்?
பாத்தி ரம்சிவம் என்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளும் மாற்பேறரே"

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்,
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்!
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்,
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே?"

பிரார்த்தனை :

காந்தியடிகள் 'உள்ளொளி' அல்லது 'அந்தராத்மா'வின் துணை கொண்டு அதன்வழி ஒழுகி வந்தார். திருநாவுக்கரசரும் 'புந்திவட்டத் திடைப்புக்கு நின்றானையும் பொய் என்பனோ?' எனவும்,

"நான் ஏதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்"

எனவும் அருளிச் செய்திருத்தல் அறிந்தின்புறற்பாலது. வழிபாடு அல்லது பிரார்த்தனை காந்தியடிகட்கு, அவர்தம் வாழ்க்கையில் மிக முதன்மை வாய்ந்ததாக இருந்தது. 'காற்றும் நீரும் இன்றிக்கூட நான் வாழ்வேன்; ஆனால் கடவுளின் நினைவின்றி வாழ என்னால் முடியாது. நீங்கள் என் கண்களைப் பறித்து விடலாம்; என் மூக்கினை அறுத்துவிடலாம். இவைகள் என்னைக் கொன்றுவிடமாட்டா. ஆனால், இறைவனிடத்து எனக்குள்ள நம்பிக்கையை மட்டும் நீங்கள் போக்கிவிடுவீர்களாயின், அப்பொழுதே யான் இறந்தொழிந்துபோவேன். இறைவனுண்மையில் எனக்குள்ள உறுதியானது, இமய மலையைப்போல அசைக்க முடியாததாகவும், அதன் கொடுமுடிகளிலுள்ள பனிப் படலங்களைப்போலத் தூயதாய்த் தெளிவாகவும் உள்ளது'[7] எனக் காந்தியடிகள் கூறியுள்ளனர். அத்தகைய இறையன்பில் திருநாவுக்கரசரும் தலை சிறந்து விளங்கினார் என்று சொல்லவேண்டுவதில்லை. அவர்க்கு இறைவனைப்பற்றிப் "பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே."

'பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந்து உய்வனோ?'

அருளுணர்வும் அஞ்சாமையும் :

காந்தியடிகளின் வாழ்க்கையில் அவர் நிகழ்த்திய இந்திய விடுதலை இயக்கப் போராட்டங்கள் பலவற்றில், அஞ்சி நடுங்

(6) "If I have to be re-born, I should wish to be born an untouchable so that I may share their sorrows, sufferings and the affronts levelled at them, in order that I may endeavour to free myself and them from that miserable Condition."

—Mahatma Gandhi.

(7) "I may live without air and water but not without Him. You may pluck out my eyes, but that will not kill me. You may chop off my nose, but that will not kill me. But blast my belief in god and I am dead. My faith in god is as immovable as the Himalayas and as white as the snow on their peaks."

—Mahatma Gandhi.

கிக் கலங்கவேண்டிய நிலைகள், எண்ணில பல அவர்க்கு ஏற்பட்டன. ஆனால், "கடவுள் உண்மையாக இருக்கின்றார்; உண்மை கடவுளாக விளங்குகின்றது" எனக்கொண்டு உண்மையை உறுதியாகக் கடைப்பிடித்த அடிகள், எந்நிலையிலும் கலக்கம் கொள்ளாமல் இறையருளுணர்வில் திளைத்து நின்று அஞ்சாமையை மேற்கொண்டிருந்தார். அருளுணர்வும் அஞ்சாமையும் அடிகளின் சிறப்பியல்புகளாக இருந்தன. திருநாவுக்கரசரும் இவ்வாறே விளங்கினார்.

"மலையே வந்து வீழினும் மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப் பெறீர்......"

"மண்பா தலம்புக்கு மால்கடல்
மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர்
வீழினும் அஞ்சல்நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம்
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட்
சுடரான் கழலிணையே"

"வானந் துளங்கிலென்? மண்கம்பம்
ஆகிலென்? மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு
மாறிலென்? தண்கடலும்
மீனம் படிலென்? விரிசுடர்
வீழிலென்? வேலைநஞ்சுண்டு
ஊனமொன் றில்லா ஒருவனுக்
காட்பட்ட உத்தமர்க்கே"

மன்னுயிர்த் தொண்டு:

காந்தியடிகள் ஒல்லும் வகையானெல்லாம் பிறர்க்கு அறவினைகளை, ஓவாது செல்லும்வாயெல்லாம் செய்துவரும் சிறப்பியல்புடையவராக விளங்கி வந்தார். 'போயர்போர்' (Boer war) 'சூலு குழப்பம்' (Zulu Rebellion) 'உலக முதற் போர்' முதலியன நிகழ்ந்த காலங்களில், அடிகள் தம் உயிரையும் பொருட்படுத்தாது மருத்துவப் படைப்பொறுப்பினராக இருந்து, புண்பட்ட வீரர்களுக்கு மருத்துவ உதவிகள் செய்தார். பொதுவாக அவரது வாழ்க்கை முழுவதுமே பிறர் நலன் கருதிப் பலதிறப் பணிகளைப் புரிதலிலேயே கழிந்தமை அனைவரும் அறிந்ததொன்று. அத்தகைய சிறந்த தொண்டின் திறனையே நாம் திருநாவுக்கரசரின் வரலாற்றிலும் காண்கின்றோம். அவர் தமது இளம்பருவத்திலேயே மக்கள் அனைவருக்கும் பலதிற உதவிகளைச் செய்யும் தொண்டு நிலையிற்றலை நின்றார் என்பதனை,

"மாசில்மனத் துயர்ஒழிய
மருள்நீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை
கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க
நிதியளித்துக் கருணையினால்
ஆசில்அறச் சாலைகளும்
தண்ணீர்ப்பந் தரும்அமைப்பார்"
"காவளர்த்தும் குளந்தொட்டும்
கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக
நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத
ஈகைவினைத் துறைநின்றார்."

எனச் சேக்கிழார் சுவாமிகள் விளக்கியருள்வர். இம்மட்டோ! திருவீழி மிழலையிற் பெரியதொரு பஞ்சம் நேர்ந்து, அப்பஞ்சத்தால் மக்கள் மிக்கஇடர்ப்பட்டபோது திருநாவுக்கரசர் ஆற்றிய மன்பதைத் தொண்டின் (Social Service) மேன்மையினை,

"அல்லார் கண்டத் தண்டர்பிரான்
அருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
பரமன் அடியார் ஆனார்கள்
எல்லாம் எய்தி உண்கஎன
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார்
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்."

எனப் பெரியபுராணம் சிறப்புற எடுத்து விளக்கியிருக்கும் திறம் உணர்ந்து இன்புறத்தக்கது. இங்ஙனமே திருமறைக்காட்டில் திருக்கதவம் திறப்பித்த செயலும், பழையாறை வடதளியில் மறைக்கப்பட்டிருந்த சிவலிங்கத் திருமேனியினை அரசனது துணைகொண்டு மீட்டு வெளிப்படச் செய்து வழிபட்டதும் பிறவும், திருநாவுக்கரசர் தாம் சென்ற இடங்களிலெல்லாம்

மக்களுக்கு நேர்ந்த இடையூறுகளை அறிந்து, அவைகளைக் களைந்தொழித்தற்கண் காட்டிய பேரார்வத்தினைப் புலப்படுத்துகின்றன.

நாமார்க்கும் குடியல்லோம் :

காந்தியடிகள் 'இந்தியாவை விட்டு வெளியேறுக (Quit India) என முழங்கி ஒரு பெரிய வல்லரசினை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்றார். அப்பரடிகளும் ஒரு பெரிய வல்லரசினை எதிர்த்து நின்று,

> " நாமார்க்கும் குடியல்லோம்
> என்றெடுத்து நான்மறையின்
> கோமானை நதியினுடன்
> குளிர்மதிவாழ் சடையானைத்
> தேமாலைச் செந்தமிழின்
> செழுந்திருத்தாண் டகம்பாடி
> ஆமாறு நீர் அழைக்கும்
> அடைவிலமென் றருள்செய்தார் "

ஆங்கில ஆட்சியும் மொழியும் நாகரிகமும் பழக்க வழக்க ஒழுக்கங்களும் பிறவும், நம்மிடையில் அளவிறப்பக் கலந்து இந்திய நாட்டைக் குலைத்து வந்தபொழுது, அவற்றை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டார் காந்தியடிகள். அவ்வாறே நம் அப்பர் பெருமானும், தமிழகத்தில் வேற்றவர் கொள்கையும் மொழியும் ஆட்சியும் தலைமையும் பிறவும் புகுந்து கலந்து, தமிழ் மக்களுக்குப் பெருங்கேடு சூழ்ந்துவந்த நிலையில், அவற்றை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்றார். 'தீமையை வெறு ; ஆனால் தீயவனை வெறுக்காதே' (Hate the sin, but not the sinner) என்பது காந்தி அடிகளின் கோட்பாடு. ஆதலின், காந்தியடிகள் ஆங்கில ஆட்சியை வெறுத்தாராயினும், ஆங்கிலேயர்களை வெறுத்திலர். திருநாவுக்கரசரும் இவ்வண்ணமே தம் காலத்தில் தமிழகத்திற் சிலர் கடைப்பிடித்துவந்த தீய கொள்கைகளையும் செயல்களையுமே கடிந்துரைத்தனர்.

அயற் சமயத்தவர்களாற் கற்றூணைப் பூட்டிக் கடலிற் பாய்ச்சப் பெற்ற திருநாவுக்கரசர், இறையருளாற் கடலினின்று கரையேறி யுய்ந்து திருப்பாதிரிப்புலியூர் திருமாணிகுழி திருத்தினைநகர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு, திருவதிகை சென்றடைந்தபோது, அவரை வரவேற்று மகிழ்ந்த அந்நகர மக்கள், அவர்தம் 'தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்' பிறவும் கண்டு, 'இத்தகைய ஒருபெரும் அருட் சான்றோர்க்கும்கூடத் தீங்கு விளைவிக்கச் சிலருக்கு எவ்வாறுதான் மனத்தில் செற்றம் நிகழ்ந்ததோ ?' என்றெண்ணி உள்ளம் வெதும்பி நின்றனர்.

> கண்டார்கள் கைதலை மேல்குவித்து
> " இந்தக் கருணை கண்டால்
> மிண்டாய செய்கை அமண் கையர்
> தீங்கு விளைக்கச் செற்றம்
> உண்டாயின வண்ணம் எவ்வண்ணம்?"
> என்று உரைப்பார்கள் ; பின்னும்
> தொண்டாண்டு கொண்ட பிரானைத்
> தொழுது துதித்தனரே

அம்முறையில், தம்மை நோக்கி இலண்டன் டெர்ரி என்பவர் 'காந்தி வெள்ளையர்களாகிய நம்மை மிகவும் வெறுக்கின்றனரா? என ஐயுற்று வினவியபோது, 'காந்தியடிகள் யாரையேனும் தனியாகவோ கூட்டாகவோ வெறுக்க இயலும்' என்ற எண்ணம் எப்படித்தான் சிலருக்கு உண்டாகின்றதோ? அவர்தம் இயற்கையை எத்துணை யளவுக்கு மக்கள் மிகமிகப் பிறழ உணர்ந்து கொண்டுள்ளனர்'[8] எனக் கிளாரே ஷெரிடான் என்னும் அறிஞர் ஒருவர் உள்ளம் மறுகி யுரைத்திருத்தல், இங்கு நாம் உணர்ந்து இன்புறற்பாலது.

தாழ்வெனும் தன்மை :

திருநாவுக்கரசரும் காந்தியடிகளும் 'பணியுமாம் என்றும் பெருமை' என்னும் திருமொழிக்கு இலக்கியமாக வாழ்ந்தனர். 'தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது' என்பது

(8) "I remember my surprise when Lord Londonderry asked me if 'Gandhi hates us very much.' The idea that 'Gandhi could **HATE**, either individually or collectively, betrayed such a deep misunderstanding of his nature"

—Clare Sheridan

சிவஞானசித்தியார். இத் தாழ்வெனும் தன்மை இவ்விரு பெருஞ் சான்றோர்கள் மாட்டும் நிரம்பியிருந்தது. பிறரெல்லாம் தம்மை 'மகாத்மா' எனப் புகழ்ந்து வழுத்தி மகிழ்ந்து வந்தனராயினும், காந்தியடிகள் தம்மை "அல்பாத்மா" என்றே குறிப்பிட்டுக் கொள்ளும் வழக்கம் உடையவராக இருந்தார். தம்முடைய குற்றங்களை வெளிப்படையாகக் கூறி ஒப்புக்கொள்ள அவர் என்றும் தயங்கியதில்லை[9]. திருநாவுக்கரசரும் அத்தகையவர் என்பதனைப் பின்வரும் பாடல்கள் உணர்த்தும்.

"குலம்பொல்லேன் குணம்பொல்லேன்
குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன்
கோலம் ஆய
நலம்பொல்லேன் நான்பொல்லேன்
ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன்
நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா
தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவே மிகப்பெரிதும்
பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே
ஈயமாட்டேன்
என்செய்வான் தோன்றினேன்
ஏழை யேனே"

"புழுவுக் குங்குணம் நான்குளனக் கும்அதே
புழுவுக்கு இங்கெனக் குள்ளபொல்லாங்கில்லை
புழுவி னும்கடை யேன்புனி தன்தமர்
குழுவி னுக்கெவ் விடத்தேன்சென்று கூடவே"

பொறிவாயில் ஐந்தவித்தோர் :

காந்தியடிகள் பெரிதும் முயன்று படிப்படியே பொறிபுலன்களை வென்று அடக்கிக் கைவந்தவர். 'பிரமசரியம்' என்பதற்கு அவர் கொண்ட பொருள்விளக்கம் மிகவும் விழுமியது. அவர்தம் கருத்தின்படி 'பிரமசரியம்' என்பதற்கு 'இறைவனுடன் இயைந்து வாழ்தல்' என்பது பொருள். ஒருவகையில், இதனையே

"உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதி என்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட்டேனே"

என அப்பரடிகள் அருளிச் செய்திருத்தல் காணலாம். காந்தியடிகள் தமது தேச பக்திக் கனலால், எல்லா வகையான மனித ஆசைகளையும் மாசுகளையும் சுட்டெரித்துத் தூயவராகத் திகழ்ந்தார். அப்பர் பெருமானும் அங்ஙனமே விளங்கினர் என்பதனை,

"செம்பொன்னும் நவமணியும்
சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில்
உருள்பருக்கை யுடன்ஒக்க
எம்பெருமான் வாகீசர்
உழவாரத் தினில்ஏந்தி
வம்பலர்மென் பூங்கமல
வாவியினிற் புகஎறிந்தார்"

"இத்தன்மை அரம்பையர்கள்
எவ்விதமும் செயல்புரிய
அத்தனார் திருவடிக்கீழ்
நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மை உணர்வுடைய
விழுத்தவத்து மேலோர்தாம்
சித்தநிலை திரியாது
செய்பணியின் தலைநின்றார்"

எனவரும் பெரிய புராணப் பாடல்கள் கொண்டு தெளியலாம். இவ்வாற்றாற் புலனடக்கம் கைவந்த பெருந்தகைமையாலும், இருவர்தம் வாழ்க்கையும் பண்பும் ஒத்திருத்தல் உணர்ந்து போற்றற்பாலது. ஆதலால் இருவரையும் "பொறிவாயில் ஐந்தவித்தோர்" எனக் கொள்ளுதல் பெரிதும் பொருந்தும்.

அப்பாலும் அடிச்சார்ந்தார் :

இங்ஙனம், அப்பரடிகளுக்கும் காந்தியடிகளுக்கும் இடையே, எத்துணையோ பலதிறப் பண்பொப்புமைகளைக் காணலாம். உவமையெல்லாம் ஒருபுடை யுவமையே. காந்தியடிகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து 'மனிதரில் தலையாய மனிதர்' என விளங்கியவர். திருநாவுக்கரசரோ மனிதரில் தலையான மனிதராக

(9) "I am painfully Conscious of my imperfections and therein lies all the strength I possess, because it is a rare thing for a man to know his own limitations."

வயங்கித் தெய்விக நிலையும் பெற்றுச் சிறந்திருந்தவர். காந்தியடிகள் இறைவன் பால் பேரன்பு கொண்டிருந்த பெரியவ ராயினும், திருநாவுக்கரசர்போல இறை வனைத் தம் கண்ணாரை நேரே கண்டு இன் புறும் பெரும்பேறு பெற்றவர் அல்லர். திருநாவுக்கரசர் இறையருளாற்றலின் துணைகொண்டு நிகழ்த்திய பல அற்புதச் செயல்களைப் போலக் காந்தியடிகள் ஏதும் செய்திற்றிலர். காந்தியடிகளின் இந்திய விடுதலை இயக்கம் ஒரு குறித்த கால எல்லைக்கு மட்டுமே உட்பட்டது. ஆனால், திருநாவுக்கரசரின் திருநெறி அருளியக் கமோ, தமிழ்நாடும் மொழியும் கலை நாகரி கங்களும் பிறவும் உள்ளளவும் என் றென்றுமே நிலைபேறுற்று நின்று நிலவும் பெருஞ் சிறப்புடையது. அப்பரடிகளின் அமிழ்த மொழிகள் மிகச் சிறந்துயர்ந்த கவிதைகளாக, கலைப்பெருங் களஞ்சிய மாக, அழியாப் பெருஞ்செல்வ வைப்புக் களாக விளங்கிவரும் மாட்சிமை வாய்ந் தவை ஆகும். இங்ஙனம் ஒரு சில வேற்றுமைகளும் இருவரிடையில் உண்டு.

எனினும், காந்தியடிகள் உலக மக்கள் அனைவராலும் ஒருங்கே புகழ்ந்து போற்றப் படும் சான்றோராகத் திகழ்தலை, எவரும் மறுத்தல் இயலாது. இவ்விருபதாம் நூற் றுண்டில் தோன்றியருளி, எத்துணையோ பல செயற்கருஞ் செயல்களைச் செய்து, சத்தியம் அகிம்சை முதலிய பல உயர்ந்த கொள்கைகளைக் கோடிக்கணக்கான மக்களிடையே பரவச் செய்து, தாமும் தம் தூய வாழ்க்கையில் அவற்றைக் கடைப் பிடித்து விளக்கிக் காட்டியருளிய உத் தமர் ஆகிய காந்தியடிகளின் அருமை பெருமைகள், அளவிடற்பாலன அல்ல.

முடிவுரை:

தமிழ் நாட்டுக்கு அப்பாற் பிறநாடு களிலும் நாயன்மார்களின் காலத்துக்கு முன்னும் பின்னும், தோன்றியருளும் நல் லோர் எல்லோரும்கூட "அப்பாலும் அடிச் சார்ந்தார்" எனத் தக்க சிவநெறிச் செல் வர்களே ஆவர் என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் துணிபு.

"மூவேந்தர் தமிழ்வழங்கும்
நாட்டுக் கப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த
முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத்
தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து
முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமேல்
அடம்பு தும்பை
புதியமதி நதிஇதழி
பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியான்
அடிச்சேர்ந் தாரும்
செப்பியஅப் பாலும்அடிச்
சார்ந்தார் தாமே"

—பெரியபுராணம்.

என இவ்வுண்மையினையே சேக்கிழார் பெருமான் சிறப்புற விளக்கியருளியுள் ளார். ஆதலின் "அப்பாலும் அடிச் சார்ந்த" அருளாளர்களுள் ஒருவராகக் காந்தியடிகளையும், நாம் நயந்தினிது போற்றி மகிழ்தல் பொருந்தும். அப்பரும் காந்தியடிகளும் ஆகிய ஆன்றோர் இரு வரையும், நம்மனோர் அனைவரும் நன் கினிது போற்றிப் பின்பற்றி, அறவாழ்வு வாழ்ந்து, இறையருட்பேறு எய்தி உய்ய முயலுவோமாக!

[இலங்கையில், திருஞான சம்பந்தர் தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணமலை என்னும் சிவத் தலத்தில், ஸ்ரீமுத்துக் குமாரசுவாமி கோயிலில், அருள்நெறி இளைஞர் மன்றத்தின் சார்பில், நகராட் சித் தலைவர் திரு. சி. சிவானந்தம், J.P., U.M. அவர் கள் தலைமையில், "தேசம் உய்ய வந்தவர்" என்னும் தலைப்பில், நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவியது. (6—6—68.)]

—ஆசிரியர்.

அபிராமி அந்தாதி

(மூலமும் உரையும்)

காப்பு

தார்அமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே! உலகு ஏழும்பெற்ற
சீர்அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே,
கார் அமர் மேனிக் கணபதியே! நிற்கக் கட்டுரையே.

(பொழிப்புரை) தலையிற் கண்ணியும், மார்பில் தாரும் ஆகப் பொருந்துகின்ற கொன்றை மலரையும், சண்பகப் பூமாலையையும் சூடியருளுகின்ற, தில்லை என்னும் தலத்தையுடைய சிவபிரானுக்கும், அவர்தம் இடப்பாகத்தில் வீற்றிருக்கின்ற உமாதேவியார்க்கும் புதல்வரே! மேகம் போலும் நிறம் அமைந்த திருமேனியையுடைய விநாயகரே! ஏழுலகங்களையும் பெருமலே பெற்றுக் காத்தருளும் சிறப்பினையுடைய திருக்கடவூர் அபிராமி அம்மையின்மீது, பாடப்பெறும் அந்தாதி என்னும் இந்நூலானது, எக்காலத்தும் என் உள்ளத்தின்கண் நிலைபெற்று நிற்கும்படி வாழ்த்தியருள்வீராக.

(குறிப்புரை) தலையிற் சூடும் மாலை கண்ணி. மார்பிற் சூடும்மாலை தார். சிவபிரானுக்குக் கண்ணியும் தாரும் ஆகத் திகழ்வது கொன்றை. ''கண்ணி கார் நறும் கொன்றை. காமர் வண்ண மார்பில் தாரும் கொன்றை'' என்பது புறநானூறு. சிவபிரான் பிரணவப் பொருளாதலை உணர்த்தும் அடையாளம் கொன்றை மலர். உமையம்மைக்கு உரியது சண்பகமாலை. 'சண்பகவல்லி' என்னும் பெயரும் காண்க. எல்லாத் தலங்களிலும் சிறந்ததாகலின், தில்லையைக் கிளந்தோதினர். அபிராமி என்பது பேரழகுடையவள் என்னும் பொருளது. விநாயகரின் நிறம் செம்மை என்றும், வெண்மை என்றுமே நூல்கள் கூறும். ஆயினும், யானைமுகம் உடைய இயல்பு கருதி, இங்குப் பொதுமையிற் 'கார் அமர் மேனிக் கணபதி' என்றார். 'மேனி' மினுமினுப் புடையது. திருக்கடவூரில் உள்ள விநாயகருக்குக் கள்ளவாரணப் பிள்ளையார் என்பது பெயர்.

நூல்

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்கும தோயம்—என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி, என்தன் விழுத்துணையே. (1)

(பொழிப்புரை) காலையில் தோன்றுகின்ற சிவந்த கதிர்களையுடைய இளஞாயிறும், உயர்ந்ததாகிய மஞ்சாடி மலரும், அறிவின் மிக்கோர்கள் போற்றுகின்ற மாணிக்க

மணியும், மாதுளம் பூவும், மின்னற் கொடியும், மெல்லிய மணம் கமழ்கின்ற குங்குமமும் ஆகியவற்றை உவமையாக நூல்கள் கூறுகின்றபடி, சிவந்த திருமேனியையுடைய செந்தாமரை மலரில் வாழும் திருமகள், போற்றுகின்ற அபிராமி அம்மையே எனக்குச் சிறந்த பெருந்துணையாவாள்.

(குறிப்புரை) அபிராமியம்மையின் சிவந்த திருமேனிக்கு 'உதிக்கின்ற செங்கதிர்' முதலியன, உவமைகளாக வந்தன. உற்றார் உறவினர் அனைவரும் கைவிட்ட இடத்தும், ஆதரித்துக் காக்கும் அருளுடையவள் ஆதலின் 'அபிராமியே என்றன் விழுத்துணை' என்றார். கமலம்–தாமரை. கமலை–திருமகள். மென்கடி-மெல்லிய நறுமணம்.

துணையும், தொழும்தெய்வமும், பெற்ற தாயும், சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும், பனிமலர்ப்பூங்
கணையும், கருப்புச் சிலையும், மென் பாசாங்குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி, ஆவது அறிந்தனமே. (2)

(பொழிப்புரை) குளிர்ச்சி பொருந்திய மலர்க்கணைகளும், கரும்பு வில்லும், மெல்லிய பாசமும், அங்குசமும், திருக்கைகளிற் பொருந்தப் பெற்ற திரிபுர சுந்தரியாகிய அபிராமியம்மையே! நமக்கு உயிர்த்துணையும், வழிபடு கடவுளும், நம்மைப் பெற்ற நற்றாயும், வேதங்களின் கிளைகளும், அவற்றின் இளந்தளிர்களும், அவற்றின் நிலைபெற்ற அடிவேரும் ஆக விளங்குதலை, யாம் திருவருளால் அறிந்து கொண்டோம்.

(குறிப்புரை) அம்பிகை தன் கைகளில் மலர் அம்புகளும், கரும்பு வில்லும், பாசம் அங்குசம் ஆகியனவும் கொண்டு விளங்குகின்றாள். திரிபுரைச் சக்கரத்துக்கு அதிதேவதையாதலின், அபிராமியைத் திரிபுரசுந்தரி என்றார். பணை-கிளை, வேத சாகைகள்; கொழுந்து-தளிர், உபநிடதங்கள்; வேர்-அடிவேர், பிரணவம் (ஓங்காரம்). 'கரும்பு வில்' என்பது 'கருப்பு வில்' என வந்தது; சிலம்பு+அதிகாரம்-சிலப்பதிகாரம் என வருதல் போல.

அறிந்தேன் எவரும் அறியா மறையை; அறிந்துகொண்டு,
செறிந்தேன், உனது திருவடிக்கே; திருவே! வெருவிப்
பிறிந்தேன், நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்; நரகுக்கு உறவாய மனிதரையே (3)

(பொழிப்புரை) அருட்செல்வியாகிய அபிராமியே! வேறு யாரும் அறிய இயலாத மறையின் பொருளை நின் அருளால் யான் அறிந்தேன்; அறிந்துகொண்டு, நின் அன்பர்களின் பெருமையை நினையாத தீவினையையுடைய மனத்தினால், நரகக் குழிக்கு உறவினராய் அதன்கண் தலைகீழாக விழுகின்ற இழிந்த மனிதர்களை விட்டுப் பிரிந்தேன்; பிறவிப் பிணிக்கு அஞ்சி நின்னுடைய திருவடிகளிலேயே அடைக்கலம் புகுந்தேன்.

(குறிப்புரை) அடியவர்க்கு எல்லாச் சிறப்பும் செல்வமும் பெருகச் செய்தலின் 'திரு' என்றார். மறை-வேதம்; பிறர் அறியலாகாத நுண்பொருள். 'அம்மையின் திருவடியிற் புகலடைதலே எல்லா நலமும் பயக்கும்' என்னும் உண்மையை உணரப் பெற்றதனையே 'அறிந்தேன் எவரும் அறியா மறையை' என்றார். செறிதல்-அடைக்கலம் புகுதல். மறிந்து விழுதல்-தலைகீழாக மாறி விழுதல். அம்பிகையின் அடியார்களது பெருமையினை நெஞ்சம் எண்ணாமைக்குக் காரணம் தீவினையேயாதலின் 'கரும நெஞ்சம்' என்றார். அடியார்களை உறவு கொள்ளாத மனிதர்களை, அவர்கள் அடையும் துன்பமும் இழிவும் குறித்து 'நரகுக்கு உறவாய மனிதர்' என்றார். தீவினையாளரைக் காண்டலும் கருதுதலுமே பெருந்தீங்கு விளைக்குமாதலின், அவர்களுக்கு



வாரணசி என்னும் காசியம் பதியில், ஸ்ரீ காசி விசுவநாதப் பெருமானுக்கு
நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்களால் செய்விக்கப்பெறும்
அர்த்தசாமப் பூசையின் அலங்காரக் காட்சி

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS

அஞ்சி விலகி யுய்ந்தேன் என்பார், 'வெருவிப் பிறிந்தேன்' என்றார். எதுகை பற்றி இடையின ரகரம், வல்லினமாயிற்று.

மனிதரும் தேவரும், மாயா முனிவரும் வந்து, சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும், என் புந்தி எந்நாளும் பொருந்துகவே. (4)

(பொழிப்புரை) மண்ணுலகத்து மனிதர்களும், விண்ணுலகத்துத் தேவர்களும், அழிவில்லாத முனிவர் பெருமக்களும், புகலடைந்து தலையைத் தாழ்த்தி வணங்குகின்ற சிவந்த திருவடிகளையுடைய அழகின் மிக்க அபிராமி அம்மையே! கொன்றை மாலையை அணிந்த நீண்ட சடையின்மீது குளிர்ச்சி பொருந்திய சந்திரனையும், பாம்பினையும், கங்கை நதியையும், தாங்கியருள்கின்ற சிவபெருமான் ஆகிய நின்கணவரும், நீயும், என்னுடைய உள்ளத்தில் எக்காலத்தும் சேர்ந்து எழுந்தருளி வீற்றிருப்பீர்களாக!

(குறிப்புரை) இறைவனையும் இறைவியையும் தமது உள்ளம் என்றும் இடையருது நினைந்து வழிபடுதல் வேண்டும் என்பார் 'புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துக' என்றார். அம்பிகையின் சிறப்பினைப் புலப்படுத்த 'மனிதரும் தேவரும் முனிவரும் வந்து சென்னி குனிதரும் சேவடிக் கோமளம்' என்றார். சிவபெருமானைச் சடையிற் கொன்றையும் திங்களும் பாம்பும் பகீரதியும் சூடிய புனிதர் எனப்புகழ்ந்தார். சென்னி-தலை. குனிதல்-வளைதல். கோமளம்-அழகு, மென்மை. பகீரதனால் நிலத்திற்குக் கொணரப் பெற்றதனால் கங்கைக்குப் 'பகீரதி' எனப்பெயர் அமைந்தது. புனிதர்-தூயவர், சிவபிரான். புந்தி-புத்தி, உள்ளம்.

பொருந்திய முப்புரை, செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி, வார்சடையோன்
அருந்திய நஞ்சுஅமுதாக்கிய அம்பிகை, அம்புயமேல்
திருந்திய சுந்தரி, அந்தரி பாதம், என் சென்னியதே. (5)

(பொழிப்புரை) முப்புரங்களிலும் பொருந்தி நிற்கும் தலைவியும், சிமிழை உவமையாகச் சொல்லத்தக்க நெருங்கிய முலைகளின் சுமையால் வருந்துகின்ற கொடிபோலும் இடையினையுடைய மனோன்மணியும், நீண்ட சடையினை யுடைய சிவபெருமான் உண்டருளிய கொடிய நஞ்சினை இனிய அமுதமாகச் செய்வித்த அம்பிகையும், சுந்தரியும், அந்தரியும் ஆகிய அபிராமியம்மையினது, செந்தாமரை மலரினும் மேலாகத் திருத்த முற்றுத் திகழ்கின்ற திருவடி, எளியேனது தலையின்கண் உள்ளது.

(குறிப்புரை) உயிர்களின் தூலம் சூக்குமம் காரணம் என்னும் மூவகை உடம்பு களிலும் நிறைந்திருப்பவள் ஆதலும், இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகளையும் இயக்கி நிற்பவள் ஆதலும், மும்மூர்த்திகட்கும் மூத்தவள் ஆதலும், மேல் கீழ் நடு என்னும் மூவகை யுலகங்கட்கும் தலைவியாதலும், பிறவும் கருதி ''முப்புரை'' என்றார். செப்பு-சிமிழ். உரை செய்தல்-உவமை கூறுதல். வஞ்சி-கொடி. மருங்குல்-இடை. மனோன்மணி-மனத்தை ஞானம் ஆகிய மேல்நிலைக்கு உயர்த்துபவள். கணவனின் வாழ்க்கை நலன் மனைவியின் கற்புத்திறனால் அமைவதாதலின் ''வார்சடையோன் அருந்திய நஞ்சு அமுது ஆக்கிய அம்பிகை'' என்று சிறப்பித்தார். அம்புயம்-தாமரை. சுந்தரி-அழகின் மிக்கவள். அந்தரி-ஞானப் பெருவெளியாகிய அந்தரத்தில் விளங்குபவள்.

சென்னியது உன் பொன்திருவடித் தாமரை, சிந்தையுள்ளே
மன்னியதுஉன் திரு மந்திரம், சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடியாருடன் கூடி, முறைமுறையே
பன்னியது, என்றும் உன்தன் பரமஆகம பத்ததியே. (6)

(பொழிப்புரை) செந்நிறம் பொருந்திய திருமேனியை உடைய அபிராமி அம்மையே! உன்னுடைய திருவடியாகிய பொற்றாமரை மலர் என் தலையில் பதிந்துள்ளது; உன்னுடைய சிறப்புமிக்க மந்திரமானது என் மனத்தினுள் நிலைபெற்றிருக்கின்றது; உனது மேலான சாக்த ஆகம நெறியானது, ஆர்வம் மிகுந்த நின் அடியவர்களுடன் கலந்து முறைப்படியே பலகாலும் என்னுற் பயிலப் பெற்றது.

(குறிப்புரை) அம்மையின் திருவடிகளைப் பணிந்து அவளது திருவடிமலர்களைத் தலையிற் சூடிக்கொள்வதும், அவளது சிறப்புமிக்க மந்திரத்தினை மனத்தில் இடைவிடாமற் கணித்து வழிபடுவதும், அம்பிகையின் அருள் நூல்களைத் தக்க அடியவர்களுடன் பலகாற்கூடி ஆராய்ந்து பயில்வதும், அவளது அருள்பெற விழையும் அன்பர் அனைவரும் செய்யத்தக்க செயல்கள் என்பதனை, இப்பாடல் உணர்த்துகின்றது. மனம் மொழி மெய் என்னும் முக்கரணங்களாலும் தாம் புரியும் வழிபாட்டின் திறனை, ஆசிரியர் இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். சென்னி-தலை. சிந்துரம்-செந்நிறம். பன்னியது-பலகாற் பயின்றது. பரம-மேலான. ஆகமம்-அருள்நூல். பத்ததி-ஒழுங்குமுறை, நூல்.

ததியுறும் மத்தில் சுழலும்என் ஆவி, தளர்வுஇலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய்; கமலாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துரானன சுந்தரியே! (7)

(பொழிப்புரை) தாமரை மலரைக் கோயிலாகக் கொண்ட பிரமனும், சந்திரன் பொருந்திய சடையை யுடைய கணவர் ஆகிய சிவபெருமானும், திருமாலும், பணிந்து எக்காலத்தும் துதித்தலைச் செய்கின்ற சிவந்த திருவடிகளை யுடையவளே! சிந்துரம் ஆகிய திலகம் அணிந்த முகத்தையுடைய அபிராமி அம்மையே! தயிர் கடைவதற்காகப் பொருந்திய மத்தைப் போலச் சுழலுகின்ற என்னுடைய உயிரானது, தளர்ச்சியில்லாததாகிய ஒப்பற்ற நிலையை அடையும் வண்ணம், நீ திருவுளம் கொண்டருள்வாயாக!

(குறிப்புரை) மும்மூர்த்திகளும் துதித்து வணங்கும் அம்பிகையின் சிறப்புக் கூறியபடி. பிறப்பிறப்புக்களிற்பட்டுக் கறங்கும் சகடமும் போல மாறி மாறிச் சுழன்று உழன்று இடர்ப்பட்டு வருதலைத் "ததியுறும் மத்திற் சுழலும் என் ஆவி" என்றார். "மத்துறு தயிரே போல மறுகும்என் உள்ளம் தானும்" என நாவுக்கரசரும், "மத்துறு தண்டயிரிற் புலன் தீக்கதுவக் கலங்கி" என மணிவாசகரும் கூறுதல் காணலாம். கமல+ஆலயன்-பிரமன், வேணி-சடை, மகிழ்நன்-கணவன். ஆனனம்-முகம்.

சுந்தரி, எந்தை துணைவி, என் பாசத் தொடரையெல்லாம்
வந்துஅரி சிந்துர வண்ணத்தினுள், மகிடன்தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கம்தரி கைத்தலத்தாள், மலர்த்தாள் என் கருத்தனவே. (8)

(பொழிப்புரை) எனது மல மாயை கன்மங்கள் ஆகிய பாசத்தளைகளை யெல்லாம், தானே அருளாற் போந்து அழிக்கின்ற செந்நிறத்தை யுடையவளும்; மகிடன் என்னும் அசுரனின் தலையின்மேல் நிற்கும் அந்தரியும்; நீலநிறமுடையவளும்; அழிவு இல்லாத கன்னித்தன்மை பெற்றவளும்; வேதங்களில் வல்ல பிரமனது தலையைத் தாங்கியுள்ள

திருக்கையை யுடையவளும், சுந்தரியும், எம் தந்தையாகிய சிவபெருமானின் துணைவியும், ஆகிய அபிராமி யம்மையின் மலர்போன்ற திருவடிகள், என்னுடைய உள்ளத்திலும் கண்ணிலும் நிலைபெற்றிருப்பனவாகும்.

(குறிப்புரை) அம்பிகை மகிடாசுரனை அழித்த வீரச் செயலைப் புகழ்ந்தார். மகிடனை அழித்து உலகுக்கு நலம் செய்தவாறுபோல, என் பாசத் தொடரை யெல்லாம் அறுத்து எனக்கு அருள்புரிந்தாள் எனப் பாராட்டிப் போற்றினர். வந்து+அரி. அரித்தல்-அழித்தல். கம்+தரி–தலையைத் தாங்குகின்ற. அம்பிகையின் திருவடிகளை யான் என் மனத்தில் இடையறாது நினைத்துக் கண்ணிற்கண்டு தொழுகின்றேன் என்பார் "மலர்த் தாள் என் கருத்தன, கண்ணன" என்றார். கருத்து-உள்ளம்.

கருத்தன, எந்தைதன் கண்ணன, வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால் அழும்பிள்ளைக்கு நல்கின—பேர் அருள்கூர்
திருத்தன பாரமும், ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்
முருத்தன மூரலும், நீயும், அம்மே! வந்துஎன் முன்நிற்கவே (9)

(பொழிப்புரை) அபிராமி அம்மையே! எம் தந்தை ஆகிய சிவபெருமானின் கருத்திலும் கண்ணிலும் இருப்பனவும், அழகிய பொன்மலைபோலப் பெரிதாகத் திகழ்வனவும், அழுகின்ற பிள்ளை ஆகிய ஞானசம்பந்தர்க்கு ஞானப்பாலைக் கொடுத்தனவும், ஆகிய எல்லையற்ற அருள்மிகுந்த அழகிய இரண்டு தனபாரங்களும், அவற்றில் அசையும் முத்து மாலையும், சிவந்த கையில் உள்ள கரும்பு வில்லும், மலர் அம்புகளும், மயிலிறகின் அடிக்குருத்துப் போன்ற பற்களும் தோன்றுகின்ற வடிவத்துடன், நீயும் நின்கணவர் ஆகிய சிவபெருமானும் எழுந்தருளிப் போந்து, என்முன் காட்சி தருவீராக!

(குறிப்புரை) எனக்குக் காட்சி தந்தருள்க என்பார் "வந்து என் முன் நிற்க" என்றார். 'புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியம்' ஆதலின் "எந்தைதன் கருத்தன கண்ணன" என்றார். திருஞானசம்பந்தர்க்கு ஞானப்பால் அளித்துச் செய்த அருட்டிறனை 'பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர் திருத்தனபாரம்" எனப் புகழ்ந்தார். தமக்கும் அது போன்று அருள்புரிதல் வேண்டும் என்பது கருத்து. 'முகுந்து' என்பது எதுகையின் பொருட்டு 'முருத்து' என வலித்தது. அன-அன்ன, போன்ற. மூரல்-பல்.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை;
என்றும் வணங்குவது உன்மலர்த் தாள்; எழுதா மறையின்
ஒன்றும் அரும்பொருளே, அருளே, உமையே, இமயத்து
அன்றும் பிறந்தவளே, அழியாமுத்தி ஆனந்தமே. (10)

(பொழிப்புரை) எழுதப்படாதனவாகிய வேதங்களின் முடிவில் பொருந்தும் அருமைமிக்க நுண்பொருளே! அருளின் வடிவமே! உமையம்மையே! இமயமலையில் அக்காலத்தில் தோன்றியருளியவளே! அழிவு இல்லாத வீடுபேற்று இன்பத்தைத் தருபவளே! யான் நின்றாலும், இருந்தாலும் கிடந்தாலும் நினைப்பது உன்னையே; எக்காலத்தும் வழிபடுவது, உன்னுடைய மலர்போன்ற திருவடிகளையே. (ஆதலின் என்னை நீ கைவிடாது காத்தருளால் வேண்டும்).

(குறிப்புரை) நாம் இறைவியையே எந்த நிலையிலும் எக்காலத்திலும் இடையறாது நினைந்து வழிபடுதல் வேண்டும் என்பது கருத்து. எந்நிலையில் நின்றாலும், எக்கோலம் கொண்டாலும், மன்னியசீர்த்தாள் மறவாமை பொருள் ஆதலின், "நின்றும் இருந்தும் கிடந்தும் நினைப்பது உன்னை" என்றார். அன்று-பண்டைக்காலம். உம்மை அசைநிலை. அம்பிகை மலையரசனின் மகளாகப் பிறந்தவள் என்பது வரலாறு. ஆதலின் 'இமயத்து அன்றும் பிறந்தவளே' என்றார். ஏமாவதி, ஏமாமாலினி என அம்பிகைக்குப் பெயர்கள் வழங்குதல் காணலாம். (தொடரும்) —ஆசிரியர்.

இந்தியப் பெருந் தத்துவ ஞானிகள்

முன்னுரை :

நமது இந்திய நாடு பழமையும் பெருமையும் நிறைந்தது; நாகரிகமும் கலைவளமும் பண்பாடும் செறிந்தது; ஞானத்திலும் பரமோனத்திலும் சிறந்தது. பிற துறைகளில் எவ்வாறு இருப்பினும், சமய அனுபவத்திலும், தத்துவ வுணர்விலும் தலை சிறந்து விளங்கி, ஏனைய பிற நாடுகளுக்கெல்லாம் இனிய நல்ல வழிகாட்டியாகத் திகழ்தற்குரியது, நமது இந்திய நாடேயாகும்.* தொன்றுதொட்டே நமது இந்தியப் பெருநாட்டில், சமயப் பெருஞ் சான்றோர்களும், தத்துவ ஞானிகளும் மிகப்பலர், வாழையடி வாழையாகத் தோன்றி வந்துள்ளனர். அவர்களுள், மிகவும் முதன்மை வாய்ந்தொளிரும் தத்துவ ஞானிகள் ஒரு சிலரைப் பற்றிய குறிப்புக்களை மட்டும், ஈண்டுக் காண்போம்.

சங்கரர் (கி. பி. 788–820) :

மலையாள நாட்டில், ஆல்வாய்ப்புழை என்னும் நதிக்கரையில், காலடி என்ற இடத்தில், ஆத்திரேய கோத்திரத்தில் சிவகுரு என்னும் தந்தைக்கும், ஆர்யாம்பிகை என்னும் தாயார்க்கும், திருச்சூர் விருஷபாசலேசுவரர் அருளால் தோன்றினார். நருமதை நதிக்கரையில் தவம்புரிந்துகொண்டு இருந்தவரும், கௌடபாதர் என்பவரின் மாணவரும் ஆகிய, கோவிந்த யோகிந்திரர் என்னும் குருவை யடைந்து, அவர்பால் அருளுபதேசம் பெற்றார். பாரத நாடு முழுவதும் யாத்திரை செய்து, பல செயற்கருஞ் செயல்கள் புரிந்தார். காசியில் வியாச தரிசனம் பெற்றார். பதரிகாசிரமத்தில் ஒரு விஷ்ணுகோயில் எடுப்பித்தார். ஸ்ரீநகரில் 'விஷ்ணு சகஸ்ரநாம பாஷ்யம்' செய்தார். பிரயாகைத் திரிவேணி சங்கமத்தில் நீராடினார். குமாரில பட்டர் என்பவரைச் சந்தித்தார். அவர் கூறியபடி மாகிஷ்மதி நகரத்தில், மண்டன மிச்ரர் என்பவரைக் கண்டார். சரசவாணி என்னும் அவர்தம் மனைவியார் நடுவராக விளங்க, மண்டன மிச்ரருடன் வாதம் புரிந்து வென்றார். வாதில் தோற்ற மண்டன மிச்ரர், சுரேசுவராசார்யர் என்னும் பெயர் பூண்டு, இவருக்கு மாணவராயினர். பிரயாகையில் ஒருவருக்குத் தொழுநோய் தீர்த்து, உதங்கர் என்ற மாணவராக ஏற்றார். கௌசாம்பியில் இறந்த சிறுவன் ஒருவனை உயிருடன் எழுப்பினார். அமரசிம்மன் என்னும் சமண மன்னன் இயற்றிய அமரகோசம் என்னும் வடமொழி நிகண்டு நூலை, அழியாமற் காத்துப் பரவச் செய்தார். ஸ்ரீசைலத்தில் உக்கிரபைரவன் என்னும் காபாலிகனை வெற்றி கொண்டார்.

யாகம் முதலிய கருமங்களைப் புரிவதே முக்கியம் என்னும் மீமாஞ்சகரின் கொள்

---

* (1) "In an address delivered at Edinburgh University in 1952, Arnold Toynbee predicted that in 50 years the world would be under the hegemony of the United States but in the 21st century, as religion captures the place of technology it is possible that India the conquered will conquer its conquerors".

—**Huston Smith**,
The Religions of Man.

* (2) "Study the history of the whole world, and you will see that every high ideal you meet with anywhere had its origin, in India. From time immemorial India has been the mine of precious ideas to human societies; giving birth to high ideas herself she has freely distributed them broadcast over the whole world. This is the land where like the tidal waves, spirituality and philosophy have again and again rushed out and deluged the world, and this is the land whence once more such tides must proceed in order to bring life and vigour into the decaying races of mankind. The debt which the world owes to our motherland is immense".

—**Swami Vivekananda.**

கையைக் கண்டித்தார். ஞானமே வீடு பேற்றுக்குரிய சாதனம் என்று நிறுவினார். பௌத்த சமண சமயங்களின் தவறான கொள்கைகளைக் கடிந்தார். இந்து மதத்தின் சீர்கேடுகளைப்போக்கி, ஆலய வழிபாட்டு முறைகளைத் திருத்தி யமைத்தார். சிருங்கேரி பூரி துவாரகை காஞ்சி என்னும் இடங்களில் ஆசாரிய பீடங்களை ஏற்படுத்தினார். சுரேசுவரர் பத்மபாதர் அஸ்த்தாமலகர் தோடகர் முதலியவர்கள், இவர்தம் மாணவர்கள் ஆவர்.

பிரம்ம சூத்திரம், பகவத் கீதை, உபநிஷதங்கள் ஆகியவற்றுக்கு உரைகள் இயற்றினார். மனீஷா பஞ்சகம், கனகதாராஸ்தவம். தசசுலோகி, விவேக சூடாமணி, பிரமோத கீதாசாரம், ஆத்மபோதம், பஜகோவிந்தம், சுப்பிரமணிய புஜங்கம், சௌந்தரிய லகரி, சிவானந்த லகரி, விஷ்ணு சகஸ்ரநாம பாஷ்யம் முதலிய பல நூல்கள் இவரால் இயற்றப்பெற்றுள்ளன.

பிரமம் என்பது இரண்டற்ற பரம் பொருள். அதற்கு வேறாகத் தோன்றும் உலகம், மாயையின் காரியம். பலவாகக் காணும் உயிர்த்தொகுதிகள், உண்மையிற் பிரமத்தின் வேறானவை யல்ல. பிரமமும் ஆன்மாவும் ஒன்றே. இந்த ஞானத்தை அடைந்தால் பிறப்பு இறப்புக்களில் இருந்து விடுபடலாம் என்பது சங்கரர் கொள்கை. இது அத்வைதம், கேவலாத்வைதம், வேதாந்தம் என்னும் பெயர்களால் வழங்கப்படும்.

இராமானுசர் (கி. பி. 1017–1137):

தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகேயுள்ள ஸ்ரீபெரும்பூதூரில், ஆசூரி கேசவப் பெருமாள் என்னும் தந்தையாருக்கும், பூமிப் பிராட்டியார் என்னும் தாயாருக்கும் மைந்தராகத் தோன்றினார். பெரிய திருமலை நம்பிகள் இவருக்கு இளையாழ்வான் என்னும் திருப்பெயர் இட்டார். காஞ்சிபுரத்திற்கு அணித்தேயுள்ள திருப்புட்குழி என்னும் தலத்தில் இருந்த யாதவப் பிரகாசர் என்னும் வேதாந்த ஆசிரியர் பால், இவர் சிலகாலம் பாடம் கேட்டார். பின்னர்த் தமது தாயாரின் கருத்தின்படி காஞ்சியில் இருந்த திருக்கச்சி நம்பிகள் என்பவரை அடைந்து, அவர்பாற் பக்தியுடன் பழகி ஒழுகி வந்தார். மதுராந்தகத்தில், ஏரிகாத்த இராமபிரான் சந்நிதியில் பஞ்சசம்ஸ்காரங்கள் செய்யப்பெற்றார். இல்லற வாழ்வில் உவர்ப்புற்றுத் துறவு நெறியினை மேற்கொண்டார். அப்போது இவருக்கு இராமானுசர் என்றும், யதிராசர் என்றும் பெயர்கள் வழங்கப்பெறலாயின. திருக்கோட்டியூர் நம்பிகள் பக்கல் 18 முறை திருவரங்கத்தினின்று நடந்து சென்று, திருவெட்டெழுத்து மந்திரமும், சரம சுலோக நுண்பொருளும் அறிவுறுக்கப் பெற்றார். திருமாலையாண்டான் என்பவரிடம் திருவாய்மொழிப் பொருள் கேட்டுணர்ந்தார்; திருமலை நம்பிகள்பால் ஸ்ரீராமாயண நுண்பொருள்களைச் செவிமடுத்தார்; திருவரங்கப் பெருமாளரையர், இவருக்குத் திருவாய் மொழியும் தோத்திரங்களும் நல்வார்த்தைகளும் அருளிச் செய்தார்.

ஆளவந்தார் (கி.பி. 918-1037) என்னும் வைஷ்ணவப் பெருஞ் சான்றோருக்குப் பின்னர், திருவரங்கப் பெருமாள் அரையர் என்பவர் இவரைக் காஞ்சிபுரத்தினின்று அழைத்துச் சென்று, திருவரங்கம் சேர்த்தார். அங்குப் பெரிய பெருமாள் பணித்தபடி "உடையவர்" என்னும் பெயர் பெற்றுத் 'தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்து' நாள்விழா-பட்ச விழா-மாத விழா-ஆண்டுவிழா என்னும் பலதிற விழாக்களும், செவ்விதின் நிகழும்படி இராமானுசர் இனிய ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தி வைத்தார். திருவேங்கடம், திருநாராயணபுரம் கோயில்களிலும், பல சிறந்த ஒழுங்கு முறைகள் இவரால் வகுக்கப்பெற்றன.

போதாயன விருத்தியைத்தழுவிப் பிரம சூத்திரத்திற்கு, இவர் வகுத்த உரையின் மாட்சிமையைக் கண்டு வியந்து மகிழ்ந்த கலைமகள், இவருக்குப் "பாஷ்யகாரர்" என்னும் சிறப்புப் பெயரை வழங்கியருளினள் என்பர். தான் பாடியிருந்தபடி, திருமாலிருஞ்சோலைப் பெருமாளுக்கு நூறு தடா வெண்ணெயும், அக்கார அடிசிலும் சமர்ப்பித்ததனால், ஆண்டாள் நாச்சியார் இவரைக் "கோயில் அண்ணர்" என்று சிறப்பித்தார். திருக்கோட்டியூர் நம்பிகள் இவரை "எம்பெருமானார்" என்று புகழ்ந்து போற்றிப் பாராட்டினார்.

முதலியாண்டான், கூரத்தாழ்வான், எம்பார், அருளாளப் பெருமாள் எம்பெருமானார் முதலிய பலர், இவர்தம் மாணவர்கள் ஆவர். வைஷ்ணவ குரு பீடங்களாக

74 சிம்மாசனங்கள், இவரால் ஏற்படுத்தப் பெற்றன என்பர்.

ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், வேதாந்தசங்கிரகம், கீதா பாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க பாஷ்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்தியம் என்னும் நூல்கள், இவரால் இயற்றப்பெற்றுள்ளன.

சித்து அசித்து ஈசுவரன் என்று மூன்று பொருள்கள் உள்ளன. சித்து எனப் படுவது ஆன்மா. அசித்து என்பது பிர கிருதியாகிய உலகம். ஈசுவரன் திருமால். ஆன்மா சேதனம், அறிவுடைய உயிர்ப் பொருள். உலகம் அசேதனம், அறி வற்ற உயிரில்பொருள். "உடல் மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்துளன்" என்னும் நம்மாழ்வார் திருமொழியின்படி சேதன அசேதனப் பொருள்களைத் தனக்கு உடலாகக் கொண்டு அவற்றிற்கு உயிராய் அவற்றின் வேறன்றி நிற்பவன் ஈசுவரன் என்பது இராமாநுசர் கொள்கை. இது விசிஷ்டாத்வைதம் என வழங்கும். விசிஷ் டாத்வைதம் என்பது விசிஷ்டஸ்ய அத் வைதம் என விரியும். உயிர்ப்பொருள் உயிரில் பொருள் ஆகிய இரண்டையும், தனக்கு உடலாகக் கொண்ட பரம்பொருள் இரண்டில்லை ஒன்றேயாகும் என்பது விசிஷ்டாத்வைதக் கொள்கை.

வேதாந்த தேசிகர் (கி. பி. 1268–1768):

காஞ்சிபுரத்தில் திருத்தண்கா என வழங் கப்பெறும் விளக்கொளி எம்பெருமான் சந்நிதியின் சூழலில் தோன்றியருளினர். தந்தையார் அநந்த சோமயாஜி. தாயார் தோதாத்திரியம்மை. ஆசிரியர், மாதுல ரான கிடாம்பியப்புள்ளார் என்னும் இரா மாநுசப் பிள்ளான். ஸ்ரீவேங்கடநாத சர்மா என்பது, இவர்தம் இயற்பெயர். வேதாந்தாசார்யர், கவிதார்க்கிக கேசரி, சர்வதந்த்ர சுவதந்த்ரர், சமஸ்யா சகஸ்ரீ என்பன, பின்னர் இவருக்குப் பட்டப்பெயர் களாக வழங்கப் பெற்றன. திருவகீந்திர புரத்தில் தெய்வ நாயகன் சந்நிதியில் பெரிய திருவடியினல் அயக்ரீவ மந்திரம் உபதேசிக்கப் பெற்ருர். அதனை இடை யருது நெடுநாள் செபித்து அயக்ரீவ மூர்த்தியின் அருளும் தரிசனமும் கிடைக் கப் பெற்ருர்.

அயக்ரீவ தோத்திரம், கருட பஞ்சாசத், தேவநாயக பஞ்சாசத், அச்சுத சதகம், கோபால விம்சதி, ரகுவீர கத்யம், தேகளீ சஸ் துதி, அஷ்டபுஜாஷ்டகம், வேகாசேது ஸ்தோத்திரம், சரணாகதி தீபிகை, காமாசி காஷ்டகம், பரமார்தத ஸ்துதி, ஸ்ரீஸ்துதி, வரதராஜ பஞ்சாசத், வைராக்ய பஞ்சகம், அபீதி ஸ்தவம், சங்கல்ப சூர்யோதயம், பாதுகா சகஸ்ரம் என்னும் வடமொழி நூல்களும்; அடைக்கலப்பத்து, அர்த்த பஞ்சகம், ஸ்ரீவைஷ்ணவதினசரி, பன்னிரு நாமம், திருச்சின்னமாலை, அத்திகிரி மகாத்மியம் முதலிய பல தமிழ்ப் பனு வல்களும்; வேதாந்த தேசிகரால் இயற்றப் பெற்றுள்ளன.

'சந்தமிகு தமிழ் மறையோன்' என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளும் வேதாந்த தேசிகர், தமிழ் வேதமாகிய திருவாய் மொழியைத் தெளிய ஓதினல், தெளியாத மறைகளான வடமொழி வேதங்களின் பொருளையும் ஐயம் அறத் தெரிந்து தெளிந்து கொள்ளலாம் என்று கூறியருள்கின்ருர். இராமாநுசரின் விசிஷ் டாத்வைதக் கொள்கையினைத் தமது வட மொழி, தென்மொழி நூல்களாற் பெரிதும் விளக்கியருளிய பெருந்தகையாளர் இவர்! இவர்தம் 700ஆம் ஆண்டு விழா, எங்கும் இப்போது சிறப்புறக் கொண்டாடப் பெறு கின்றது.

மத்வாசாரியர் (1169–1278):

இந்தியாவின் மேற்குக் கரையில் உள்ள தென்கன்னட நாட்டில், உடுப்பிக்கு அரு கில் கல்யாணபுரம் என்னும் ஊரில் தோன் றினர். தந்தை மத்திசேக பட்டர்; துளு மொழி பேசும் அந்தணர். இவர்தம் இயற் பெயர் வாசுதேவர் என்பது. அச்சுதப் பிரேட்சர் என்னும் வைணவத் துறவி யிடம், துறவு நிலை பெற்ருர். அவர் இவரை வேதாந்தப் புலமைக்கு அரச ராக முடிசூட்டினர். பூரணமும் சுதந்திர மும் உடையதாக இருப்பதால், சாந்திக்கு உறைவிடமாக உள்ள பிரமம் ஆகிய ஆனந்தத்தை, அடையுமாறு செய்யும் வேதப் பொருளை விளக்கியதால், இவருக் குப் பூர்ணபிரக்ஞர், சர்வ தந்த்ர சுவ தந்த்ரர், ஆனந்த தீர்த்தர் என்னும் பெயர்கள் வழங்கலாயின. பிரமத்தை அறியும் அவாவுடையவர் (பிரமஜிஞ்ஞாசு) என்பதனை விளக்கும் வகையில், இவர் தம் வாழ்க்கை அமைந்தது. பல புலவர்களை வாதத்தில் வென்றமையால் அநுமான தீர்த்தர், சர்வஞ்ஞர் முதலிய பெயர்களும் இவருக்கு வழங்கும். இவரை வாயுதேவ னின் கூறு என்பர். ஆதலின் மாத்துவ நெறியில் ஆஞ்சநேயர் வழிபாடும் உண்டு.

பிரம்ம சூத்திரத்திற்கு 4 பேருரைகள், 10 உபநிடதங்களுக்கு விரிவுரைகள், பகவத் கீதைக்கு 2 விளக்க நூல்கள், மூல ராமாயணம், பாரதம், பாகவதம் ஆகிய வற்றுக்கு உரைகள் முதலாக 37 நூல்களை இவர் இயற்றினர் என்பர். பழமையான கிருஷ்ண வடிவம் ஒன்றை உடுப்பியில் நிறுவினர். அதையே தமது வைணவ நெறியின் நடுநாயகமாக ஆக்கினர். ஜலாலுதீன் போன்ற முசுலீம் மன்னர்களும் இவரை மதித்துப் போற்றினர்.

'தேருங்கால் தேவன் ஒருவனே' என்பதும், அவன் 'ஸ்ரீமந் நாராயணனே' என்பதும் மத்துவரின் கொள்கை. நான் பரம்பொருள் (அகம் பிரம்மோஸ்மி) என்ற அத்வைதக் கொள்கைக்கு எதிரிடையாக, நான் தொண்டன் (அகம்தாஸ்யோஸ்மி) என்னும் கொள்கையை, இவர் வற்புறுத்தினர். பரம்பொருள் உயிர்ப் பொருள் ஆகிய இரண்டும் தனித்தனியே இயங்கும் வேறுபட்ட நிலையான இருபொருள்கள் என்று இவர் தெளிவு படுத்தினர். ஆதலின் இவரது கொள்கை துவைதம் எனப்பெறும். அது நீ ஆகின்றாய் (தத்துவமசி) என்பதனை மறுத்து, அது நீ ஆகமாட்டாய் (அதத்துவமசி) என்று பொருள் கூறி வற்புறுத்தினர். இறைவனே தலைவன், நாம் அவனுக்கு அடிமைகள் என்று உணர்ந்து, பணிவுடனும் அன்புடனும் வழிபட்டு வருவதனால் வீடுபேறு எய்தலாம் என்பது மத்வர் கொள்கை.

இவர்தம் கொள்கையை மேலும் வலியுறுத்திப் பரப்பும் வகையில் விசயேந்திரர், விசயராசர், செயதீர்த்தர், சீனிவாச தீர்த்தர், வாதிராசர் முதலியோர், பல்வேறு சிறந்த நூல்களை இயற்றியுள்ளனர்.

இராமாநந்தர் (கி. பி. 1299–1410):

பிரயாகையிற் பிராம்மண குலத்திற் பிறந்தவர். தந்தை புண்ணியசதன். தாய் சுசீலா. இராகவானந்தர் என்பவரின் மாணவர். தாய்மொழியிலேயே சமய நூல்கள் இருக்க வேண்டும்; அப்போது தான் பாமர மக்களும் சமயத்தைப் பற்றி அறிந்துகொண்டு பயன்பெற இயலும் என்றார். சாதி உயர்வு தாழ்வுகளை அறவே வெறுத்துக் கடிந்தவர். கபீர்தாசர் துளசிதாசர் ஆகிய இருவரும் இவருடைய சீடரே யாவர். இராமபிரானையே முழுமுதற் கடவுளாகப் போற்றி வழிபட்டார். இராமாநுசரின் விசிட்டாத்வைத தத்துவக் கொள்கை இவர் மூலமாகவே வட இந்தியாவிற் பெரிதும் பரவிற்று என்பர். இவருடைய பாடல்கள் அடங்கிய இந்தி மொழி நூல் 'ஆதி கிரந்தம்' என வழங்கப்படுகின்றது.

கபீர்தாசர் (1440–1518):

காசியில் வாழ்ந்த நீரு என்னும் முகம்மதிய நெசவாளரின் மனைவி. நீமா என்பவளால் ஒரு குளக்கரையில் கண்டெடுத்து வளர்க்கப் பெற்றார். பெரியவர் எனப் பொருள்படும் கபீர் என்னும் பெயர், திருக்குரானில் கண்டெடுத்து இவருக்கு வழங்கப்பெற்றது. திருவள்ளுவரைப் போல இவரும் ஒரு நெசவாளராக வாழ்ந்து வந்தார். இராமாநந்தரைக் குருவாக அடைந்தார். இராமனும் ரகீமும் ஒன்றே; அரியும் அல்லாவும் வேறல்ல என்ற சமரச ஞானத்தைப் பரப்பினர். இவருடைய பாடல்களில் இந்து மதத்தின் அத்வைதவுணர்வையும், இசுலாமியத்துச் சூஃபிகளின் சமய அனுபவத்தையும் காணலாம். கடவுளைப் பற்றிய இவர் தம் பாடல்களில் 'நாயக நாயகி பாவம்' பெரிதும் அமைந்து காணப்படுகின்றது. இவர் கடவுளை இராமன் அரி கோவிந்தன் அல்லா என்னும் பெயர்களால் வழுத்தினராயினும், கடவுள் பல பிறவிகள் எடுத்தார் எனக் கூறுவது அடாதென்றும், இறைவனைக் கல் செம்பு வடிவங்களில் வைதது வணங்குவது பொருத்தமன்று என்றும், சமயக் கிரியைகளும் சடங்குகளும் பொருளற்ற புன் செயல்களாகும் என்றும், மிகவும் கடுமையாக மறுத்துப் பாடியுள்ளார். இந்தி மொழியின் ஒரு பிரிவான 'அவதி' மொழியில் இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன. தாம் இயற்றிய 'விப்ரமதீசி' என்னும் செய்யுள் நூலிற் கபீர்தாசர் பொருளற்ற வெறும் சடங்குகளை மிகக் கடுமையாகத்தாக்கி மறுத்துள்ளார். இவர் பாடல்களைத் தர்மாசர் என்னும் சீடர் தொகுத்து வைத்துப் பரப்பினர். சீக்கிய மதகுரு வாகிய குருநானக் என்பவர், இவருடைய சீடரேயாவர். கபீர்தாசரின் முக்கியமான பாடல்களை 'பீஜக்' என்னும் நூல்களிற் காணலாம். இரவீந்திரநாத தாகூர், இவருடைய நூறு பாடல்களை வங்காளத்தில் மொழி பெயர்த்தார்; ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளன. இவரது கொள்கையைப் பின்பற்றுவோர் 'கபீர் பந்திகள்' எனப்படுவர்,

சைதன்னியர் (1486-1534):

வங்காளத்திலுள்ள நவத்வீபம் (நடியா) நகரத்தில், மாயாப்பூர் பகுதியில், ஏழை வைதிகக் குடும்பத்தில் உதித்தவர். தந்தை ஜகந்நாத மிச்ரர். தாய் சசி தேவி. இவரே கடைசி பத்தாவது புதல்வர். 15-ஆம் வயதில் வல்லபாசாரியர் என்பவரின் மகளான இலட்சுமி தேவியை மணந்தார். 17-ஆம் வயதில் கேசவ மிச்ரர் என்னும் புலவரை வென்ருர். பாம்புக்கடியால் முதல் மனைவி இறந்தார். பின்னர் விஷ்ணுப்பிரியை என்பவளை இரண்டாம் மனைவியாக மணந்தார். கயை என்னும் புனிதத் தலத்திற்குச் சென்று, ஈசுவரபுரி என்னும் வைணவ சந்நியாசியிடம் தீக்கை பெற்ருர். தர்க்க வாதம் புரிதலைக் கைவிட்டார். சமயப் பிரசாரகர் ஆனர். கீர்த்தனை மண்டபம் ஒன்று கட்டி. பக்தி மார்க்கம் பற்றிப் போதிக்கத் தொடங்கினர். கீர்த்தனங்களை இசையுடன் பாடும்போது, தம்மை மறந்த நிலையில் நடனமும் ஆடுவார். 24-ஆம் வயதில், குட்வா என்னும் நகரில் துறவு நிலையை மேற்கொண்டார். பூரியில் வசித்தார். தென்னகத்திற்குத் தல யாத்திரை வந்து திரும்பும்போது பண்டரிபுரம் சென்ருர். துக்காராம் இவருடைய பக்திமார்க்கத்தில் ஈடுபட்டார். தமது 48-ஆம் வயதில் கோயிலில் பாடிக் கொண்டே மறைந்து விட்டார் என்பது வரலாறு.

கடவுளை ஞானத்தால் அறிய முடியாது. பக்தியினுல்தான் அறிய முடியும். கடவுளின் அருள் மூலம் சான்ருேர் அறிந்து கூறிய அருளுரைகளே வேதங்கள் ஆகும். வேதப்பொருளை விளக்குவனவே புராணங்கள். ஆதலின் வேதங்கள் புராணங்கள் ஆகிய இரண்டுமே ஆன்மிக வாழ்விற்குத் தேவையான பிரமாண நூல்களாகும். பக்தியே முக்தியடைதற்குரிய நேரிய வழி. கிருஷ்ண பிரேமையே ஆன்ம லட்சியம். உண்மையான நல்ல வைஷ்ணவனின் தொடர்பினுல், சத்சங்கம், பக்தி சிரத்தை முதலியன அடைந்து, பகவானுக்குச் சேவை செய்யும் இன்பமும், தோழமையும் அடையலாம். இந்நிலையே வீடுபேறு என்பது, இவருடைய கொள்கை. சைதன்யரின் மதம் அசிந்திய பேதாபேதம் எனப்படும்.

வல்லபாசாரியர் (1473-1531):

ஆந்திர நாட்டைச் சேர்ந்த தைத்ரீய மதவகுப்பில், தைலிங்கப் பிராம்மண குடும்பத்தில், மத்தியப் பிரதேசத்தில் ரெய்ப்பூர் என்னும் நகரத்திற்கு அருகில், கம்பாரணியம் என்னும் ஊரில் அவதரித்தார். காசிக்குச் சென்று கல்வி பயின்ருர். பாரத நாடு முழுவதும் மூன்று முறை யாத்திரை புரிந்தார். விசயநகர அரசரின் பேரவையில் விருதுகள் பெற்ருர். அலகாபாத்துக்கு அருகில் உள்ள ஆடெல் என்னும் கிராமத்திலேயே பெரிதும் வாழ்ந்தார். இவரது கொள்கை உத்திரப் பிரதேசம். இராசபுதனம், சவுராட்டிரம், கூர்ச்சரம் முதலிய மாநிலங்களிற் பெரிதும் பரவியுள்ளது.

இறைவன் 'ஏகம்' என இருக்கும் நிலையை விடுத்து, 'அனந்தம்' ஆக விரும்பினர். அதனுல் அவர் விகாரப்படாமலே, பிரபஞ்சத்தைத் தம்மிடம் இருந்து தோற்றுவித்தார். தீயினின்று பொறிகள் உண்டாவது போல, கடவுளினின்று ஆன்மாக்கள் உண்டாயின. கடவுளின் 'சத்து' என்னும் கூற்றில் இருந்து உலகமும், 'சித்து' என்னும் கூற்றில் இருந்து ஆன்மாவும் தோன்றின. சித்து, ஆனந்தம் என்பன, பிரபஞ்சத்தில் மறைந்து கிடக்கின்றன. ஆன்மாவிடம் 'ஆனந்தம்' என்னும் இயல்பு மறைந்துள்ளது. பிரபஞ்சம் மாயையன்று; உண்மையாகவே உலகம் உள்ளது. அது பிரமத்தின் பரிணமமே யாகும். பிரமத்தினுடைய லீலா விநோதங்களின் விளைவே பிரபஞ்சம். அறியாமையினுலேயே உலக வாழ்வாகிய பந்தம் ஏற்படுகின்றது. ஆன்மாக்கள் நித்தியப் பொருள்கள், ஆனல் அணு பரிமாணம் உள்ளவை. வினைப்பயன்களே நமது உயர்வு தாழ்வு, இன்ப துன்பங்களுக்குக் காரணம். கடவுளின் அருள் பெற்ருல், தெய்விக உடல் பெற்றுப் பிரமத்தின் இராச லீலையாகிய தெய்விக இன்பத்தைத் துய்க்கலாம். பிரம ஞானம் பெற்றுப் பிரமத்தை வழிபடுவோர் புருஷோத்தமன் ஆக விளங்கும் இறைவன் பாற் கலந்து விடுவர். இதுவே முத்தி நிலையின் சிகரம். 'என்னுல் ஆவதொன்று இல்லை. எல்லாம் அவன் செயலே' என்று தெளிந்து கடவுளிடம் அன்பு செலுத்துவதே 'புஷ்டி பக்தி' எனப்படும்.

இராமாநுசரும் மத்துவரும் கூறும் பக்திக்கு அறிவு அடிநிலை; வல்லபாசாரியர் கூறும் பக்திக்கு உணர்ச்சி அடிநிலை. சங்கரரின் கொள்கை, வேதாந்தம் அல்லது மாயாவாதம் என்று வழங்கப் பெறும். வல்லபாசாரியரின் கொள்கை, சுத்தாத்வைத வேதாந்தம் எனப்படும்.(தொடரும்).

—ஆசிரியர்

அந்தகக் கவி வீரராகவர்

முன்னுரை :

திருக்கழுக்குன்றம், ஒரு சிறந்த சிவத்தலம். சைவ சமய ஆசிரியர்கள் நால்வர்களும், தமது திருப்பாடல்களால் அதனைப் புகழ்ந்து போற்றியுள்ளனர். திருக்கழுக்குன்றத்தின் பலதிறச் சிறப்புக்களையும் நாம் நினைவு கூருங்கால், திருக்கழுக்குன்றப் புராணம் — திருக்கழுக்குன்ற மாலை — திருக்கழுக்குன்ற உலா முதலிய நூல்களை இயற்றிய அந்தகக் கவி வீரராகவர் என்னும் செந்தமிழ்ப் பெருங் கவிஞரைப் பற்றியும், நமக்கு நினைவு எழுதல் இயல்பு. திருக்கழுக்குன்றத்தில் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை வரும் சங்காபிஷேக விழா என்னும் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறுவதனை ஒட்டி, நாம் அத்தலத்தின் பெருங் கவிஞர் பிரானக விளங்கி யிருந்த அந்தகக் கவி வீரராகவர் பற்றி, நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவது, மிகப் பொருத்தமான செயலாகும்.

வரலாறு :

'சான்றோர் உடைத்து' எனப் போற்றப் பெற்ற தொண்டை நாட்டில், திருக்கழுக் குன்றம் என்னும் சிவத் தலத்திற்கு அணித்தாகவுள்ள உழலூர் என்னும் சிற்றூரில், பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், இவர் வடுகநாதமுதலியார் என்னும் பெருநிலக் கிழார் ஒருவரின் அருந்தவப் புதல்வராகத் தோன்றியருளினர். வடுகநாத முதலியார்க்குப் பூதூர், பொன் விளைந்த களத்தூர் என்ற ஊர்களிலும், நில புலன்கள் இருந்தன. எனவே, அவற்றையும் இவர் தோன்றிய ஊர்களாகக் குறிப்பிடுவதுண்டு. வடுகநாத முதலியார்க்கு வேறு புதல்வர்களின்றி, இவர் ஒருவரே 'ஒரு குலத்துக்கு ஒரு மைந்தன்' எனத் தோன்றினர். ஆனல், இவர் பிறவியிலேயே குருடராக விளங்கினர். இவரது தந்தையார் சிறந்த சிவநெறியாளரேயாயினும் சமயக் காழ்ப்பில்லாதவராதலால், பெரியோர்கள் சிலர் கூறியபடி, இவருக்கு **வீரராகவன்** என்று பெயரிட்டு வழங்கினர்.

பிறவியிலேயே குருடராக இருந்தபோதிலும் இறைவன் திருவருளால் வீரராகவர்க்கு உள்ளொளி நிரம்பியிருந்தது. இவர்க்குப் புறக் கண்ணெளி வாய்த்திலாத குறையினை, அகக் கண்ணெளி யளித்து, இறைவன் நிறைவு செய்தனனுதல் வேண்டும்.

அகக்கண்ணெளி :

அந்தகக்கவி வீரராகவர், தம்மை ஆதரித்த வள்ளல் ஒருவரின் மீது "சந்திரவாணன் கோவை" என்னும் ஒரு நூலைப் பாடினர். அதனை அரங்கேற்றிக் கொண்டிருக்குங்கால், தலைவன் தலைவியின் அழகினைப் புகழ்ந்து பாராட்டி மகிழ்ந்து இன்புறும் நிலையில் "நலம் பாராட்டல்" என்னும் அகப் பொருட்டுறையினைச் சார்ந்ததாக வருகின்ற,

"மாலே நிகராகும் சந்திர
  வாணன் வரையிடத்தே
பாலேரி பாயச்செந் தேன்மாரி
  பெய்யநற் பாகுகற்கண்
டாலே எருவிட முப்பழச்
  சேற்றின் அமிழ்தவயல்
மேலே முளைத்த கரும்போஇம்
  மங்கைக்கு மெய்யெங்குமே"

"This gaiety of the blind is a perpetual wonder to me. It is as though the outer light being quenched an inner light of the spirit illuminates the darkness. Outside the night is black and dread, but inside there is warmth and brightness. The world is narrowed to the circle of one's own mind, but the very limitation feeds the flame of the spirit, and makes it leap higher. It was the most famous of the blind Englishmen who in the days of his darkness made the blind **Samson** say : "He that hath light within his own clear breast, May sit in the centre and enjoy bright day."

—A. G. Gardiner, On the Cheerfulness of the Blind .

என்னும் பாடலைப் படிக்கச் செய்து பொருள் விளக்க முற்பட்டார். அப்போது, அவைக் களத்தே இருந்த அறிஞர் ஒருவர் எழுந்து "பாடிய புலவருக்குத் தான் கண்தெரியாது; பாடலைப் படிக்கும் கையேட்டுக் காரருக்குமா கண் தெரியாது?" என வினவி அமர்ந்தார். அவ்வறிஞர் நுட்பமாக வினவியதன் குறிப் பினை அறிந்து கொண்ட கவிஞர், "கொம்பை வெட்டிக் காலை நடு" என்று, உடனே தம் கையேட்டுக்காரரிடம் கூறினார். கவிஞர்பாற் கல்வி கற்றுத் தேர்ந்திருந்த மாணவராகிய அந்தக் கையேட்டுக் காரரும், அக்குறிப்பினை நுண்ணிதில் உடனே அறிந்துகொண்டு, "கொம்பாவது காலாவது, எங்கே வெட்டி எங்கே நடுவது" என்று எண்ணிக் கலங்கித் தடுமாறிக் கொண்டிராமல், கரும்பு சேற்றில் முளைக்கும் பயிராக இப்பாடலிற் குறிக்கப் படுவது பிழை எனவுணர்ந்து 'முப்பழச் சேற்றின்' என்பதிற் கொம்பை வெட்டி, அங்குக் காலை நட்டு 'முப்பழச் சாற்றின்' என்று திருத்தி மறுபடியும் படித்துக் காட்டி னார். அது கண்டு, நுண்மாண் நுழைபுலம் உடைய மாணவரையும் ஆசிரியரையும், அவையினர் அனைவரும் வியந்து பாராட்டி மகிழ்ந்தனர் என்பது வரலாறு. இவ்வர லாற்றால், முகக்கண்ணின் ஒளியை இழந் திருந்த வீரராகவருக்கு அகக்கண்ணின் ஒளியைப் பன்மடங்காக மிகுவித்து, அவர்தம் குறையினை இறைவன் நிறைவு செய்தரு ளினன் என்பது உணரப்பெறும்.

கல்வி நலன் :

பிறந்தபொழுதே கண்காணாராய வீரராகவர், எண்ணும் எழுத்துமே கண்ணெனத் துணிந்து, உலையா முயற்சியும் ஊக்கமுங் கொண்டு, ஆசிரியர் தமது முதுகில் எழுத்துக்களை எழுத அவற்றைக் கூர்ந்துணர்ந்தும், நூல் களைப் பிறர் படிக்கச் செய்துகேட்டு மனப் பாடம் செய்தும் கல்வி கற்கத்தொடங்கி, யாவரும் வியந்து மகிழத்தக்க முறையில், கற்பன கற்றுப் பெரும் புலமை யெய்தினர். அந்தகராக இருந்தும் அரும்பாடுபட்டுக் கற்று, அழகிய இனிய கவிதைகள் பாடும் பெருந் திறம் வாய்க்கப் பெற்றுச் சிறந்தொளிர்ந்த, இப்புலவர் பெருமகனாரைத் தமிழக மக்கள் "அந்தகக்கவி வீரராகவர்" எனப் பாராட்டிச் சிறப்பிப்பாராயினர். தாம் கல்வி கற்ற அருமைப்பாட்டினை இவர்தாமே,

"ஏடாயி ரங்கோடி எழுதாது
தன்மனத் தெழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக்
கவிவீர ராகவன்"

எனக் குறிப்பிட்டுக்கொள்ளுவதனால் உணர லாம். இவருக்குக் கல்வி கற்பித்த கந்த புராணம் வல்ல கச்சியப்பர் என்பவர்,

"பொங்குதமிழ் அயோத்தியில்வாழ்
தசரதனென்
போனிடத்தும் பூதூர் வேந்தன்
துங்கவடு கன்னிடத்தும் வீரரா
கவர்இருவர் தோன்றி னரால்;
அங்கொருவன் ஒருகலைமான் எய்திடப்போய்
வசைபெற்றான்; அவனி பாலன்
இங்கொருவன் பல்கலைமான் எய்திடப்
போய்க் கவியினால் இசைபெற் றானே."

என இவரைப் புகழ்ந்து போற்றியுள்ளார். ஈழ நாட்டு அரசனாகிய பரராசசிங்கன் என்பவன்,

"இன்னம் கலைமகள் கைமீதிற்
புத்தகம் ஏந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப்
பாள்; என்ன புண்ணியமோ!
கன்னன் களந்தைக் கவிவீர
ராகவன் கச்சியிலே
தன்னெஞ்சம் ஏடெனக்
கற்றான் ஒருமுத் தமிழையுமே!"

என்று, புகழ்ந்து பாராட்டி யிருத்தலால் இவர் கல்வி கற்ற அரிய முயற்சித் திறனை அறியலாம்.

கவிதைத் திறம் :

அந்தகக்கவி வீரராகவர் பண்டைச் செந் தமிழ் நூல்கள் பலவற்றையும் நன்கினிது கற்றுத் துறைபோயவர். எதனையும் ஒரு முறை கேட்டுணரவல்ல பெருந்தகை (ஏக சந்தக்கிராகி)யாக அவர் விளங்கினார். பழம் பெரும் கவிதைகளை அழுந்தி யறிந்து கற் றுணர்ந்தவர்களே புதிய இனிய சிறந்த கவிதைகளை இயற்றவல்ல திறம் பெறுவார் கள். "பிறதுறைகளினெல்லாம் புதிய புதியன வாகக் காலப்போக்கில் தோன்றும் பொருள் களே, கூர்தல்அறக்கொள்கையின்படி பழைய பொருள்களைவிட மேன்மேற் சிறந்து வளர்ந்து செல்ல, இலக்கியத் துறையில் மட்டும் அங்ஙனமின்றி முதற்கண் எழுந்த பழம்பெரு நூல்களே, தனிப்பெருஞ்சிறப்புடையனவாய்ப்

பின்னர்த் தோன்றும் நூல்கட்கெல்லாம் தலைமை சான்று அடிப்படையாகத் திகழ் கின்றன''. இவ்வுண்மைகளை யெல்லாம் ஆராய்ந்தறிந்த வீரராகவர், பழந்தமிழ் நூல் களைப் பழுதறக் கற்றுத் தேர்ந்தார். அவர் தேவார திருவாசகம் முதலிய திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் என்பனவற்றை மட்டுமே யன்றிச் சங்க இலக்கியங்களையும் நன்கு கற்றறிந்திருந்தார்.

"இல்லெனுஞ்சொல் லறியாத சீமையில்வாழ்
உதானனைப்போய் யாழ்ப்பா ணன்யான்,
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்சோறும்
பழந்தூசும் பாலி யாமற்,
கொல்லநினைந் தேதனது நால்வாயைப்
பரிசென்று கொடுத்தான்; பார்க்குள்
தொல்லையென தொருவாய்க்கும் நால்
[வாய்க்கும்
இரையெங்கே துரப்பு வேனே!"

என இவர் பரராசசிங்கன் என்னும் ஈழ நாட் டரசன் தமக்களித்த யானைப் பரிசில் குறித் துப் பாடிய பாடல்,

தடவுநிலைப் பலவின் நாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாம்சில
அரிசி வேண்டினே மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே யன்னதோர்
தேற்றா ஈகையும் உளதுகொல்
போற்றார் அம்ம பெரியோர்தம் கடனே !

எனப் புறநானூற்றில், நாஞ்சில் வள்ளுவன் என்னும் வள்ளலைக் குறித்து ஔவையார் பாடியதாகப் போதரும் பாடலை நினைவுறுத்து கின்றது. இதனால் "இன்று இருந்த பேர் புதிய பாகம், பண்டிருந்த பேர் பழைய பாகம், இரு பாகமும் வல்ல இலக்கணக்கவி வீரராகவன்" என இவர் தம்மைச் சுட்டிக் கொள்ளுவது பொருந்துவதேயாதல் புலப்படும்.

"இம்பர்வான் எல்லைஇரா
மனையே பாடி,
என்கொணர்ந்தாய் பாணநீ?
என்றாள் பாணி.
வம்பதாங் களபமென்றேன்,
பூசும் என்றாள்.
மாதங்கம் என்றேன்,
யாம் வாழ்ந்தோம் என்றாள்.
பம்புசீர் வேழம்என்றேன்.
தின்னும் என்றாள்.
பகடுஎன்றேன், உழும்என்றாள்.
பழனம் தன்னைக்
கம்பமா என்றேன். நற்.
களியாம் என்றாள்.
கைம்மாஎன் றேன்.
சும்மா கலங்கினளே!"

எனவரும் இவர்தம் இனிய பாடல், 'இலக்கணப் புலவர் சொல்லின்பம் தேடுவர்' என்பதை மெய்ப்பிக்கும் சிறந்த எடுத்துக்காட்டாய், இவரது சொல்லாட்சித் திறனையும் கற்பனை வளனையும், நமக்கு அறிவித்துக்கொண்டு விளங்குகின்றது.

உலகியலுணர்வு :

ஒருமுறை, வேற்றூர்க்கு வழிப்பயணஞ் செல்லுங்கால், இவர் எடுத்துச் சென்ற பொதிசோற்றை நாய் ஒன்று கவர்ந்து கொண்டு போய்விட, அங்கிலையிற் பசியினால் மிக வருந்திய இவர்,

"சீராடையற்ற வயிரவன்
வாகனஞ் சேரவந்து,
பாராரும் நான்முகன்
வாகனம் தன்னைமுன்பற்றிக்கவ்வி,
நாரா யணன்உயர் வாகனம்
ஆயிற்று; நம்மைமுகம்
பாரான் மைவாகனன் வந்தே
வயிற்றினிற் பற்றினனே."

என நகைச் சுவையாகப் பாடிய செய்யுள், இவர்தம் கண்ணொளி இழந்த இன்னல் மிக்க நிலையையும், செஞ்சொற்பொருட் சுவை களிலேயே நெஞ்சழுந்தி நிற்கும் இயல்பினை யும், துன்பம் உறவரினும் இன்பமெனக் கொள்ளும் பண்பினையும், இடர்மிகு நிலையினும் பொங்கியெழுந்தோங்கும் கவிதை யுணர்வினை யும், தெற்றெனக் காட்டுகின்றது.

"மாதர்க்கிதம், கவி வாணர்க்குச்
சால வணக்கம், குரு
நாதற்கு நீதியொடு ஆசாரம்,
நண்பின் நயந்தவர்க்கு, அறிவில்
கோதற்ற வாசகம், பொய்க்குப்
பொய், கோளுக்குக்கோள்,
ஆதர்க்கு இரட்டிப்பு அறிவுடை
யோர்செய்யும் ஆண்மைகளே."

என்பன போன்ற இவர்தம் இனிய தனிப் பாடல்கள், இவர் தமது ஒப்பற்ற உலகியல் உணர்விற்குச் சான்று கூறி, உவகை விளை விக்கின்றன.

நூல்கள் :

அந்தகக்கவி வீரராகவர், திருக்கழுக்குன்றப் புராணம், திருக்கழுக்குன்றமாலை, திருக்கழுக் குன்ற உலா, திருவாரூர் உலா, கீழ்வேளூர் உலா, கயத்தாற்றரசன் உலா, சேயூர் முருகன் கலம்பகம், சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், விட்டினர் அம்மையப்பன் பிள்ளைத் தமிழ், சந்திரவாணன் கோவை, பரராசசிங்கன் வண்ணம் ஆகிய பல நூல்களை இயற்றி யுள்ளார். புராணம், உலா, மாலை பிள்ளைத் தமிழ், கலம்பகம், கோவை, வண்ணம் ஆகிய பலவகை நூல்களையும் இயற்றியுள்ளமை இவர்தம் பலதிற ஆற்றல்களையும் நலமுறத் தெருட்டும். கண்ணொளி இழந்திருந்தும், இங்ஙனம் நுண்மாண் நுழைபுலம் மிக்குப் பன்மாண் குணங்கட்கிடனாய்ச் செந்தமிழ்ச் சிவநெறி நலங்கள் சிறந்து, வையத்து வாழ் வாங்கு வாழ்ந்தொளிர்ந்த இப்புலவர் பெருந் தகையின் மாட்சிமைகள், பெரிதும் போற்றிப் பாராட்டத் தக்கனவாகும்.

முடிவுரை :

'சிறந்த இனிய நல்ல பெருங் கவிஞர்கள் எவரும் குற்றமற்ற தூய ஒழுக்கமும், முற்றிய பேரறிவும், நற்றவப் பேறும் உடையவர்களாக விளங்குவர்' என்னும் உண்மைக்கு, அந்தகக் கவி வீரராகவரின் புலமை வாழ்க்கை, சிறந்த சான்றாக மிளிர்ந் தொளிர்கின்றது.

—ஆசிரியர்.

செய்திச் சுருக்கம்

சங்கு தீர்த்த புஷ்கர மேளா

சமயத்துறையில் புனிதத் தலங்களுக்குச் செல்லுதல், புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல், ஆங்காங்குள்ள அருட்பொலிவார்ந்த மூர்த்திகளைத் தரிசித்தல், என்னும் மூன்று செயல்களும், மிகவும் முதன்மை வாய்ந்தனவாகும்.

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு, ஓர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

எனத் தாயுமானவர், மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றின் சிறப்பையும் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

நம் பாரதநாடு பழம்பெருநாடு. இதன்கண் எத்தனையோ பல புண்ணியத் தலங்கள் உள்ளன. அவ்வாறே, எண்ணிறந்தபல புனித தீர்த்தங்களும், நம் பாரத நாட்டை அணி செய் கின்றன. புகழ்மிகுந்த அப் புனித தீர்த்தங்களில், குறிப்பிட்ட சிறப்பான திருநாட்களில் நீராடுவது, நமது தீவினைகளைப் போக்கி, நமக்கு நலம் பல விளைவிக்கும். அரித்துவாரம், பிரயாகை, காசி, கன்னியாகுமரி முதலிய தலங்களில் நீராடுவது, மிகச் சிறந்த புண்ணியச் செயல்களாகக் கருதப் பெறுகின்றன.

அங்ஙனமே கோதாவரி புஷ்கரம், கிருஷ்ணாபுஷ்கரம், கும்பகோண மகாமகதீர்த்தம், திருக் கழுக்குன்றம் சங்குதீர்த்தம் முதலியவற்றில் நீராடி இறைவனை வழிபடுவதும், வேண்டும் நலங்களை யெல்லாம் விளைவிக்குப் மாண்பு வாய்ந்ததாகும்.

செங்கற்பட்டிற்கும் மகாபலிபுரத்திற்கும் இடையிலுள்ளதும், நாள்தோறும் இரண்டு கழுகுகள் இறைவனை வழிபட்டு உணவு அருந்திச் செல்வதனால் 'பட்சிதீர்த்தம்' என வழங்கப் பெறுவதும், ஆகிய திருக்கழுக்குன்றத்தில், மார்க்கண்டேய முனிவர் சிவபூசை செய்வதற்காகச் சங்குதோன்றிய சங்குதீர்த்தம் என்னும் தெய்விகத் திருக்குளம் உள்ளது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இத்திருக்குளத்தில் சங்கு தோன்றுவது வழக்கம். வியாழ பகவான் கன்னிகல் ஓரைக்குச் செல்லும் புனிதநாளில், திருக்கழுக்குன்றம் சங்கு தீர்த்தத்தில் நீராடுவது எண்ணிய பல நலங்களைத் திண்ணமாய் அளிக்கும் என்பர்.

3—10—68 வியாழன் மாலை, சங்கு தீர்த்த புஷ்கரமேளாவும், பஞ்சமூர்த்திகளின் உற்சவமும்; 4—10—68 வெள்ளிமாலை இலட்சதீபப் பெருவிழாவும், திருக்கழுக்குன்றத்திற் சிறப்புற நடைபெற்றன. பல நூறுயிரக்கணக்கான மக்கள் வந்து தரிசித்து மகிழ்ந்தனர்.

—ஆசிரியர்.

பாண்டிய நாட்டுத் தலங்கள்

(1) கூடல் ஆலவாய் :

இதற்கு மதுரை, நான்மாடக் கூடல், கடம்பவனம், துவாதசாந்தபுரம், பூலோக கைலாயம், கன்னிபுரீசம், சீவன் முக்திபுரம் எனப்பல பெயர்கள் வழங்கப்படும். இது பாண்டிய நாட்டின் தலைநகரம், கடைச் சங்கம் இருந்து தமிழாராய்ந்த தலைநகர். சோமசுந்தரப் பெருமான் 64 திருவிளை யாடல்கள் புரிந்தருளிய புண்ணியத் தலம். மூர்த்தி நாயனர் விபூதி, உருத்திராக்கம், சடைமுடி என்ற மூன்றனையும் துணைக் கொண்டு மும்மையால் உலகாண்ட சிவ நகரம். மங்கையர்க்கரசியார், குலச்சிறை யார், நெடுமாற நாயனர் ஆகியோர் எழுந் தருளி விளங்கிய சிறந்த தலம். மணிவாச கரின் வாழ்க்கையோடு தொடர்புடைய தாக விளங்கிய மாட்சிமையுடையது. தருமபுர ஆதீன முதற் பெருங்குரவர் ஆகிய குருஞான சம்பந்த சுவாமிகள், சொக்கலிங்கப் பெருமானைப் பெற்ற இடம். திருமலை நாயக்க மன்னர் காலத் தில், குமரகுருபர சுவாமிகள் மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ்பாட, அம்மையே ஒரு குழந்தை வடிவிற் போந்து அதனைக் கேட்கும் ஏற்றம் பெற்ற தலம்.

திருஞான சம்பந்தப் பெருமான், 'கூட லாலவாயிலாய்' 'மதுரை ஆலவாயிலாய்' எனக் குறிப்பதால் கூடல், மதுரை என்பன தலப்பெயராகவும்; 'ஆலவாய்' என்பது கோயிற் பெயராகவும் கொள்ளப்படு வதற்கு இடமுண்டு. இறைவன் சொக்க லிங்க மூர்த்தி. அம்மை மீனாட்சியம்மை. தல விநாயகர் சித்தி விநாயகர். தலவிருட் சம் கடம்ப மரம். தீர்த்தம் பொற்றாமரை, எழுகடல், வையை முதலியன. விமா னம் விண்ணிழி விமானம். இதனை இந்தி ரன் கொண்டு வந்து வைத்துச் சோமசுந் தரக் கடவுளைப் பூசித்தான். இவ் விமா னம் 8 யானைகளால் தாங்கப் பெறுவது. மன்று வெள்ளி மன்று; வெள்ளியம்பலம்; இரசத சபை எனவும் வழங்கும். இங்கே இராசசேகர பாண்டியனின் வேண்டு கோளுக்காகப் பெருமான் இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கிக் கால் மாறி ஆடினர்.

மதுரைக் கோயிலில் 14 கோபுரங்களும், பற்பல மண்டபங்களும் உள்ளன.

அட்டசக்தி மண்டபம், 46 அடி நீளமும், 18 அடி அகலமும், 25 அடி உயரமும் கொண் டது. கௌமாரி ரௌத்திரி வைணவி மகாலட்சுமி எக்ஞரூபிணி சாமளை, மகேசு வரி, மனேன்மணி ஆகிய எட்டு அம்பிகை களின் சிலைகள் இங்கு இடம்பெற்றுள்ளன. மற்றும் இங்குத் திருவிளையாடற்புராண சம் பந்தமான ஓவியங்களும், பிறவும் அழகுற வரையப்பட்டுள்ளன. 16:3 ஆம் ஆண்டில், திருமலை நாயக்கரின் பட்ட மனைவியரான உருத்திராபதி அம்மையும், தோளி அம் மையும் இதனைக் கட்டுவித்தனர்.

இதனை அடுத்து 160 அடி நீளமும், 110 அடி அகலமும் உள்ளதாய் விளங்குவது, மீனாட்சி நாயக்கர் மண்டபம். இஃது ஒரே கல்லிற் செதுக்கப்பெற்ற 22 அடி உயர முள்ள, 110 தூண்களை 6 வரிசைகளாகக் கொண்டுள்ளது. இது கி. பி. 1707 இல் கட்டப் பெற்றது. இதன் மேற்குக் கோடி யில் உள்ள 1008 விளக்குகளைக் கொண்ட பித் தளைத் திருவாச்சி, மருது பாண்டியரால் (1778-1801) அளிக்கப் பெற்றது.

சித்திரக் கோபுரம், 7 நிலைகளையுடையது. உயரம் 117 அடி. அடித்தளம் 38 அடி அகலமும், 78 அடி நீளமும் உடையது. இதில் 730 சுதைச் சிற்பங்கள் உள்ளன.

கி. பி. 1569இல் காளத்தியப்ப முதலியார் இதனைக் கட்டினார். முதலிப்பிள்ளை மண்டபம்.கடந்தை முதலியார் என்பவரால் கி. பி. 1613 இல் கட்டப்பெற்றது. 25 அடி அகலமும், 60 அடி நீளமும் உள்ளது. பிட்சாடனர், தாருகவன முனி பத்தினியர் முதலிய அழகிய சிற்பங்கள் இங்கே இருக்கின்றன. பொற்றாமரைக் குளம் 165 அடி நீளமும், 120 அடி அகலமும் அமைந்தது. இதன் தெற்குப் புறச் சுவரில், திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசி வாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் நன்கொடையால், திருக்குறளின் 1330 குறட்பாக்களும் சலவைக்கற்களில் செதுக்கிப் பதிக்கப் பெற்றுள்ளன.

ஊஞ்சல் மண்டபம், கி. பி. 1563இல், செட்டியப்ப நாய்க்கர் என்பவர் கட்டுவித்தது. கிளிக்கூட்டு மண்டபத்தின் 28 தூண்களிலும் அழகிய பல சிற்பங்கள் விளங்குகின்றன. அம்மன் கோயிலின் வாயிற் கோபுரம் கி. பி. 1227 இல் சேம்பத்தூர் ஆனந்தத் தாண்டவநம்பி என்பவர் கட்டியது. 40 அடி உயரமும், 3 நிலைகளும் கொண்டது. அம்மன் கோயிலின் நீளம் 225 அடி, அகலம் 150 அடி.

நடுக்கட்டுக் கோபுரம் என்பது, சிராமலைச் செவ்வந்தி மூர்த்திச் செட்டியார் கி. பி. 1559 இல் கட்டியது. ஐந்து நிலை கொண்ட இக்கோபுரத்தில் 112 சுதைச் சிற்பங்கள் அமைந்துள்ளன.

இரண்டாம் பிராகாரத்தின் வெளிச்சுற்று மதில், 'சுந்தரபாண்டியன் மதில்' எனப்படும். இது 420 அடி நீளமும், 31 அடி அகலமும் அமைந்தது. உட்சுற்று மதில் 'கபாலி மதில்' என வழங்கும். இது 250 அடி நீளமும், 156 அடி அகலமும் உடையது.

முதற் பிராகாரத்தின் வடகிழக்கு மூலையில் 100 கால்கள் கொண்ட "மண்டப நாயகம்" உள்ளது. இங்குக் கூத்தப் பெருமான் எழுந்தருளியுள்ளார். இதனைக் கி. பி. 1526 இல் சின்னப்ப நாயக்கர் என்பவர் கட்டினார்.

இரண்டாம் பிராகாரத்தில் சுவாமி சந்நிதியில் 'கம்பத்தடி மண்டபம்' உள்ளது. இங்குள்ள 8 தூண்களிலும் சிற்பங்கள் கண்கவரும் வனப்பினவாக உள்ளன. இதனைக் கி. பி. 1564 இல் கிருஷ்ண வீரப்ப நாயக்கர் அமைத்தார். ஏழு கோயில் நகரத்தார்கள், இதனை மிகவும் அழகுறப் புதுப்பித்தனர்.

சுவாமி கோயிலின் வாயிற் கோபுரம் 3 நிலைகளையுடையது. இதனைக் கி. பி. 1168 இல் கட்டுவித்தவர் குலசேகர பாண்டியர். உள்ளே நுழைந்தால் ஆறு கால் பீடம் உள்ளது. இங்கேயே பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணமும், குமரகுருபர அடிகளின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், அரங்கேற்றப்பெற்றன. வெள்ளியம்பலம் நடராசர் கோயிலின் தளவரிசை முதலியவற்றை, வீரப்ப நாயக்கர் (கி. பி. 1572-1595) செய்வித்தார்.

வீரவசந்தராயர் மண்டபம், கி. பி. 1611 இல் திருமலை நாயக்கரின் தமையனரான முத்து வீரப்ப நாயக்கர் கட்டியது. ஆயிரக் கால் மண்டபம் தளவாய் அரியநாத முதலியார் (கி. பி. 1569) கட்டியது. சேர்வை காரர் மண்டபம், பெரிய மருது (கி. பி. 1778-1801) கட்டுவித்தது. கல்யாண மண்டபம். விசயரங்க சொக்கநாதர் (கி. பி. 1706-1732) கட்டியது.

இங்குள்ள கோபுரங்களில் தெற்குக் கோபுரமே மிகவும் பெரியது. இதன் உயரம் 160 அடி, அகலம் 67 அடி, அடித்தளத்தின் நீளம் 168 அடி. இதில் 1511 சுதை யுருவங்கள் உள்ளன.

மேற்குக் கோபுரம் பராக்கிரமபாண்டியன் (கி. பி. 1315-47) கட்டியது. உயரம் 154 அடி, அகலம் 63 அடி, அடித்தளத்தின் நீளம் 101 அடி. இதில் 1124 சுதை வேலைகள் உள்ளன.

வடக்குக் கோபுரம் 9 நிலைகளை உடையது. கிருஷ்ண வீரப்ப நாயக்கர் (கி. பி. 1564-72) இதனைக் கட்டினார். உயரம் 152 அடி, அகலம் 66 அடி, அடித்தளத்தின் நீளம் 111 அடி. இதில் 404 சுதைச் சிற்பங்கள் உள்ளன.

கிழக்குக் கோபுரம் மிகவும் பழமையானது. 9 நிலைகளையுடையது. மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி. பி. 1216-38) கட்டியது. இதன் உயரம் 153 அடி, அகலம் 65 அடி, அடித்தளத்தின் நீளம்

111 அடி. இதில் 1011 சுதை வேலைகள் செயயப்பட்டிருக்கின்றன.

புதுமண்டபம், கீழைக் கோபுரத்திற்கு எதிரில் உள்ளது: 333 அடி நீளமும், 105 அடி அகலமும் உடையது. 25 அடி உயர முள்ள 124 தூண்கள், நான்கு வரிசை களில் அமைந்துள்ளன. இங்குப் பல சிறந்த அழகிய சிற்பங்கள் உள்ளன. இதனையும், நாயக்கர் மகால், வண்டியூர்த் தெப்பக்குளம் முதலியனவற்றையும், திரு மலை நாயக்கர் (கி. பி. 1623-59) கட்டினர். தெப்பக்குளத்தின் நீளம் 1000 அடி. அகலம் 950 அடி.

சொக்கலிங்கப் பெருமானுக்கு அட்டாலைச் சேவகன், அடியார்க்கு நல்லான், அதிர வீசி ஆடுவான், அபிடேகச் சொக்கன், பண்ணிசைச் சொக்கன் முதலான பல பேர்கள் வழங்குகின்றன. அம்மைக்கு அபிஷேகவல்லி, சண்பகவல்லி, கர்ப்பூர வல்லி, மரகதவல்லி, அங்கயற்கண்ணி, தமிழறியும் பெருமாட்டி எனப்பல பெயர் கள் வழங்கும்.

மதுரை தொன்று தொட்டே வரலாற்றுப் புகழ் பெற்ற சிறந்த தொன்மை வாய்ந்த நகரம். கி. மு. 302 இல் பாடலி புரத்தில் அரசாண்ட சந்திரகுப்தனின் அவைக்கு, ஸெல்யூக்கஸ் நிகேதார் என்னும் கிரேக்க அரசனின் தூதனுக வந்த மெகஸ்தனீஸ் பாண்டிய நாட்டையும், மதுரையையும் குறிப்பிடுகின்றார். கி. பி. 140இல் வாழ்ந்த தாலமி என்பவராலும் மதுரை குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள் மதுரையின் இயற்கை வளத்தைப் புகழ்ந்து போற்றியுள்ளன. "மதுரைக் காஞ்சி" என்பது மிகவும் புகழ் பெற்ற சங்ககாலப் பனுவலாகும்.

இங்குப் பற்பல கல்வெட்டுகள் உள்ளன. சடாவர்மன் குலசேகர பாண்டியன் (1162-1176), மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1216-1238), பராக்கிரமபாண்டியன் (1422-63), வீரபாண்டியன் (1166-80), ஸ்ரீ வல்லபன் (832-860) முதலிய அரசர் பலரின் கல்வெட்டுக்கள் இங்குக் கிடைத்துள்ளன.

கிருஷ்ணப்ப நாயக்கர், இராணிமங்கம்மாள் (கி. பி. 1688-1706), முதலியவர்களும் இங்குப் பல அறச் செயல்களை நிகழ்த்தியுள்ளனர். கி. பி. 1572 முதல் 1595 வரை அரசாண்ட வீரப்ப நாயக்கர், கம்பத்தடி மண்டபத்தைக் கட்டினர். சத்தியஞான தரிசினி மடம், நரலோக சூரியன் திருமடம், அன்னதான மடம் என்பன பலவும் இங்கு விளங்கிய செய்தி கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் அனல் வாதம், புனல் வாதம் முதலியன செய்து, சைவ சமயத்தை நிலை நிறுத்திய பெரும் சிறப்பு உடையது மதுரை. மீனாட்சியம்மை அரசு புரியும் பேறு பெற்ற தலைநகரம் இது. இங்கே முருகப் பெருமானும் உக்கிர குமார பாண்டியராகத் திருஅவதாரம் செய்து அரசாட்சி புரிந்தார். பரஞ்சோதி முனிவர் அருளிச் செய்த திருவிளையாடற் புராணம் போன்ற பற்பல நூல் களால், இத்தலத்தின் அருமை பெருமைகளை யாவரும் இனிதுணரலாம்.

(தொடரும்)

—ஆசிரியர்.

விளக்கிட்டார் பேறு

விளக்கினாற் பெற்ற பேறு மெழுக்கினாற் பதிற்றி யாகும்
துளக்கில்நன் மலர் தொடுத்தால் தூயவிண் ஏற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானம் ஆகும்
அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளு மாறே.

—திருநாவுக்கரசர்.

ஸ்ரீராமாயண ரசப்பிரவாகம்

மகாவித்துவான். ஸ்ரீமத். பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்

(கா ஞ் சி பு ர ம்.)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில், வால்மீகி நாரத சம்வாதத்தில், 'ஆத்மவான் யார்?' என்கிற பன்னிரண்டாவது வினு விவரிக்கப்படுகிறது. ஆத்மவான் என்பதற்கு ஆத்மாவையுடையவன் என்ற பொருள். ஆத்மா என்பதற்கு ஐந்து பொருள்கள் வடமொழி நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளது; "ஆத்மா ஜீவே த்ருதௌ தேஹே ஸ்வபாவே பரமாத்மநி" என்னும் நிகண்டுவை முன்னோர்களான வியாக்கியான கர்த்தாக்கள் (ஸ்ரீகோவிந்த ராஜர்) எடுத்துக் காட்டியுள்ளார்கள். அவ்வைந்து பொருள்களாவன-சீவாத்மா, தைரியம், உடல், இயல்பு, பரமாத்மா என்பன. இவ்வைந்து பொருள்களும் இராமபிரானிடத்துப் பொருந்துமாற்றை இனி விளக்குவோம்.

சீவாத்மாக்களையுடையவன் என்பது முதற்பொருள். பரமாத்மா ஒருவனே யுளனென்றும், மற்று சேதநா சேதநப் பொருள்கள் கிடையாவென்றும், அவை யுள்ளதாகத் தோன்றுவது மாயாவிலசிதம் என்றும், ஒரு சாராருடைய கொள்கை யுளது. அங்ஙனல்லாமல் இராமன் பரமாத்மாவா யிருந்துகொண்டு சகல சீவாத்மாக்களையும் அடிமையாகக் கொண்டவன் என்றபடி. சீவாத்மாக்களை யுடையவன் என்கிற பொருள் தவிர, சீவாத்மாவா யிருக்குந் தன்மையையுடையவன் என்கிற பொருளும் ஏற்கும். (ஆத்மவான் என்றது ஆத்மத்வவான் என்றபடி). ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே இராமனுக அவதரித்தானென்று பரமார்த்தம் இருக்கச் செய்தேயும் *பிதரம் ரோசயாமாஸ'' என்றும் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்* என்றும் சொல்கிறபடியே மனித வயிற்றிற் பிறந்து தசரதாத்மஜனுக ஒரு சீவாத்ம பாவத்தைத் தன்பால் ஆவாகனம் செய்து கொண்டானுகையாலே அதற்குச் சேரும் இப்பொருள். சகலாத்மாக்களுக்கும் சேஷியாய், அனைவரும் தனக்குச் செய்யும் கைங்கரியங்களைக் கொள்ளுமவனுய் ஆனது பற்றியே, பரமாத்மாவாயிருப்பவனுன சர்வேச்வரன் இராமனுய்த்தோன்றி, தான் கைங்கரியம் செய்யும் சீவாத்மாவாயினன் என்க. யாருக்குக் கைங்கரியம் செய்தான் என்னில்; இது கேண்மின்.

இராமனுடைய கிங்கரத்தன்மை :

விசுவாமித்திர முனிவன் தான் ஒரு வேள்வி செய்வதாகத் தொடங்கி அதனை இடையூறின்றி நிறைவேற்றுதற் பொருட்டுத் தசரதமன்னவனிடம் வந்து இராமனைத் தருகவென்று இரந்தனன். அதற்குத் தசரதன் உடன்படவில்லை. அரக்கர்களோடு போர்புரியத்தக்க பருவமின்றிக்கே மிக இளையவனுன, என் சிறுவனை நான் உன்னேடு அனுப்பமாட்டேன் என்றனன். அதற்கு முனிவன் மன்னவனை நோக்கி 'இவனது பெருமையை நீ அறிந்திலை, அறப்பெரியோனுன இவனை மிகச் சிறியவனுக நீ நினைக்கிருய் அத்தனை. ''வேதாகமேதம் புருஷம் மகாந்தம்'' என்று வேதமோதின மகாபுருஷன் அன்றே இவன்; இவனை யுள்ளபடியே யானறிவேன்; நான் மாத்திரமல்ல, இதோ உன்னெதிரில் வீற்றிருக்கின்ற நற்றவ மாமுனிவர்களும் நன்கறிவர்' என்று இனைய பலவும் சொல்லி, ஸ்ரீராமலட்சுமணர்களைக் கொண்டு சென்ருன். தந்தையாரிடம் இங்ஙனே முனிவன் பேசின பேச்சுக்களையெல்லாம் ஏகாந்தத்தில் கேட்டுக்கொண்டிருந்த ராமன் 'சேஷபூதனுய்ப் பரதந்திரனுய் வந்து பிறக்கவேணுமென்று

ஆசைப்பட்டு வந்து பிறந்த நம்மை இவர் பரமாத்மாவென்று வெளியிட்டு விட்டாரே! இது நமது நினைவுக்குத் தகுதியன்றே; மேலும், இந்த விசுவாமித்திரர் இதுவரையில் எத்தனையோ அரிய பெரிய வேள்விகளையும் தவங்களையும் இயற்றியிருக்கிறார்; அப்போது ஒருவரையும் துணைவேண்டினவர் அல்லர் இவர்; இப்போது மிகச் சிறிதாகச் செய்ய நினைத்திருக்கிற, ஆறு நாளைய வேள்விக்குத் துணை வேண்டி வந்தது வெறுமன் அல்ல; ஏதோவொரு விசேடத்திற்காகத்தான் இருக்கவேண்டும்; நம்மை ஏவிக் காரியங்கொள்ள நினைத்தே (அதாவது) நாம் ஆசைப்பட்ட சேஷத்துவத்தை உலகமறியச் செய்வதற்கே நம்மை வேண்டிவந்தார் போலும்' என்று எண்ணி இராமன் அம்முனிவரிடம் ஒன்று விண்ணப்பஞ் செய்தான்:—

"இமௌ ஸ்ம முநிசார்தூல!
கிங்கரௌ சமுபஸ்திதௌ
ஆஜ்ஞாபய யதேஷ்டம்
வை சாசநம் கரவாவ கிம்."

என்றான்; இதன் பொருளாவது, "முனிசார்வபௌமரே! நானும் என் தம்பியான லட்சுமணனும் உமக்குப் பணிவிடைசெய்ய வந்தவர்கள்; எப்போதும் உமதருகிலேயே இருந்து நீர் ஏவும் குற்றேவல்களைச் செய்ய நாங்கள் இருவரும் காத்திருக்கிறோம்; நீர் கூசாமல் எங்களுக்கு எவ்விதமான கட்டளையும் செய்யலாம். உமக்கு என்ன பணிவிடை செய்யப்பெறுவோமென்று எதிர்பார்த்திருக்கிறோம்" என்றபடி.

இந்தச் சுலோகத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ள 'கிங்கர' பதம் மிகச் சிறந்தது. 'என்செய்வேன்!' 'என்செய்வேன்!!' என்று கைகூப்பி நிற்பவனுக்குக் கிங்கரன் என்று பெயர். அல்லது, 'என் செய்தான்! என் செய்தான்! என்று சுவாமியினால் புகழப்படுமவன் கிங்கரன் என்றலுமுண்டு. இப்படிப்பட்ட கிங்கரன் என்னும் சொல்லை ஏற்றுக்கொண்டு பணிவிடை செய்யுந் தன்மை தனக்குண்டென்று காட்டுவதற்கே, இராமபிரான் விசுவாமித்திர முனிவனைத் தனது தந்தையிடம் வரவழைத்துத் தன்னைத் துணைவேண்டும்படி செய்து கொண்டனன் என்று தத்துவம் அறியக் கிடக்கின்றது. ஆக, கைங்கரியம் செய்வதென்பது சீவாத்மாவின் தன்மையாதலால் இப்படிப்பட்ட சீவாத்மத்துவத்தையும் இராமபிரான் உடையவனென்பது பற்றியே 'ஆத்மவான்' எனப்பட்டனன் என்றதாயிற்று.

தைரியம் :

இனி, ஆத்மா என்பதற்கு இரண்டாவது பொருள் தைரியம் என்பது; அதனையுடையவன் இராமன். தைரியமாவது துணிவு; எதற்கும் சளைக்காமல் கொண்ட கொள்கையை நிறைவேற்றியே நிற்கவல்ல மனவுறுதியே யாகும் அது. இதனை நாம் இராமாயணத்தில் பல விடங்களில் பார்க்கலாம். ஆனாலும் ஓரிடம் எடுத்துக்காட்டுவோம். விபீஷணாழ்வான் இராவணனால் விலக்கப்பட்டு "த்யக் த்வா புத்ராம்ச்ச ராகவம் சரணம் கத:" என்று வந்துசேர்ந்தபோது வானரவீரர்கள் பெரும்பாலார் "இவன் இராவணனது தம்பி; இவ்விடத்து உளவறிந்துகொண்டுபோக வந்தவனே யல்லது உண்மையான பக்தியுடன் வந்தவனல்லன்; இவனை நாம் சேர்த்துக் கொள்ளவே கூடாது; சேர்த்துக்கொண்டால் குடிகெட்டுப்போய்விடும்" என்றிப்படி பலவாறு தடைமொழிகளைச் சொல்ல, மறுப்புரைத்து, சரணாகத பரித்ராணம் செய்தேதீருவேனென்று பேசினன். அப்படி பேசியுங்கூட மறுபடியும் சுக்கிரீவ மகாராஜன் நிலை நின்று பல ஏதுக்களைப் பகர்ந்து 'இவனைச் சேர்த்துக்கொள்ளவே கூடாது' என்று விரிவாக ஆட்சேபித்தனன். அவ்வாட்சேபம் குரங்குகளோடு நில்லாமல், இளையோனாகிய லட்சுமணனுங்கூட அவ்வாட்சேபத்தில் கலந்து கொண்டனன். அதனை வால்மீகி முனிவர்,

"ஏவமுக்தஸ் துராமேண
சுக்ரீவஸ் சலக்ஷ்மணஸ்:
உத்தாயேதம் மகாப்ரஜ்ஞ
ப்ரணதோ வாக்ய மப்ரவீத்."

என்ற சுலோகத்தினால் காட்டியுள்ளார். இப்படி இளையபெருமாளும் உட்படப் பலரும் ஆட்சேபிக்கச் செய்தேயும், பெருமாள் தாம் பக்தபராதீனராகையாலே, இவர்களை அநுவர்த்திக்கவேண்டி யிருக்கச் செய்தேயும், தம்முடைய மனவுறுதியில் நின்று எள்ளளவும் தளர்ந்திலர், அப்போது அவர் சொன்னவார்த்தைகள் அவருடைய ஆச்சரியமான தைரியத்தை வெளிக்காட்டி நின்றன. அவற்றுள் ஒரு சுலோகம் கேண்மின்;

"பிசாசாந் தாநவாந் யக்ஷாந்
ப்ருதிவ்யாஞ்சைவ ராக்ஷசாந்,
அங்குல்யக்ரேண தாந் ஹந்யாம்
இச்சந் ஹரிகணேச்வர."

இதன் பொருளாவது—"சுக்ரீவ! இந்த விபீஷணனை நாம் சேர்த்துக்கொண்டால் நமக்கு ஏதோ பிரளயமான அபாயம் நேர்ந்துவிடும் என்றே நீ நினைத்திருப்பது; இந்தவொரு ராக்ஷசனல்ல; பூமண்டலம் முழுவதிலுமுள்ள சகல ராக்ஷசர்களுமொன்றுகூடி மற்றுமுள்ள பிசாச தானவ யட்சாதிகளையும் துணைகூட்டிக் கொண்டு வரட்டும்; அசுரராட்சசப் பூண்டுகள் அத்தனையும் ஒன்றுசேர்ந்து எதிரிட்டு வந்தாலும், எனக்கு வில் வேண்டா, அம்புகள் வேண்டா, கையும் வேண்டா; ஒரு சுண்டுவிரல் நுனியினால் அந்தச் சத்துருவர்க்கம் அனைத்தையும் அவலீலையாகக்கொன்று தொலைப்பேன்காண்; அவலீலையென்றாலென்ன; (இச்சன்) கேவலம் இச்சாமாத்திரத்தினால்,(அதாவது சங்கல்ப மாத்திரத்தினால்) தொலைத்திடுவேன் என்றபடி.

ஆக, இப்படிப்பட்ட தைரியத்தை வெளியிட்டுத் தம்முடைய உறுதியில் இருந்து சிறிதும் வழுவாமே நழுவாமே நின்று, சரணாகதபரித்திராணத்தைச் செவ்வனே செய்து முடித்தவராதலால், இத்தகைய துணிவுடையவர் என்பது ஆத்மவான் என்றதன் பொருளாகும்.

திவ்விய தேகம் உடையளன் :

இனி ஆத்மா என்பதற்கு மூன்றாவது பொருள் தேகம் என்பது. தேகமுடையவன் யாவன்? என்று கேட்கிறவாறு. உலகில் தேகிகளாகப் பிறக்கின்றவர்கள் யாவரும் தேகமுடையவர்களாயிருக்க, இப்படியொரு கேள்வி கேட்கவேணுமோ வென்று தோன்றும். கேண்மின், உபநிஷத்துக்களில் சில மூலைகளில் பகவானுக்குக் கையில்லை, காலில்லை, கண்ணில்லை, காதில்லை, உடலேயில்லை என்று ஓதிக்கிடக்கிறது. "அபாணிபாதோ ஜவநோக்ரஹீதா பச்யத்சக்ஷுஸ் ச்ருணோத்யகர்ண" என்றும், "அசக்ஷுச் ச்ரோத்ரம பாணிபாதம்" என்றும். இதுகொண்டு சில மதாந்தரஸ்தர்கள் பகவானுக்குச் செவி வாய் கண் மூக்கு உடல் இல்லையென்று பிரவசனம் செய்துவருகிறார்கள். ஆனால் அந்த வேதங்களிலேயே,

"விச்வதச்சக்ஷுருத விச்வதோமுகோ
விச்வதோஹஸ்த உத விச்வதஸ்பாத்"
"சகஸ்ரசீர்ஷா புருஷஸ்
சகஸ்ராக்ஷஸ் சகஸ்ரபாத்"

என்றுமுள்ள பகுதிகள் அந்த பகவானுக்கு ஆயிரம் ஆயிரமான உறுப்புகளிருப்பதாக அறைகின்றன. உறுப்புகளில்லையென்று ஒருபுறம் சொல்லுவதும், ஆயிரக்கணக்கான உறுப்புகளுள்ளனவென்று மற்றொரு புறம் சொல்லுவதுமாய் இருந்தால், இது முரணான பேச்சன்றோ; யதார்த்தவாதியான வேதம் இப்படி முரணாகப் பேசலாமோ? பகவானுக்குத் தேகமுண்டா இல்லையா? உண்டானால் உண்டென்று சொல்லுவது, இல்லையானால் இல்லையென்று சொல்லுவது, இரண்டுவிதமாகவும் பிசிறிச் சொன்னால் இதுபொருத்தமாக இல்லையே! என்று சாமானியர் சிந்திப்பதுண்டு. இங்கு உண்மை யென்னவென்றால், நம்போல்வார் பெற்றிருக்கின்ற —பெறுகின்ற தேகங்களானவை கருமம் அடியாக (அதாவது புண்ணியம் பாவம் என்கிற இருவினைப் பயனாக) நேருமவை; பகவான் கொள்ளுகின்ற தேகங்கள் அப்படி கர்ம நிபந்தனமன்றிக்கே "இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:" என்று பராசர மகரிஷி பணித்தபடியே அடியார்களின் இச்சையையும் தன்இச்சையையும் அநுசரித்துக் கொள்ளப்படுமவை. அன்றியும் "உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்இமையோர் தலைவா!" (திருவிருத்தம்—1) என்று ஆழ்வார் அருளிச் செய்கிறபடியே சம்சாரி சேதன சம்ரட்சணார்த்தமாகக் கருணையாலே கொள்ளப்படுமவை.

ஆக, பகவானுக்குத் தேகமில்லையென்று சொல்லுமிடங்கள் நல்வினை தீவினைப் பயனான தேகமில்லை என்றன; பகவானுக்குத் தேகமுண்டென்று சொல்லுகிறவிடங்கள் கருணையடியான அப்பிராக்ருததேகம் உண்டென்கின்றன. ஆதலால் ஒரு விரோதமுமில்லையென்று வேதாந்திகளின் நிர்வாகம். இதையுட்கொண்டே, வான்மீகி முனிவர் 'திவ்ய தேகமுடையவன் யாவன்'? என்று கேட்கிறபடி. ஆண்களையும் பெண்ணுடையுடுக்கச் செய்யவல்ல பரமசுந்தர விலக்ஷண திவ்யமங்கள விக்கிரகமுடையவன் யாவன்? என்று கேட்டவாறுமாம்.

பக்த பராதீனன் :

இனி ஆத்மாவென்பதற்கு நான்காவது பொருள் சுவபாவமென்பது. சுவபாவமுடையவன் யாவன்? என்று ஒரு கேள்வியுண்டோ? இது அசம்பாவிதமான கேள்வியாதலால், இதன் கருத்தை வேறுவிதமாகக் கொள்ளவேணும்; எவ்விதமான சுவபாவமுடையவன்? என்று கேட்பதாகக் கொள்ளவேணும்.

பரதாழ்வான் சித்திரகூடத்தில் வந்து இராமனைத் திருவயோத்திக்கு மீண்டெழுந்தருளவேணுமென்று வேண்டிக்கொண்ட போது பெருமாள் அது முடியாதென்ன, அப்போது வசிஷ்ட முனிவன் சொல்லுகிறான் பெருமாளை நோக்கி,

> "பரதஸ்ய வசஸ்: குர்வங்
> யாசமாநஸ்ய ராகவ!
> ஆத்மாநம் நாதிவர்த்தேதாஸ்
> ஸத்யதர்மபராக்ரம-"

என்று. இந்தச் சுலோகத்தின் பொருளைத் திருவாய்மொழியீட்டில் (2—7—4) "தேவுந்தன்னையும்" என்றவிடத்து நம்பிள்ளை அருளிச் செய்கின்றார்காண்மின்;—"தேவு மென்கிறது ஐச்வர்யத்தை; தன்னை யென்கிறது ஆச்ரிதபாரதந்தர்யத்தை; அதிறே தானான தன்மை. 'ஆத்மாநம் நாதிவர்த்தேதா,' என்றானிறே. 'ஆத்மபூதம் பரதம்நாதிவர்த்தேதா:' என்கிறானென்று சிலர் சொல்லுவர்கள், பட்டர், நீரான தன்மையாகிறது ஆச்ரித பரதந்த்ரராகை. உம்முடைய தம்பி சொன்ன வார்த்தையை மறுத்து நீரானதன்மையை இழவாதே கொள்ளுமென்கிறானென்று" என்கிறவிது ஈட்டு ஸ்ரீ சூக்தி. இதனால் தேறுகிறது என்னென்னில்; அடியார்களிட்ட வழக்காயிருக்கையாகிற ஆச்ரித பாரதந்திரியமே இராமனுக்கு இயற்கை என்பதாம். ஆக, பக்த பராதீநனுவன் யாவன்? என்று கேட்டபடியாகிறது. 'இராமன் பக்தபராதீநனுயிருந்து செய்த செயல்களைச் சொல்லும்' என்று நாரத முனிவரை வான்மீகி கேட்டதாக ஆயிற்று. இராமன் அங்ஙனம் பக்த பராதீனனுயிருந்து செய்த செயல்களில் ஒன்று சொல்லுகேன் கேண்மின்;

இராமன் வாலிவதம் செய்த செயல் உலகப்பிரசித்தம். அவனை வதஞ்செய்ய வேண்டிய குற்றமிருந்துதான் பெருமாள் வதஞ்செய்தார் என்பது உண்மையாயினும் உலகில் குற்றவாளனைத் தண்டிக்கின்ற பிரபுக்கள் அவனை நேரில் வரவழைத்து விசாரித்துத் தண்டிப்பதுண்டேயல்லது எதிர்த்தலையின் சொல்மாத்திரமே கொண்டு வதஞ்செய்துவிடுவதில்லை; அந்த முறையில் பெருமாள் வாலியை நேரில் விசாரித்தே செய்திருக்கவேண்டும். அப்படி செய்ததாக ஸ்ரீ ராமாயணத்திற் காணவில்லை. கீழே கபந்தவதம் செய்தபோது, அவன் விமானத்திலிருந்துகொண்டு சுக்ரீவனுடைய நன்மையையும் வாலியினுடைய தீமையையும் சொல்லியிருக்கிறான்; அவன் பொய் சொல்லியிருந்தானாகில் அவனை விமானம் தாங்கி நிற்காது. தாங்கி நின்றபடியால் கபந்தன் சொல்வது சத்தியந்தானென்கிற நம்பிக்கை இராமனுக்குத் திடமாக வுண்டாயிற்று. அதனால் சுக்கிரீவனிடத்திலே சிறந்த மதிப்புவைத்து அவனைப் பரமபக்தனாகத் திருவுள்ளம்பற்றி அவனுக்குப் பரதந்திரனாய் அவன் சொற்படி, அவனுடைய உகப்புக்காக வாலிவதம் செய்தார் பெருமாள்—என்று, நம் ஆசாரியர்கள் நிர்வகிப்பதுண்டு. இதனை இங்கு அறிக.

பரமாத்ம பாவம் :

இனி ஆத்மாவென்பதற்குப் பரமாத்மா வென்பது ஐந்தாவது பொருள்; பரமாத்மாவையுடையவன் யாவன்? என்று (அதாவது) பரமாத்மாவாயிருக்குந்தன்மையையுடையவன் யாவன்? என்று கேட்கிறபடி. "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்று தானே சொன்னபடி, ஒரு மனிதனாகப் பிறந்திருக்கச் செய்தேயும் பரமாத்மாவாயிருக்குந் தன்மையிலும் குறையற்றவன். இராமனுடைய உண்மைத் தன்மையை மறைத்து மறைத்துப் பேசுகிற வான்மீகி முனிவரும், அயோத்யாகாண்டத்தின் தொடக்கத்தில்;

> "ஸஹி தேவைருதீர்ணஸ்ய
> ராவணஸ்ய வாதார்த்திபி:
> அர்த்திதோ மாநுஷே லோகே
> ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸ்நாதந:"

என்று வெட்டவெளிச்சமாக்கி வைத்தார். இவ்விராமபிரானே கண்ணபிரானாகத் திருவவதரித்து கீதாசாத்திரம் அருளிச்செய்கிறபோது, அதில் அவதார ரகசியத்தைக் கூறிவருமிடத்து (4—6), "அஜோபி ஸந் அவ்யயாத்மா பூதாநா மீச்வரோபி ஸந்,

ப்ரக்ருதிம் ஸ்வாமிதிஷ்டாய ஸம்பவாம் யாத்மமாயயா'' என்கிருன். பரமாத்மாவாயிருக்குந் தன்மையையும் விடாமலே வந்து பிறப்பதாக இதில் தானே சொல்லிவைத்தானாயிற்று. ஆகவே, ஜீவாத்மாவாயிருக்குந் தன்மையோடுகூட பரமாத்மாவாயிருக்குந் தன்மையையும் தாங்கிக் கொண்டிருப்பவன் யாவன்? என்றுகேட்ட தாயிற்று. இராமாவதாரத்தில் பரமாத்வாயிருந்து செய்த செயல் எதுவென்று பார்க்க வேணும்.

ஜனஸ்தானத்தில் கரதூஷணுதிவதம் செய்தபோது ''சதுர்தச சகஸ்ராணி ரக்ஷசாம் பீமகர்மணும், ஏகச்ச ராமோ தர்மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி'' என்கிறபடியே பதினுலாயிரம் ராக்ஷசர்களோடு இராமன் தன்னந்தனியே எப்படி போர் புரிய வல்லவன்? என்று ஆகாச சாரிகள் கலங்கி நிற்க, பெருமாள் அசகாயசூரராயிருந்து நொடிப்பொழுதில் அத்தனை யரக்கர்களையும் முடித்தது பரமாத்மபாவத்திற்குத்தான் பொருந்துமென்று சிலர் சொல்லுவதுண்டு. தசரதன், கார்த்தவீரியன் முதலானுரும், இங்ஙனே பலபெரும் போர்கள் செய்ததுண்டாகையால், இது பரமாத்மபாவத்திற்கே அசாதாரணமென்று கொள்ளவேண்டியதில்லை. ''மயாத்வம் சமநுஜ்ஞாதோ கச்சலோகாநநுத்தமாந்'' என்று சொல்லி ஜடாயு மகாராசர்க்கு மோட்சம் கொடுத்திருக்கிருர் பெருமாள்; மோட்சம் கொடுத்தல் என்பது பகவானுக்கே அசாதாரணமாகையால் இந்த சரித்திரத்தினுல் பரமாத்மத்தன்மை தெரியவரும் என்று சில பெரியார் சொல்லுவர். இங்குங்கூட ''சத்யேந லோகாந் ஜயதி'' என்கிற பிரமாணத்தைக்கொண்டு ஜடாயுவுக்கு மோட்சமளித்தது பரமாத்ம பாவத்தினுலன்று, சத்தியவாக்கின் மகிமையினுல்தான் என்று நம்பிள்ளை முதலான ஆசார்யர்கள் நிர்வகிப்பதுண்டு. அது இராமனது மனுஷ்யபாவனையோடு பொருந்த வைப்பதற்காகவே யாதலால், அதனுல் பரமாத்மபாவம் பொலிந்ததென்னத் தட்டில்லை.

ஆக, ''ஆத்மா ஜீவே த்ருதௌ தேஹே ஸ்வபாவே பரமாத்மநி'' என்று நிகண்டிற் காணும் பொருள் ஐந்தும், ஆத்மவான் யார்? என்ற வினவில் பொருந்தினபடியை விவரித்தோமாஞேம்.

(தொடரும்)

செய்திச் சுருக்கம்

குருபூசை விழா: சென்னைத் தியாகராய நகர்த் தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தில், சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ அருள்நந்தி சிவத்தின் குருபூசையும் வழிபாடும் சிறப்புற நடைபெற்றன. அப்போது ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், சந்தானுசிரியர் புராணபடனம் செய்து பொருள் விளக்கினுர்கள். 'சிவஞான சித்தியார் சிறப்பு' என்பது பற்றித் திரு. ந.ரா. முருகவேள், M.A., M.O.L. அவர்கள் சொற்பொழிவாற்றினுர்கள். அன்பர்கள் பலர் விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (21—9—68).

பிரம்மோற்சவம்

திருவகிந்திரபுரம்: ஸ்ரீ தேவநாதசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீமந்நிகமாந்த மகா தேசிக சுவாமிக்கு 22—9—68 முதல் 4—10—68 முடிய நடைபெற்றது.

பெரும்பாக்கம்: ஸ்ரீவேங்கடவரதராசப் பெருமாள் கோயிலில், ஆதிவண சடகோப யதீந்திர மகாதேசிகர் வார்ஷிக மகோற்சவம், 19—9—68 முதல் 28—9—68 வரை சாற்றுமுறையுடன் நடைபெற்றது. ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகர்க்கு 23—9—68 முதல் 2—10—68 வரை நடைபெற்றது.

கருவூர்: தான்தோன்றி ஸ்ரீகல்யாண வேங்கடரமண சுவாமிக்கு 18—9—68 முதல் 10—10—68 வரை நடைபெற்றது.

மகாபாரதம்

அருண்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

யயாதி தன் மூத்த மகன் யதுவை அழைத்து "என் மூப்பினை நீ பெற்றுக் கொள். உன் இளமையை எனக்குக் கொடு. நான் ஆயிரம் ஆண்டுகள் உலக நலன்களை நுகர்ந்தபின் இளமையைத் தந்து முதுமையைப் பெறுவேன்" என்றான். யது, "தந்தையே முதுமைப்பருவம் மிக்க துன்பத்துடன் கூடியது. பெண்கள் பழித்து நகையாடுவார்கள். ஆதலால் நான் என் இளமையைத் தருவதற்கு இசையேன்" என்றான்.

யது கூறியபடியே துர்வசு, திருக்யு, அனு என்ற மூவரும் கூறி மறுத்தார்கள். யயாதி அந்த நால்வர்களையும் பார்த்து "நீங்கள் என் சொல்லை மறுத்ததால் தேசத்தின் கோடிகளில் மிலேச்சர்கட்குத் தலைவராகவும், ஓடத்தால் தாண்டக் கூடிய இடங்கட்கு மன்னராகவும் ஆவீர்கள்; உங்கட்கு இந்த அரசாட்சியில் உரிமையில்லை" யென்று சபித்தான். பூரு என்ற ஐந்தாவது மகன் பிதாவைப் பணிந்து, தன் இளமையைக் கொடுத்துப் பிதாவின் முதுமைப் பருவத்தைப் பெற்றான்.

இளமைப் பருவம் அடைந்த அம் மன்னன் அறநெறி நின்று இன்பங்களை நுகர்ந்தான். வேள்வியினால் தேவர்களையும், சிராத்தத்தால் பிதிர்களையும், தான தருமங்களால் ஏழைகளையும், திருப்தி செய்வித்தான். ஆயிரம் ஆண்டுகளும் ஆயிரம் நொடிகளாக அகன்றன. யயாதி மேருவின் வட சிகரியிலும், அளகாபுரியிலும், நந்தன வனங்களிலும் மாதர்களுடன் கூடி இன்புற்றான். குறித்த காலம் முடிந்ததனால் மகனாகிய பூருவை அழைத்துக் கூறுகின்றான்.

"மகனே! நான் உனது இளமையைக் கொண்டு விரும்பிய இன்பங்களை நுகர்ந்தும் விருப்பம் தணியவில்லை. நெய் விடுவதனால் நெருப்பு வளர்வது போல் இன்பங்களை நுகர்வதனால் மேலும் விருப்பம் அதிகமாகின்றது. உலகிலுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் ஒருவன் அனுபவித்தாலும் போதும் என்ற எண்ணம் வராது. ஆசையை யகற்ற வேண்டும். சுகம், அவாவை விட்டவனுக்குத்தான் உண்டு. ஆதலால் நான் பற்றை விடுத்துத் தவம் செய்யப்போகின்றேன். நீ இந்த இளமையைப் பெற்றுக்கொள். இளமை, நீ விரும்பும் காலம் வரை உனக்கு நீடித்து இருக்குமாக. நீயே என் புதல்வன்" என்று கூறினான். உடனே யயாதி முதுமையை யடைந்தான்.

அப்போதே பூருவுக்கு யயாதி முடிசூட்டி வைக்க முயன்றான். அமைச்சர் முதலியோர் "மூத்தவர்கள் இருக்க, இளையவனுக்கு முடி சூட்டுவது முறையா? என்று கேட்டார்கள். யயாதி, "எவன் தந்தையை அனுசரிக்கின்றானோ அவன் தான் குமாரன். என் கட்டளையை மீறிய மற்ற நால்வர்களையும் நான் புத்திரர்களாக நினைக்கவில்லை. எனது கட்டளையை நிறைவேற்றிய பூரு ஒருவன்தான் மகன்", என்று கூறினான். எல்லோரும் சரியென்று உடன்பட்டார்கள். பூருவுக்கு மகுடாபிஷேகம் நடைபெற்றது. மற்ற நான்கு புதல்வர்களையும் தேயத்தின்

எல்லைக் கோடிகளில் ஆளுமாறு செய்தான்.

யதுவினிடமிருந்து யாதவர்களும், துர்வசுவினிடமிருந்து யவனர்களும், திருக்யுவினிடமிருந்து போஜர்களும், அனுவினிடமிருந்து மிலேச்சர்களும் உண்டானார்கள். யயாதி, இருமனைவியர்களுடன் கானகஞ் சென்று கடுந்தவஞ் செய்தான். காய்கனிகளைத் தின்று கொண்டு வசித்தான். சிதறின தானியங்களைப் பொறுக்கி, அதிதிகளுக்குத் தந்ததுபோக எஞ்சியதையுண்டுகொண்டு, ஆயிரம் ஆண்டுகள் தவஞ் செய்தான். முப்பது ஆண்டுகள் நீரைமட்டும் பருகிக்கொண்டு தவஞ் செய்தான். ஓராண்டு காற்றைப் புசித்துக் கொண்டுந் தளராமல் இருந்தான். ஐந்து அக்கினிகளுக்கு நடுவே ஓராண்டு தவம் புரிந்தான். ஆறுமாதம் காற்றைப் புசித்துக்கொண்டு ஒருகாலில் நின்றான்.

அத்தவ மகிமையால், அம் மன்னன் மேல் உலகஞ் சென்றான். தேவர்கள், வசுக்கள் முதலியவர்கள் கொண்டாடத் தேவர்களது சிறந்த உலகில் இன்புற்றான். பிரம்மலோகத்திற்கும் ஏனைய வுலகிற்கும் சென்று வருவான். ஒரு நாள் இந்திரன் யயாதியைப் பார்த்து, "நீதி நெறி தவறாத நிருபனே! தவத்தில் நீ யாருக்கு நிகரானவன்?'' என்று கேட்டான். யயாதி "இந்திரனே! தேவர்களிலும் மனிதர்களிலும் கந்தர்வர்களிலும், முனிவர்களிலும், தவத்தில் எனக்குச் சமமானவர்களை நான் காணவில்லை'' என்றான். இந்திரன் "தேவர்கள் முதலியோரை அவமதித்து உன்னை நீயே புகழ்ந்தபடியால் உன் தவம் அழிந்தது. நீ கீழே விழக்கடவாய்''என்றான். "இந்திரனே! நல்லவர்களுக்கு நடுவே நான் விழுமாறு அருள் செய்'' என்றான் யயாதி. "அப்படியே நல்லவர் நடுவில் விழுவாய். இனியாவது தற்பெருமை பேசாதே'' என்று இந்திரன் கூறினான்

யயாதி விழுகின்றபோது, அவனை அந்தரவுலகில் அஷ்டகன் கண்டு அதிசயித்தான். "சூரியனைப்போல் ஒளியுடன் விழுகின்ற நீர் யார்? உம்மைக்கண்டு என் மனம் மகிழ்கின்றது'' என்றான். யயாதி, "அப்பா! நான் நகுஷகுமாரன் யயாதி. பூருவின் தந்தை. பெரும் புண்ணியஞ் செய்து, தன்னைத்தானே புகழ்தல் என்ற ஒரு பிழையால் புண்ணிய உலகினின்றும் தவறி விழுகின்றேன். உன்னைக்கண்டு ஆறுதல் அடைகின்றேன்'' என்றான்.

அஷ்டகன், தன் தாயாருடைய தந்தையாகிய அந்த யயாதியை நோக்கி, "நீர் எந்தெந்த உலகில் எவ்வளவு காலம் அநுபவித்தீர்? கூறும்'' என்று கேட்டான். "அஷ்டகனே! நான் பூதலத்தில் சக்கரவர்த்தியாக இருந்தபின், மேல் உலகம் புகுந்து அங்கு ஆயிரம் ஆண்டுகள் உறைந்தேன். வேறு உலகங்கட்கும் சென்றேன். ஆயிரம் வாயில்கள் உள்ளதும் நூறுயோசனை நீண்டதுமான அழகிய இந்திரலோகத்தில் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தேன். பிரம்மலோகம் சென்று ஆயிரம் ஆண்டுகள் வசித்தேன். தேவர்களால் வந்திக்கப்பட்டுப் பெருஞ் சிறப்புடன் பிரம்மாவுடைய மாளிகையிலேயே இருந்தேன். தேவமாதர்களுடன் விளையாடிக் கொண்டு, அழகும் நறுமணமும் பொருந்திய பூமரங்களுடன் கூடிய நந்தவனத்தில், பத்து லட்சம் ஆண்டுகள் வசித்தேன். இந்த வண்ணம் சுகத்தின் உச்சியில் வாழ்ந்த நான் ஒரு சமயம் என்னை நானே புகழ்ந்தேன். அப்போது தேவதூதன் ஒருவன் மூன்று மாத்திரைகள் உள்ள சுவரத்துடன் உரத்த குரலில் "அழிந்து போ'' என்று மும்முறை கூறினான். இவ்வளவுதான் எனக்குத் தெரியும். புண்ணியம் அழிந்து மேற்கதியிலிருந்து விழுகின்றபோது ''ஐயோ! பாவம்! புண்ணியஞ் செய்து நல்ல புகழ் பெற்ற யயாதி புண்ணியம் அழிந்து இதோ விழுகின்றான்'' என்று தேவர்கள் என்னைப் பற்றித் தயையுடன் கூறிய சொற்கள் என் செவியில் விழுந்தன. அவர்கள் அருளால் உங்கள் இடையில் விழுந்தேன்'' என்றான்.

அஷ்டகன் "கிருதயுகத்து மன்னர்களில் சிறந்தவரே! மேலான தெய்வலோகத்தில் பத்துலட்சம் ஆண்டுகள் வாழ்ந்த நீர் அதைவிட்டு வந்த காரணம் யாது?'' என்றான். யயாதி "அப்பனே! இந்த உலகில் பணமில்லாதவன் நண்பனாயினும்

உறவினனுயினும் அவனை எப்படி விட்டு விடுகின்றார்களோ, அதுபோல், அந்த உலகில் புண்ணியம் அழிந்த ஒருவனை இந்திரன் முதலிய இமையவர்கள் விட்டு விடுகின்றார்கள்'' என்றான்.

அஷ்டகன் 'பெரியவரே! உயிர்கள் மீளவும் எப்படி என்ன ஆகின்றன! தாங்கள் தத்துவம் தெரிந்தவராகக் காணப்படுகின்றீர். தங்களுடன் பேசவும் கேட்கவும் அவாவுகின்றேன். எல்லாம் விவரமாகச் சொல்லும்' என்றான். யயாதி 'நல்வினை தீவினைகளை நுகர்ந்து முடிந்த பின் ஆன்மா மழை வழியாகப் பூமண்டலஞ் சேர்ந்து உண்ணுகின்ற காய் கனி தானியங்களைச் சேருகின்றன. அவற்றை ஆடவன் உண்ண, அவ்வுயிர் ஆடவனிடம் சேர்ந்து அறுபது நாள் இருந்த பின், பெண்ணிடம் சேர்ந்து உரிய காலத்தில் பிறக்கின்றது. நல்வினை செய்த உயிர்கள் புண்ணிய உலகமாகிய ஒளியுலகையும், தீவினை செய்தவுயிர்கள் நரகவுலகமாகிய இருள் உலகையும் அடைகின்றன. இன்ப துன்பம் நுகர்ந்து முடிந்த பின், நல்வினை தீவினையின் கலப்பான மிச்சிரகன்மங்களை நுகரப் பூமியில் பிறக்கின்றன. பெரும் பாவங்களைச் செய்தவர்கள் விலங்குகளாகவும், பறவைகளாகவும் பிறந்து உழல்கின்றார்கள்.

'தவம், தானம், புலனடக்கம், மனவெற்றி, நாணம், உள்ளும் புறமும் ஒத்திருத்தல், உயிர்க்கருணை ஆகிய ஏழும், சுவர்க்க உலகத்தின் பெரிய வாயில்கள்' என்றான். அஷ்டகன், "பிரம்மசரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் இந்த நால்வகை அறங்களைப்பற்றிச் சொல்லும்" என்று கேட்டான்.

பிரம்மசரியம்: யயாதி 'பிரம்மசாரி குருநாதனிடம் இருந்து வேதம் முதலியவைகளை ஓதுதல் வேண்டும். குருநாதன் ஏவாமுன் அவருடைய பணிகளைப் புரிதல் வேண்டும். ஆசிரியனுக்கு முன் எழுந்திருக்க வேண்டும்; பின்படுக்க வேண்டும். பணிவும், புலனடக்கமும், ஊக்கமும், ஒழியாது ஓதுவதும் உடையவனாக இருக்க வேண்டும்.

இல்லறம்: இல்லறத்தான், அறத்தால் கிடைத்த பொருளைத் தானதருமம் புரிதல் வேண்டும்; விருந்தோம்புதல் வேண்டும்; விருந்தினருக்கு என்று சமைக்க வேண்டும்.

வானப்பிரத்தம்: வனத்தில் வசிக்கின்ற வானப்பிரஸ்தன் தன் ஆற்றலால் தேடிய உணவை உண்ண வேண்டும்; எந்த வுயிர்கட்கும் துன்பஞ் செய்தல் கூடாது. உணவையும் விவகாரங்களையும் அடக்கி மனத்தை இறைவனிடத்தில் செலுத்தித் தியானிக்கவேண்டும்.

சந்நியாசம்: சந்யாசி எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும். வீட்டில் படுக்கக் கூடாது. கையில் ஒன்றும் இருக்கக் கூடாது. தனித்துச் சஞ்சரிக்க வேண்டும். இன்றிருந்த ஊரில் நாளை யிருக்கக் கூடாது. இரு சந்நியாசிகள் ஒரு நாள் சேரலாம்; மறுநாள் சேரக்கூடாது. மூன்று சந்நியாசிகள் சேரவே கூடாது." என்று கூறினன்.

அஷ்டகன் 'முனிவன் என்பவன் யாவன்?' என்று கேட்டான்.

அஷ்டகனே! எவனுக்கு வனத்தில் வசிக்கும்போது கிராமமும், கிராமத்தில் வசிக்கும்போது வனமும் பின்னிடுகின்றனவோ அவன் முனியாவான். கிராமமும் வனமும் பின்னிடுவது என்ன என்பதைக் கூறுகின்றேன். வனத்தில் வசிக்கின்ற முனி கிராமத்தில் உள்ள பொருள் ஒன்றையும் உபயோகிக்கக் கூடாது. அதனுல் கிராமம் பின்னிடுகின்றது. கிராமத்தில் வசித்துக்கொண்டு நெருப்பும் வீடும் பிறந்த குலமும் இல்லாதவனுகி, மறைக்கத்தக்க அங்கத்தை மட்டும் மறைக்கும் அளவுக்கு ஆடையுடுத்தும், உயிர்தரிக்குமளவுக்கு மட்டும் உணவு உண்டுகொண்டும் இருப்பவனுக்கு, வனம் பின்னிடுகின்றது. விருப்பங்களையும் கன்மங்களையும் விட்டுப் புலன்களையடக்கி மௌனத்தையுற்றவன் முனி. *இரண்டை

*இரண்டு: சுகதுக்கம்; விருப்பு வெறுப்பு; லாப நஷ்டம். ஒன்று—பிரம்மம். வாயினுல் வந்து சேர்ந்ததைத் தவிரக் கையினுல் தேடமுயலாதிருத்தல்.

விட்டவன் ஒன்றையடைவான். வாயினால் உணவைத் தேடுகின்றவனே உலகம் அடைகின்றது.

"சந்நியாசிக்கு எட்டுக்கவளந்தான் உணவு. வானப்பிரஸ்தனுக்குப் பதினாறு கவளம் உணவு. இல்லறத்தானுக்கு முப்பத்திரண்டு கவளம் உணவு. பிரம்மசாரிக்கு எண்ணிக்கையில்லை"

இப்படி யயாதி அநேக அறங்களைக் கூறினான். பின்னர் அஷ்டகன், பிரதர்த்தனன், வசுமான், சிபி என்ற நால்வர்களும் யயாதியைப் பணிந்து 'அண்ணலே எங்கள் தவப்பயனையும் புண்ணியத்தையுந் தருகின்றோம். எங்களுக்குள்ள மேல் உலகங்களைப் பெறுவீர்' என்று வேண்டினார்கள்.

யயாதி, 'அன்புடையோர்களே! நான் பிறருக்குக் கொடுப்பேனேயன்றிப் பிறரிடமிருந்து எதனையும் வாங்கமாட்டேன். யாசிக்கின்றதை நான் வெறுப்பவன். ஆதலால் உங்கள் புண்ணியப் பயன் எனக்கு வேண்டாம்' என்றான். அப்போது மாதவி என்ற பெண்மணி மான்தோலை உடுத்திக்கொண்டு அங்கு வந்தாள். அவள் யயாதியை வணங்கித் 'தந்தையே! தாங்கள் இவ்வளவு சீக்கிரம் புண்ணியவுலகை விட்டு வந்து விட்டீரா? குழந்தைகளே இவர் உங்களுக்கு மாதாமகர். என் தந்தை இவர். 'அப்பா! தந்தை செய்தது பிள்ளைகளைச்சாரும். அதுபோல் மக்கள் செய்ததும் பிதாவைச் சாரும். ஆதலால் நாங்கள் செய்த புண்ணியப்பயன் உங்களைச்சாரும். நீர் மேல் உலகம் அடைவீர்!' என்றாள்.

யயாதி 'இன்று முதல் பிதிர்க் கருமத்தில் பெண்களின் சந்ததிகள் உரியவர்கள் ஆகட்டும். அதுபடியே நான் நன்மையடைவேன்' என்றான். பின்னர் விமானங்கள் வந்தன. அஷ்டகன் முதலிய பேரப்பிள்ளைகளுடன் யயாதி விமானம் ஊர்ந்து ஒளிமயமாக மேற்கதியடைந்தான்.

பூருவின் மனைவி பௌஷ்டி. அவளிடம் பிரவீரன், ஈசுவரன், ரௌத்ராச்வன் என்று மூன்று புதல்வர்கள் பிறந்தார்கள். பிரவீரனுக்குச் சூரசேனியிடம் மனஸ்யூ பிறந்தான். மனஸ்யூ என்பவனுக்கு ஸௌவீரி என்பவளிடம் சக்தன், ஸம்ஹனனன், வாக்மி என்ற புதல்வர்கள் பிறந்தார்கள். ரௌத்ராச்வனுக்கு ரிசேயுவும், ரிசேயுவுக்கு மதினாரனும் பிறந்தார்கள்.

மதினாரனுக்கு தம்சு பிறந்தான். தம்சுக்கு இலிலன் பிறந்தான். இலிலனுக்கு ரதந்தரி என்பாளிடம் துஷ்யந்தன் பிறந்தான்.

(தொடரும்)

வள்ளலார் வெள்ளணிவிழா

திருவருட் பிரகாச வள்ளலார் ஆகிய வடலூர் வள்ளலார் அருட்டிரு இராமலிங்க அடிகளாரின் 145ஆம் வெள்ளணிவிழா, 24—9—68 அன்று, சென்னைத் திருவொற்றியூர் நெடுஞ்சாலை அல்லமாப்பிரபு தேவ கல்யாண மண்டபத்தில், திரு. கடிகாசலம் J. P. அவர்கள் தலைமையில், சிறப்புற நடைபெற்றது. புலவர் திரு. சீனிவாச முதலியார், 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் M.A., M.O.L., திரு. பண்டித வி. நடேசனார் B.A., J.P., திரு. கண்ணபிரான், திரு. மருதீசன் ஆகிய பல அறிஞர் பெருமக்கள் சொற்பொழிவாற்றினர். அருட்பெருஞ்சோதி அகவல் பாராயணமும், அன்னதானமும் நன்கினிது நடைபெற்றன. ஜோதி எம்போரியம் திரு. ஜெ. மு. வைத்தியலிங்க முதலியார் அவர்கள், விழாவைச் சிறப்புற நடத்தினார்கள்.

வரகுண பாண்டியனின் திருத்தொண்டுகள்

மயிலை திரு. சீனி வேங்கடசாமி அவர்கள்,
[சென்னை.]

வரகுண பாண்டியனுக்குக் கோமாறஞ் சடையன் என்னும் பட்டப்பெயர் உண்டு. இந்தப் பாண்டியன், அந்தக் காலத்தில் பல்லவ இராச்சியத்தோடு இணைந்திருந்த சோழ நாட்டின் மேல் படையெடுத்துச் சென்று போர் புரிந்தான். சோழநாட்டிலே **வேம்பில்** என்னும் ஊர்க்கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றினன். பிறகு, **நியமம்** என்னும் ஊரில் தங்கியிருந்த போது, திருச்சிராப்பள்ளியில் மலையின் மத்தியில் உள்ள குகைக்கோயிலுக்கு 125 கழஞ்சு பொன்னைத் தானஞ் செய்தான். திருச்சிராப்பள்ளிக் குகைக்கோயில் மகேந்திரவர்மன் என்னும் பல்லவ அரசனால் அமைக்கப்பட்டது. அந்தக் குகைக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கே, வரகுண பாண்டியன் மேற்சொன்னபடி 125 கழஞ்சு பொன்னைத் தானம் செய்தான். அந்தப் பொன்னின் வட்டியைக்கொண்டு நாள் ஒன்றுக்கு நான்கு திருவிளக்குகளை ஏற்றும்படி அவன் கட்டளை யிட்டிருந்தான். அந்தப் பொனனைச் சிற்றம்பர் என்னும் நகரத்தார் பெற்றுக்கொண்டு, நாள்தோறும் திருக்கோயிலில் நந்தாவிளக்கு எரிக்கப்பொறுப்பேற்றுக்கொண்டனர். அந்தச் சாசனத்தின் வாசகப் பகுதி இது :

"கோமாறஞ் சடையற்கு
யாண்டு நான்கு
நாள் ஈராயிரத்தைந்
நூற்றுஒன்று
வேம்பில் மதிள் அழித்துப்
போந்து நியமத்திருந்தருளிச்
சோமசூர்யான்வயத் துவய
திலகாலங்கார ராயின
பாண்டியாதி ராசர் வரகுணதேவர்
திருமலை படாரர்க்குக்
கொடுத்த பொன் பாடிக்கல்லால்
125 கழஞ்சு."

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம் திருவெள்ளறை என்னும் ஊரில் உள்ள ஜம்புநாதசுவாமி கோயில், பாறையைக் குடைந்தமைத்த குகைக்கோயிலாகும். இந்தக் கோயிலில் சிவலிங்க உருவமாக எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குத் 'திருவெள்ளறைத் திருவானைக் கல் பெருமானடிகள்' என்பது பழைய பெயர். (வெள்ளறை – வெள்ளைக் கல்; அறை – கல், மலை. ஆனைக்கல் என்பது அந்த மலையின் பெயர்). இந்தத் திருக் கோயிலில் இரண்டு திருவிளக்குகளை எரிப்பதற்காக வரகுண மகாராசன் 120 கழஞ்சு பொன்னைத் தானஞ் செய்தான். இந்தப் பொன்னின் முதல் கெடாமல், இதன் வட்டித் தொகையிலிருந்து இரண்டு விளக்குகளை எரிப்பதற்கு இவன் நிபந்தம் செய்தான்.

இந்தச் சாசனத்தின் வாசகப்பகுதி இது:

"கோமாறஞ் சடையற்கு
யாண்டு நாலாவதற்கு
எதிர் ஒன்பதாவது விருச்சிக
ஞாயிற்றுத் திங்கட்கிழமை
பெற்ற அஸ்வதி முதலாக
தேவதானந் திருவெள்ளறைத்
திருவானைக்கற் பெருமானடிகளுக்கு
பாண்டி மாராசர் ஆயின

கோமாறஞ் சடையன் இரண்டு
நொந்தாவிளக்கு இரவும் பகலும்
எரிக்க அண்ட நாட்டு வேளான்
கையில் விடுத்த பொன்
120 கழஞ்சு."

இந்தச் சாசனத்தில் கூறப்பட்டுள்ள 'விருச்சிக ஞாயிற்றுத் திங்கட்கிழமை பெற்ற அஸ்வதி' என்னும் குறிப்பைக் கொண்டு கணித்தால், அந்த ஆண்டு கி. பி. 824, நவம்பர் மாதம் 7ஆம் தேதி திங்கட்கிழமை என்று தெரிகிறது. இந்தக் குறிப்புப்படி கணித்தால் கி. பி. 874ஆம் ஆண்டு நவம்பர் 22க்கும் பொருந்துகிறது. அண்ட நாட்டுவேளான், இரண்டாம் வரகுண பாண்டியனின் காலத்தில் இருந்தவன் ஆகையால், இந்தச் சாசனம் கி. பி. 874ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம் சப்தரிஷீசுவரர் கோயில் சாசனங்களில் ஒன்று, கோமாறஞ் சடையனுன வரகுண பாண்டியனின் சாசனமாகும். இந்தச் சாசனத்தில் இந்தப் பாண்டியன் இந்தக் கோயிலுக்கு இரண்டு நந்தா விளக்கு எரிக்க 120 பொன் (பழங்காசு) தானஞ் செய்ததைக் கூறுகிறது. லால்குடி என்பது, கர்நாடக நவாபு காலத்தில் (பிற்காலத்தில்) உண்டான பெயர். லால்குடி என்பதற்குச் சிவந்த நிறக் கோயில் என்பது பொருள். இவ்வூரின் பழைய பெயர் திருத்தவத்துறை என்பது. திருத்தவத்துறைக் கோயிலே வடமொழியாளர் சப்தரிஷீசுவரர் கோயில் என்பர். இந்தச் சாசனத்தின் பகுதி இது :

"கோமாறஞ் சடையற்கு யாண்டு
4-ஆவதின் எதிர் 9-ஆம் ஆண்டு
தனு ஞாயிற்றுச் செவ்வாய்க்
கிழமை பெற்ற சதயத்து நாள்
இடையாற்று நாட்டுத் திருத்தவத்துறை
மகாதேவர்க்கு இரவும் பகலும்
சந்திராதித்தவல் இரண்டு
நொந்தாத் திருவிளக்கு எரிப்பதாக
கோமாறஞ் சடையனுயின பாண்டிய
குலபதி வரகுண மகாராயர் அண்ட
நாட்டு வேளான் கையில்
கொடுத்த பழங்காசு 120".

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம் அம்பாசமுத்திரத்தில் உள்ள எறிச்சாவுடையார் கோயிலிலும், பாண்டியன் வரகுண மகாராசன் கட்டளைகள் அமைத்தான். இச்செய்தியை இங்குள்ள சாசனம் கூறுகிறது. எறிச்சாவுடையார் கோயிலுக்கு அக்காலத்தில் வழங்கின பெயர் திருப்போத்துடையார் கோயில் என்பது.

வரகுண மகாராசன், தொண்டை நாட்டில் போர் செய்து பெண்ணையாற்றங் கரையில் உள்ள அரசூரில் தங்கியிருந்த போது இந்தக் கட்டளையை ஏற்படுத்தினுன்.

"ஸ்ரீபடாரர் அனுக்கிரகத்தினுல்
முள்ளி நாட்டு
இளங்கோய்க்குடி திருப்போத்துடையார்
ஸ்ரீகோயில் படாரர்க்கு
முதல் கெடமை பொலி
கொண்டு நான்கு காலமும்
திருவமுது செலுத்துவதாக வரகுண
மகாராசர் தொண்டை நாட்டுப்
பெண்ணைக்கரை அரைசூர்
வீற்றிருந்து இளங்கோய்க்குடிச்
சபையார் கையில்
கொடுத்த காசு 290".

என்று இந்தச் சாசன வாசகம் தொடங்குகிறது. (படரார்-கடவுள்; பொலி-வட்டி.)

இந்த 290 பொற்காசின் வட்டியிலிருந்து நாள்தோறும், நான்கு பொழுது திருவமுது நிவேதிக்க வரகுண பாண்டியன் கட்டளை ஏற்படுத்தினுன். அதன் விபரம் வருமாறு :

திருவமுது: ஒரு வேளைக்குச் செந்நெல் தீட்டல் அரிசி நானுழி.

கும்மாயம் : (கும்மாயம் என்பது பயற்றுப்பருப்புப் புழுக்கலுடன் சர்க்கரையும் நெய்யும் கலந்துசெய்யப்படும் சிற்றுண்டி) இதற்குப் பயற்றுப்பருப்பு இரு நாழி.

பசுவின் நறுநெய் : உழக்கு.

தயிர் : "பசுவின் தோய் தயிர் உரி"

வாழைப்பழம்: 'கருவாழைப்பழம் நான்கு'. சர்க்கரை ஒரு பலம்.

கறியமுது: காய்கறி ஒன்று, புளிங்கறி இரண்டு, புழுக்குக்கறி ஒன்று, பொரிக்கறி ஒன்று ஆகக் கறி ஐந்தினுக்குக் கறி பத்துப் பலம்.

பசுவின் நறுநெய்: "கறி துமிக்கவும் பொரிக்கவும் பசுவின் நறுநெய் ஆழாக்கு".

காயம்: "இரு செவிடு"

இலையமுது: (வெற்றிலை) "வெள்ளிலை ஈரடுக்கு"

அடைக்காய்: (பாக்கு) பத்து.

சர்க்கரை: நாற்பலம் (கும்மாயத்துக்கு).

"இப்பரிசு நியதிப்படி முட்டாமை நெடுங் காலமுஞ் செலுத்துவதாக வைத்தார் ஸ்ரீவரகுண மகாராசர்" என்று முடிகிறது இந்தச் சாசனம்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் திருக்கோடிக்காவல் திருக்கோடீச் சுவரர் கோவிலுக்கும் வரகுண மகாராசர் 180 கழஞ்சு பொன் தானம் செய்திருக் கிறார். இந்தப் பொன்னின் வட்டியைக் கொண்டு மூன்று 'நொந்தா விளக்கு' எரிப்பதற்கு இவர் கட்டளை அமைத்தார். இந்தக் கோயில் சரசுவதி கணபதி ஆகிய இரண்டு தெய்வங்களுக்கு விளக்கெரிக்க வேண்டுமென்பது கட்டளை.

"திருக்கோடிகாவில் ஸ்ரீசரஸ்வதி கணபதிகளுக்கு
மூன்று நொந்தாவிளக்கெரிப்பதற்கு
வரகுண மகாராசர் கொடுத்த பொன்
நூற்றெண்பதின் கழஞ்சு".

என்று கூறுகிறது இந்தச் சாசன வாசகம்.

சம்பந்த சுவாமிகள் காலத்தில் கணபதி ஈச்சரம் என்னும் கோயில் இருந்தமை, தேவாரத்தினால் தெரிகின்றது. கலை மகளுக்கும், விநாயகருக்கும் கோயில் இருந்த செய்தி, கல்வெட்டுகளில் முதல் முதலில் காணப்படுவது இந்தக் கல் வெட்டிலேதான்.

நவராத்திரி விழா

திருவானைக்கா	:	ஜம்புகேசுவரர் அகிலாண்டேசுவரி கோயில்.
இளையாத்தகுடி	:	கைலாசநாதர் நித்திய கல்யாணி அம்மன் கோயில்.
திருவெண்காடு	:	சுவேதாரண்யேசுவரசுவாமி கோயில்
மதுரை	:	தெற்குமாசி வீதி காமாட்சி ஏகாம்பரேசுவரர் கோயில்.
இராமநாதபுரம்	:	இராஜராஜேசுவரி அம்பாள் கோயில்.
காஞ்சிபுரம்	:	ஏகாம்பரநாதர் கோயில்.
சென்னை	:	திருமயிலைக் கபாலீசுவரர் கோயில்.
பெரியகாஞ்சிபுரம்	:	ஸ்ரீ ஆதிபீடாபரமேசுவரி காளிகாம்பாள் கோயில்.
தருமபுர ஆதீனம்	:	ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி கோயில்.
சென்னை	:	ஸ்ரீ சென்ன மல்லீசுவரர், சென்ன கேசவப்பெருமாள் கோயில்கள்.
பெரும்பாக்கம்	:	**வேங்கடவரதராசர் கோயில்....**

மணிவாசகரும், திருக்கழுக்குன்றமும்

அருட்டிரு. அழகர் அடிகளார்,
[திருக்குறள் பீடம், மாம்பாக்கம் குருகுலம், மதுராந்தகம்]

முன்னுரை :

திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் சைவ சமய குரவர்களாகிய நால்வர்களுள் முன்னவர். முதல் நிலையில் இருப்பவர். அவர் காலம் மூன்றும் நூற்றுண்டு என்பது சான்றோர் துணிபு. பிற்பட்டதென்று கூறுவாரும் உளர். விரிந்த ஆராய்ச்சி ஈண்டு வேண்டுவதில்லை. சங்க காலத்து நடை, அவர் பாடல்களில் விரவி இருக்கிறது. அக்காலம் இரண்டாம் நூற்றுண்டு என்பது பலர்க்கும் உடன்பாடாதலின், அவர் காலம் மூன்றும் நூற்றுண்டென்பது தவருகாது.

மாணிக்கவாசகர், ஞானத்தில் ஞானமாகிய உயர்நிலையை எய்தியவர். அதற்கு மேல் வீட்டு நிலைதான். அவர் வாக்கு திருவாசகம் என்று பெயர் பெற்றது. வாய் என்பது உண்மை; உண்மை பேசுவதுதான் 'வாய்' எனப்படும். வாக்கு-வாசகம் – வாக்கியம் எனபனவெல்லாம் உண்மை உரை. உண்மை ஆதலின் வாக்கு, காரிய உருவானது; பயன் உடையது; முன்னேற்றுவது. அது வெறும் 'ஆகாச' தத்துவத்தில் பிறப்பதன்று; 'சக்தி தத்துவத்'தில் பிறப்பது. அருள் பெற்ற பெரியோர்களிடத்தில் வாக்குப் பிறக்கும்; அது நல்ல கவியாகவும், நல்ல உரையாகவும் இருக்கும். அத்தகைய வாக்கு 'செல்வாக்'காக இருக்கும்; எண்ணிய பயனை உடனே தருவதாக இருக்கும். வாக்கு என்ருலே செல்வாக்கு தான்; வேறு நிறமுள்ள நிலாவிலிருந்து பிரிப்பதற்காகவா நிலாவை வெண்ணிலா என்று சொல்கிறேம்? நிலவுக்குள்ள இயல்பான வெண்மையைக் கருதியே, இயல்பான அடையாகச் சேர்த்து வெண்ணிலா என்கிறேம். அதுபோலவே வாக்கு என்பதையும், அதன் இயல்பு கருதிச் செல்வாக்கு என்கிறேம். மாணிக்க வாசகர் வாக்கு செல்வாக்கு; வாசகம் திருவாசகம். திரு-தெய்வத்தன்மை; தெய்வம் - உண்மையானது; 'திரு' இங்கே இயல்பான அடை. திருவாசகம் உண்மையான தெய்வத் தன்மையை உள்ளபடி உரைப்பது. ஆன்றேர் வாக்காதலின், அது திருவருளை உண்மையாகவே நம்மிடம் சேர்க்கக் கூடியது.

திருக்கழுக்குன்றம் :

திருவாசகப்பாடல் பெற்ற பதிகள் மிகச் சில; அவற்றுள் ஒன்று திருக்கழுக்குன்றம்; அது நால்வர் பாடலும் பெற்ற ஒரு மலைக் கோயில்; மலைக்கோயில்கள் எல்லாம், மன ஒருமையோடு வழிபடுதற்கும், சுற்றிவந்து உடல் நலத்துக்கு இசைவான அதன் நல்ல காற்று நன்னீர் முதலியவற்ருல் ஐம்புலன்களினுலும் தூய்மை யின்பம் கொள்வதற்கும், ஏற்றவையாகும்.

மூவர் என்ருல் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய தேவார ஆசிரியர்களைக் குறிக்கும்; நால்வர் என்ருல் மாணிக்க வாசகரும் சேர்வர். நால்வர் வாக்கும் தேவாரம் தான்; திருவாசகம்தான். ஆனல் மணிவாசகரை மட்டும் நால்வர்களினின்று பிரித்து மூவரை ஒன்ருகவும், இவரைத் தனியாகவும் சிறப்பித்துப் பேசுவதும் வழக்கம். மூவர் வாக்கைத் தேவாரம் என்றும், மற்றவர் வாக்கைத் திருவாசகம்

என்றும் பிரித்துச் சொன்னது, பின்னதில் உள்ள சில தனிச் சிறப்புக்களை எண்ணியே ஆகும்.

இம்மாதிரி வாதவூரடிகளையும், அவர்களின் வாக்கையும் மட்டும், தனியே சிறப்பித்ததற்குள்ள காரணங்கள் பல. அவற்றுள் சிறந்ததும், ஈண்டுக் கொள்ளத் தக்கதும், அவர் 'ஞான நிலையினர்' என்பதே. சரியை கிரியை யோகம் என்னும் மற்ற மூன்று நிலைகளும் அறிவு நிலைகள்; ஓர் உயிர், தன் முயற்சியினுலேயே அடையக் கூடிய நிலைகள். ஞான நிலையோ, அருளால் மட்டுமே பெறக் கூடிய முடிந்த நிலை. நால்வர்களும் ஞான நிலையினரே. ஆயினும், தேவார ஆசிரியர்கள் மூவரும் முறையே ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில், யோகமாகிய உயர் நிலைகளை உலகுக்கு விளக்க வந்த உரவோராவர். மணிவாசகர் முடிந்த நிலையாகிய ஞானத்தில் ஞான நிலையை வீடுபேறளித்துப் பிறவிப் பயனைத் தரக் கூடிய பெருநிலையை அடைந்தவர். ஆகவே அவர் நிலைக்கும், அவர் தம் நுகர்வுகள் (அநுபவம்) அடங்கிய திருவாசகத்துக்கும், ஒரு தனிச் சிறப்பு இருப்பது இயல்பாயிற்று.

கழுக்குன்றக் காட்சி :

இனிக் கழுக்குன்றத்தில் தாம் கண்ட காட்சியை அடிகளார் 'கணக்கிலாத் திருக்கோலம்', 'ஆட்கொள்வான் வந்த' கோலம், 'கலங்காமலே வந்த' கோலம், 'காணுணத்திருக்கோலம்' 'ஓத வந்த கோலம்' 'அடியார்முனே வந்த' கோலம் என்றெல்லாம் பொதுப்படக் குறிப்பிடுகிருரே தவிர, அதை வடிவம் விளக்கிச் சொல்லவில்லை. அப்பர் சம்பந்தர் சுந்தரர் முதலிய ஆசிரியர்கள், தாம் கண்ட இறைக்காட்சிகளை, இப்படி இருந்தன என்று விளக்கியிருக்கிருர்கள்; அடிகளும் பெருந்துறை, மதுரை முதலிய இடங்களில் தாம் கண்ட காட்சியை நன்ருக விளக்கிக் கூறியிருக்கிருர்கள்; ஆகவே அவர்கள் திருக்கழுக்குன்றத்தில் கண்ட கோலம், வடிவங் கடந்த தனித்த நிலையினதான ஓர் ஒளிக்கோலமாய், ஞானத்தில் ஞான நிலையை அடைந்த அருளாளர்களுக்கு மட்டுமே விளங்கக்கூடிய மிகு நுண்ணிய அருட்கோலமாய் இருக்கலாம் என்று தெரிகிறது. கோலம் என்பதனுல் (கோலம்-அழகானது, கோலுதல் அடிப்படை அமைத்தல்), அது கண்ணுக்குத் தெரியக்கூடியதாய் அழகாகவும், காட்சிகளுக்கெல்லாம் அடிப்படையானதாகவும், இருந்திருக்க வேண்டும். உத்தரகோச மங்கையில் இதுபோன்ற ஓர் ஒளிக் காட்சியைத் தாம் கண்டதாக அடிகள் குறிப்பிடுகின்ருர்கள் (நீத்தல்--15). ஆனுல், அதனினும் இது நிறைவுடையது.

சன்மார்க்கம் :

இத்தகைய ஒளிக்காட்சி (சோதி தரிசனம்), மெய்யுணர்வு (ஞானமார்க்க) நெறியினர்க்குச் சிறப்புரிமை என்று தெரிகிறது. சோதி என்றதும் இக்காலத்தில் இராமலிங்க அடிகள் நினைவு வருகின்றது; அவர்கள் மார்க்கம் சன்மார்க்கம்; ஞான மார்க்கம் என்ருலும் சன்மார்க்கம் என்ருலும் ஒன்றே. (சத்-உண்மை; உண்மையை அறிவதே ஞானம்). சன்மார்க்கம் என்பதையே வெண்ணிலா – செல்வாக்கு - திருவாசகம் என்பவற்றைப் போல, இயல்பான அடைகொடுத்துச் சமரச சன்மார்க்கம் என்றனர் சான்ருேர். சன்மார்க்கமெல்லாம் (உண்மை எப்போதும் ஒன்ருகவே இருக்குமாதலின்), எப்போதும் சமரசம் (பொதுமை) ஆகத்தான் இருக்கும். எனவே திருவாசகம், திருவருட்பா முதலிய சன்மார்க்க நூல்கள், திருக்குறளைப் போல் உலகப் பொதுமை உடையனவே. தமிழில் உள்ள பல நூல்கள் இத்தகைய பொது நூல்களே. அவற்றின் உண்மைகளைச் சரியான முறைகளில் பரப்புதல் வேண்டும்; பரப்பினுல் அவை பொதுமை நிலை அடையும் என்பதில் ஐயமில்லை; அதற்குரிய கருவான கருத்துக்கள் அவற்றில் ஏராளமாக இருக்கின்றன,

ஞானமார்க்க மாகிய சன்மார்க்கத்தை விளக்க வந்தவர் மணிவாசகர்; அதையே பின்னும் சமரசசன்மார்க்கமாக விளக்கியவர் வடலூரடிகள். இருவருக்கும் சோதிக் காட்சி உண்டு; முன்னவர் வாக்காகிய

திருவாசகத்தை ஓதி ஓதி உருகி உருகி, அதற்கு வாச்சியம்(உரை) போலவே, பின்னவர் திருவருட்பாவைப் பாடியருளி யிருக்கின்ருர்.

ஞான வாழ்வு :

ஆளுடைய அடிகளின் அருள்வாழ்வு, ஞானவாழ்வு, பெருந்துறையில் தொடங் கிற்று; அதற்குமுன் அவர் பாண்டிய அர சனிடம் முதல் அமைச்சராக இருந்து பொருளுலகில் சிறந்திருந்தார்; ஆனல் அவர் அதில் நிறைவு கொள்ளாமல் அரு ளுக்காகவே ஏங்கினுர்; அவ் ஏக்கம் அவ ருக்குப் பெருந்துறையில் குருவருள் மொழி பெறுதற்குரிய பக்குவத்தைக் கொடுத்தது; அங்கே அவர் குருவை எதிர்ப்பட்டுத் தம்மை அவர்பால் ஒப்படைத்து அருளாள ராக மாறினுர்; ஞானவாழ்க்கையைத் தொடங்கினுர்; தமது மெய்யுணர்வின் வழி ஒழுகினுர்; பல திருப்பதிகளுக்கும் சென் ருர்; குருமுகமாகப்பெற்ற திருவடி ஞானம் மேலும் மேலும் வளர்ந்தது; திருக்கழுக் குன்றம் போந்தார்; அங்கே அவருக்கு அருட் கோலக் காட்சி கிடைத்தது; தாம் பெற்ற திருவடிஞானத்தை அந்தத்திருப்ப தியிலேயே உலகோர்க்குப் பயன்படத் திருப்பதிகம் பாடிவைத்தார். பின் தமது செலவை (யாத்திரையை) முடித்துக் கொண்டு, நேரே தில்லைக்குச் சென்று திருவருளிற் கலந்தார்; இதுவே அவர் வாழ்வின் சுருக்கம்.

பொருட் கரையிலிருந்து அருட்கடலில் அவர் இறங்கிய இடம், திருப்பெருந்துறை. அதிலிருந்து அவரை முத்திக்கரை ஏற்றிய பதி, கலங்கரைவிளக்கம், திருக்கழுக்குன் றம். அங்கே அவர் ஏறிவந்த ஞானக்கலம் (ஏந்தி வந்த திருவடி) இங்கு அமைக்கப் பெற்று இருக்கிறது. ஆகவே, ஞானம் வேண்டுவோர்க்கெல்லாம், வாழ்வின் பயனை அடைய விரும்புவார்க்கெல்லாம், நன்மைதரும் விளைவுப்பதியாக இருப்பது, திருக்கழுக்குன்றம் என்பதை அறிதல் வேண்டும்; கரைஏறிய இடம் தில்லை; அது முத்திக்கரை.

காதல் செய்கோயில் :

சைவசமயத்தவர் 'கோயில்' என்ருல், அது தில்லையைக் குறிக்கும். திருக்கழுக் குன்றத்தைக் 'கண்ணுதலான் காதல் செய்கோயில்' என்று பாடல் தோறும் குறிப்பிடுகின்ருர் திருஞான சம்பந்தர். தில்லை—அடிப்படைத்தலம், இறைவனின் ஐந்தொழில்இயக்கத்தைக் காட்டும் அருட் பதி; திருக்கழுக்குன்றம்—விளைவுத்தலம். ஐந்தொழிலின் முடிந்த விளைவாக உயிர் கள் பிறவி நீங்கி மலம் கழன்று வீடுபெறு தற்குரிய பரிபக்குவம் விளைவிக்கும் பதி. ஆளுடையஅடிகளின் 'யாத்திரை' அங்கே முடிந்ததனுலும், அவர் மேல்விளைவு பற்றிய நோக்கம் எதுவுமின்றித் தில்லைக்குச் சென்று திருவருளிற் கலந்ததனுலும், இவ் வுண்மைகள் உறுதிப்படுகின்றன. அடிகளே 'மேல் விளைவதறிந்திலேன்' எனப் பதிகத்தில் தம் பிறவிப்பயனுகிய முத்திப் பரிபாகம் (விளைவு முற்றியநிலை) கிட்டியதைக் குறிப்பிடுகின்ருர்.

திருப்பெருந்துறையிற் பெற்ற திருவடி ஞானத்தை, உலகோர்க்குப் பயன்பட வைத்த இடம் திருக்கழுக்குன்றமாதலின், அது உலகோர்க்கு ஒரு ஞானபீடம், குரு பீடம் என்று கொள்ளப்படவேண்டிய இட மாக இருக்கிறது. அங்கேசென்று அருள் ஞானம் பெறுகிறவர்களெல்லாம் மணி வாசகரின் வழிவழி மாணவர்களாகின்ருர் கள் என்று கொள்வதும் பொருத்தம். எனவே நாம் அனைவரும் அடிகளின் மரபு வழி மாணவர்களாக இருந்து அவர் வழங்கி விட்டுச் சென்ற திருப்பதிகத்தின் விளக் கத்தைப் பார்ப்போமாக!

பிணக்கி லாதபெ குந்து றைப்பெரு
மான்! உன் நாமங்கள் பேசுவார்க்(கு)
இணக்கி லாததோர் இன்ப மேவரும்
துன்ப மேதுடைத் தெம்பிரான்!
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக்கோலம் நீவந்து
காட்டி னுய்கழுக் குன்றிலே.

'எவருக்கும் மாறுபாடு இல்லாமல் அருள் செய்கின்ற திருப்பெருந்துறைப் பெரு-மானே! நின் திருப்பெயரை ஓதுகிறவர் களுக்குத் துன்பங்களை அடியோடு போக் குகிற, மேன்மேலும் மிகுகின்ற சிறந்த ஒப்பற்ற இன்பமே பெருகி வரும். எம் தலைவனே! உலர்த்தப்படாதது எனினும்,

இயற்கைக்கு மாருக முளேவிட்டுக் கொண்டிருக்கிற ஆணவம் என்கின்ற ஒப்பற்ற கொடிய விதையானது மேலும் விளேயாத படி, என்னுடைய செயல்கள் அருளோடு ஒத்துப் போய்விட்டபிறகு, அளவில்லாத கலேகளுக்கும் எட்டாத அடிப்படையான தெய்வக் காட்சியைத் திருக்கழுக்குன்றத்திலே போந்து, எனக்கு நீ புலப்படுத்திக் காட்டினுய்! என்னே நின் அருளியல்பு!'

பிணக்கு :

ஞானத்தை வைக்கிற இடத்தில், அதைப்பெற்ற இடத்தை நினேவு கூர்வது இயற்கையே! அதனுல் பெருந்துறைப் பெருமானே நினேத்து விளிக்கிருர். விளிக்கிறபோது, அவன்றன் பிணக்கற்ற தன்மைதான், முதலில் நினேவுக்கு வருகிறது. (பிணக்கு-மாறுபாடு). அடிகளார் அருள் வாழ்வில் நுழைகிறபோது, அரசன் உள்ளிட்ட பலர் அவரோடு பொருள்காரணமாக மாறுபட்டனர். பிணக்கெல்லாம் பொருள் காரணமாகவருவது; ஆகவே பொருள் தொடர்பு இருக்கிறவரை பிணக்கு சிறிதாயினும் இருந்து கொண்டுதான் இருக்கும்; ஆனுல் அருள்நிலேயில் பொருளுக்கு முதன்மையில்லே. ஆதலின் அங்கே பிணக்குக்கும் வழியில்லே. அருள்கிட்டுகிற போது மெய்யுணர்வு (ஞானம்) அரும்பும், பொருள்தொடர்பு விட்டுப் போம் அல்லது அதன்பயன் கிடைத்துவிடும்; எனவே, பிணக்கும் இராது. பெரிய துறையிலே பிணக்குக்கு இடம் ஏது? அங்கே ஞானத்துக்குத்தான் குறைவு ஏது? அருளுக்கும் ஞானத்துக்கும் உறைவிடமாகவுள்ள ஆண்டவன், எந்த உயிர்களிடமும் அவற்றிற்குப் பக்குவமில்லே என்பதற்காகப் பிணக்குக் கொள்ளாமல், அவை எவ்வளவு தாழ்ந்த நிலேயில் இருந்தாலும் இணங்கிவந்து, ஏற்ற நன்மைகளேச் செய்து கொண்டிருக்கிருன். பெருந்துறையில் எழுந்தருளியுள்ள பெருமானுக்கு இவ்வாறு அருள் செய்யும் பண்பு சிறப்புரிமை போலும்.

உயிர்களிடத்திலெல்லாம் காணப்படுகிற இப்பிணக்கு நிலேயைக் கடந்துநிற்கிற இயற்கை நிலேயைக் கடவுள் என்று சொல்வதில் தவறு என்ன இருக்கிறது? அப்படிச் சொல்லமாட்டோம், இயற்கை என்றுதான் சொல்வோம் என்று ஒரு சாரார் பிடியாயிருந்தால், அது அவர்கள் விருப்பம். இயற்கை என்பதைப்போலவே கடவுள் என்ற சொல்லும், ஆண்பால் பெண்பால் முதலிய எந்தப் பாலிலும் சேராமல் அதே பொருளில்தான் இருக்கிறது. 'இயல்பானுன் சாழலோ!' என்கிருர் அடிகள் பிறிதோரிடத்தில்.

நாமங்கள் :

வடிவமிருந்தால் பெயர் இருக்கும். இறைவனுக்குத் தனித்த நிலேயில் வடிவமில்லே எனினும் உலகில் நாம் காணும் வடிவமெல்லாம் அவன் வடிவமே. அவற்றுக்குள் அவன் 'சக்தி' ஊடுருவி இருத்தலின் என்க. ஆகவே அவனுக்கு எத்தனேயோ பெயர்; ஒவ்வொரு பெயரும் இறைவனின் ஒவ்வோர் ஆற்றலேயும் புகழையும் நினேப்பூட்டும்; அவன்றன் பொருள்சேர் புகழை இடைவிடாது எண்ணுதற்கு அவை உதவியாக இருக்கும்.

இனி ஈண்டு நாமங்கள் என்றது அப்பெயர்களே எல்லாம் எண்ணியல்ல, அப்பெயர்களுள் எல்லாம் சிறந்ததான ஐந்தெழுத்தை எண்ணியே எனலாம்; ஏன் எனின், அஃதொன்றே அவன்றன் எல்லா ஆற்றல்களேயும் அருளேயும் செயல்களேயும் அறிவிப்பதாதலின் என்க. 'நந்தி நாமம் நமச்சிவாயவே' என்ருர் ஆளுடைய பிள்ளேயார், அதுவே அவன் சிறப்புப் பெயராதலின், ஐந்தெழுத்துப் பெயரும் பலவாகும். அவற்றுள் பேசுதற்குரியது 'ஸ்தூல பஞ்சாட்சரம்' எனப்படும் முதல் நிலே ஐந்தெழுத்து. திருப்பெருந்துறையில் அடிகள் பெற்ற அருள்மொழி (உபதேசம்) இதுவே யாகும். அதுபலமுறை உச்சரிக்கப்படும் ஆதலின், 'நாமங்கள்' என்று பன்மையில் குறிப்பிடப்பட்டது.

துன்பம் துடைத்த இன்பம் :

உலகியலிலும் இன்பம் உண்டு; ஆனுல் அவ்வின்பத்தின் பின்னுலேயே துன்பம் இருக்கும்; அருளியலில்தான் துன்பம் துடைத்த இன்பம் கிட்டும். உலகியற்

பொருள்களின் ஆற்றலேயே நம்மால் முழுதாக அறியமுடியவில்லை; வான், வளி முதலிய நுண்ணிய பூதங்களின் ஆற்றலை நம்மால் அளக்க முடியுமா? அவைகளின் அளவும் ஆற்றலும் நமக்கு வரம்பற்றவை களாக இருக்கின்றன. வரம்புள்ள இவற் றின் ஆற்றல்களுக்கு மேலும் வரம்பற்ற ஆற்றல்கள் பல இருக்கின்றன. எல்லா வற்றிற்கும் மேலான மூலமான ஆற்ற லுடையதையே நாம் 'கடவுள்' என்று கொள்ளுகின்றோம். உலகியற் துன்பம் விளைவிக்கின்ற, அழிந்து போகின்ற பொருள்களின் இன்பங்களையே, நாம் பெருமையாக எண்ணுகிறபோது, எல்லாம் கடந்த மூலப்பொருளான கடவுளின் இன்பம் எவ்வளவு பெரியதாக இருக்கும்! அதை இணக்கிக் கொள்ள (வரம்பு படுத்த) இயலுமா? அதன் நிழலிற்கூடத் துன்பத்துக்கு இடமில்லையே! அதனால் தான் அது 'துன்பம் துடைத்த இன்பம்' என்று குறிக்கப் பெறுகிறது.

கன்மம் :

விதைகள் எல்லாம் உலர்த்தப்படும், உலர்த்தப்பட்ட விதைகளே முளைக்கும் தகுதிபெறும். பிறவிக்கு வித்து ஆணவம்; அது உலர்த்தப்படவில்லை; எனினும் முளைக்கிறது! நம்முடைய பிறவித்துன்பங் கட்கெல்லாம் அடிப்படை இந்த ஆணவம் என்கின்ற மலமே. 'அது ஆணவம் பிடித்துப் போய்த் தடுமாறுகிறது' என்று பேசக் கேட்பதனால், ஆணவம் என்ற ஒன்று இருக்கிறதென்பதும், அது இருந் தால் தடம்மாறி (நெறிதவறி)ப் போகிற நிலை உண்டு என்பதும், தெரிகிறதல்லவா? அப்படியே 'என்கன்மத்தைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றேன்' என்கிறார்கள். அதனால் 'கன்மம்' என்ற ஒன்று (வினை) உண்டு என்றும் தெரியலாம். இவை யிரண்டுமே பிறவியின் வித்தும் விளைவு மாகும்.

ஆணவம் என்பது உயிர்களைப் பற்றி யுள்ள அறியாமை என்கிற மலம். அதை நீக்கவே இறைவன், அருளால் உயிர்களைப் பிறப்பிக்கின்றான். பிறக்கும் உயிர்களுக் குரிய உலகம்—உடல்—கருவிகள்—நுகர் பொருள் ஆகிய எல்லாவற்றையும், இறை வன் 'மாயை' என்னும் ஒரு மூலப்பொருளி லிருந்து உருவாக்கிப் படைத்தல் காத்தல் முதலிய ஐந்தொழில்களைப் புரிகின்றான். இவ்வாறு உயிர்களின் பிறப்பிறப்புகளுக் குத் துணையாக இருக்கின்ற மாயையும், ஒரு மலமாகவே ஆன்றோர்களால் கருதப் பட்டது; என்றாயினும் ஒருநாள் உயிர்கள் அதன் பிடிப்பிலிருந்து கழலவேண்டியே யிருக்கின்றது. இனி, வித்திலிருந்து முளை இரண்டாகப் பிரிந்து முளைப்பது போல, ஆணவம் என்கிற வித்திலிருந்து நல்வினை தீவினை என்கிற இரண்டு வினைகள் விளை கின்றன. அவைதான் 'கன்மம்' எனப் படும். உயிர்களின் அடுத்த அடுத்த பிறவி களுக்குக் கன்மம் காரணமாக இருத் தலின், அதுவும் ஒரு மலமாகின்றது. ஆக ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று மலங்களினால் ஒவ்வோர் உயிரும் கட்டுப் பட்டுக் கிடக்கின்றது.

காரணமில்லாமல் காரியம் உண்டு என்று எந்த அறிஞரும் சொல்லமுடியாது. பிறவிக்கும், அதன் சூழல்களுக்கும் உள்ள காரணத்தை 'வினை' என்ற பெயரால் வழங்கினர் முன்னோர்; இப்போது அப் பெயர் பிடிக்கவில்லை என்றால், வேறுபெயர் வைத்துக்கொள்ளலாமே ஒழிய, கார ணத்தை இல்லை என்று சொல்லி விட முடியாது.

வினை ஒத்தல் :

வினை (அருளோடு) ஒத்தால், ஆணவ மாகிய வித்துமேலும் முளைக்காது; பிறவி வராது என்கிறார் அடிகள். வினை ஒத்தல் என்றால் என்ன? உலகியலிலே நாம் பல் வேறு செயல் (வினை)களில் ஈடுபடுகிறோம். உலகில் பிறந்து விட்டதால், ஈடுபடத்தான் வேண்டும். ஆனால் அதிலேயே நிறைவு கொண்டு விடாமல், மேல் நிலைகள் உண்டா என ஆராய்ந்து அப்படி உண் டென்று அறியப்பட்டால், அந்நிலைகளை அடைதற் பொருட்டு உலகியலைக் கடக் கிற முறையிலும், நம் செயல்கள் நிகழ் வது நல்லது தானே? அருளோடு ஒத் துப் போவது என்பது, அங்ஙனம் கடக்

கிற முறையில் உலகியலைக் கொள்வது தான். அதாவது, உலகத்தையும் உயிர்களையும் படைத்த ஆற்றலின் நோக்கத்துக்கு ஏற்றபடி, நம் செயல்களைச் செய்வது. அப்படிச் செயலாற்றுகிறபோது, அவற்றால் வரும் இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாத நிலை, நம்மிடம் ஏற்படுகிறது. உலகியலிலேயே ஏதேனும் ஒரு குறிக்கோளுக்காகச் செயலாற்றுகிறபோது, அதனால் நேரும் இன்பதுன்பங்களைப் பொருட்படுத்தாத நிலை உண்டாவதை, நாம் அனைவரும் அறிவோம்.

அருளியலில் இத்தகைய அடைவுக்கு ஏதும் ஐயமில்லை. வினைகளைச் செய்கிறபோது உண்டாகும் இன்ப துன்பங்களை ஒன்றாகக் கொள்ளுகிற நிலையே வினை ஒத்த நிலை என்றும், எவ்வளவு நல்வினை பெருகியதோ அவ்வளவுக்குத் தீவினை தேய்ந்து அடங்கியதே வினை ஒத்த நிலை என்றும், நல்வினையானாலும் தீவினையானாலும் இறைபணி என்னும் வகையில் ஒத்த மதிப்புடையனவேயாதலின், அந்நிலைமையே வினை ஒத்த நிலை என்றும் பலபடப் பொருள் சொல்வர். எப்படி இருந்தாலும், அருள் உணர்வோடு காரியங்களைச் செய்கிறபோது, நல்வினை தீவினைகளால் ஆம் இன்பதுன்பங்களும் அளவும், செய்கிறவர்களைத் தாக்காமல் அற்றுப் போகிற நிலை உண்டாகிவிடுகின்றது. அருளில் வினை ஒத்துப்போவதென்பதும், வினை அற்றுப்போவதென்பதும் ஒன்று தான்.

அறிவு நிலையில் நிகழும் வினைகளுக்கெல்லாம் பயன் உண்டு; அவை உரியவரைத்தாக்கும். அருள் நிலையில் செல்லுகிறபோதும் வினை நிகழும். ஆனால் அவற்றின் தாக்குதல், வினை நிகழ்ச்சிக்கு இடமான உயிரையோ உடம்பையோ ஒன்றும் செய்யாது; காரணம் அவை உயிரறிவினால் நடைபெறாமல் அருளுணர்வினால் நிகழ்வன ஆதலின். சண்டேசுரர் அருள் நிலையில் வாழ்ந்தவர், அவர்வாழ்வில் பசுவைக் காத்தலாகிய நல்வினை போல்வதும், தந்தையின் கால்களைத் தடிதலாகிய தீவினை போல்வதும், நிகழ்ந்திருக்கின்றன. அருளோடு ஒத்துவிட்ட பின்னரும், இவ்வாறு எடுத்தபிறவி முடிகிறவரை வினைகள் போல்வன நிகழும். நல்வினையாயினும் தீவினையாயினும் அருளோடு ஒத்து நிகழ்தலின், அவற்றிற்குத் தனிப்பயன் ஆவது ஏதுமின்றி அருட்பயனே பயனாயிருக்கும்; ஆகவே அது உரியவர்களைத் தாக்குவதில்லை.

கணக்கிலாத் திருக்கோலம் :

கலையறிவுக்கு எட்டாதது கடவுள் நிலை. ஆதலின் அக்கடவுட் காட்சியைக் 'கணக்கிலாத் திருக்கோலம்' என்றார். வினை ஒத்தபின் காட்சி கிட்டும். அதற்கு முன்பும் காட்சி கிட்டும். ஆயினும் இரண்டுக்கும் வேறுபாடு உண்டு; கலைகளுக்கு எட்டாத திருக்கோலம் வினை ஒத்தபின்பே கிட்டுவது. வினைஒத்த நிலை, 'சீவன்முத்தி' நிலை; ஆகவே அது சீவன் முத்தர்கட்கே விளங்கக்கூடியது. அக்காட்சிக்குப்பின் அமைதியைத் தவிர வேறு நிலை இல்லை. அந்நிலைக்கு முற்பட்ட காட்சி எல்லாம் அவரவர் பக்குவ நிலைகட்கு ஏற்ப, இறைவனால் அதிட்டிக்கப்பட்ட தேவர்களின் காட்சியாகவே இருக்கும்; இறைவனின் தனித்த பொருட்காட்சியாக இராது. அடிகட்குப் பெருந்துறையிலும், மதுரை முதலிய இடங்களிலும், குரு வடிவமாகவும், குதிரைச் சேவகனாகவும், மண் சுமக்கும் கூலியாளாகவும் வந்த காட்சிகளெல்லாம் அப்படிப்பட்ட அதிட்டான தேவர்களின் காட்சிகளேயாகும். அவை எல்லாம் கலைகளுக்கு எட்டக்கூடிய காட்சிகளாதலின், அவற்றைப்பற்றிய விளக்கங்கள் அடிகள் வாக்கில் அங்கங்கே வருகின்றன. கழுக்குன்றக் காட்சி கணக்கிலாக்காட்சி ஆதலின், விளக்க முடியாததாய், அவர்தம் நிலைக்கு மட்டுமே விளங்கியதாய், அதற்குப்பின் அடிகளுக்குத் தில்லையில் சென்று அமைதியடைகிற நிலையைக் கூட்டுவிப்பதாய் இருந்தது.

(தொடரும்)

"இயற்கைக் காட்சியில் இன்பச்சுவை"

(திரு. என். எஸ். தாத்தாச்சாரியார், தஞ்சை.)

முன்னுரை: பழகு தமிழ்ச் சொற்களில் சிறப்புள்ளசொல் 'அன்பு' என்ற சொல்லாகும். அன்பாகிய தாயிடத்தில் உண்டானது 'அருள்' என்ற சேயாகும். உற்றார் உறவினர்பால் காட்டும் பற்றை அன்பு என்றும், இன்னார் இனியரென்றில்லாது எவரிடத்தும் பரவி நிற்கும் பரிவை அருள் என்றும் கூறுவார்கள். உள்ளம் கனியுங்கால் ஏற்படும் மெய்ப்பாடே அன்பாகும். அன்பும் அருளும் கலக்குங்கால் இறை சுவைக்கக் காண்கிறது. அன்பானது, நம்முடைய பெண்டிர் மக்கள்பால் சென்று, பின் இறைவனை நோக்கிச் செல்லும் பொழுது இறைவன் அருள் நம்மிடம் அலைபாய்கிறது. உலகவளர்ச்சிக்கும் அன்பின் தொடர்பு இன்றியமையாதது.

அன்பின் வழி: அன்பானது இரண்டு உயிர்களின் தனித்தநிலையில் உண்டாவதன்று. இரண்டு பொருள்களின் கூட்டுறவினால் நிகழ்வதாகும். அன்பில்லாத உயிர்வாழ்க்கை வன்னிலத்தில் பட்ட மரத்தை ஒக்கும். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்ற திருக்குறளடியும், உயிர் நிலை பெறுவது அன்பின் வழியிலேதான், என்று உறுதிப்படுத்துகின்றது. அறம் தழைக்கவும், அவ்வன்பின் சார்பு வேண்டற்பாலது. ஏன்? மறத்திற்கும் அஃதே துணைபுரிகிறது. காய் பழமாவதுபோல், அன்பு பழுத்தால் அருளாகிறது. அத்தகைய அன்பே கடவுள். அன்பு கொண்டே அவனைக் காணமுடியும். 'அன்பில்அன்றி ஆழியானை யாவர் காண வல்லரே' என்று சந்த விருத்தமும். கூறிற்று. மேலும், நம்மாழ்வார் எம் பெருமானை விளிக்குமிடத்துக் 'கோல மலர்ப்பாவைக்கு அன்பாகிய என் அன்பே' என்று விளிக்கிறார். இத்தகைய அன்பைக் கொண்டு, இறைநிலையை அறிய முற்படும் மதமே, அன்பு மதமாகும். இக்கொள்கையின் அடிப்படையில் ஆழ்வார்கள் ஸ்ரீவைணவ சமயத்தை வளர்த்தனர். அவர்களின் அமுதன்ன அருளிச் செயல்களாகிய கற்பகக்கொடிகள், இந்த அன்பு என்னும் உரம் கொண்டே பரவிப் பூத்தன எனலாம். நூற்றந்தாதியில் அமுதனாரும், ஆழ்வார் திருவாக்கிற்கு மணமும் உண்டு என்று, "திருவாய்மொழி மணம் தரும் இன்னிசை மன்னும் இடந்தொறும்" என்ற அடியால் பணித்தார். இவ்வொழுக்கத்தையே "தெய்வக் காதல் ஒழுக்கம்" எனவும் அழைக்கலாம். காதல் ஒழுக்கத்தை இலக்கண நெறிகொண்டு வரையறுத்துக் கூறும் தனிச் சிறப்புத் தமிழ் மொழிக்கே தகை சான்றுளது. திருவருட் செல்வர்களான மெய்யடியார்களும் இந்த அக ஒழுக்கமாகிய அன்பு நெறிபற்றி, இன்பம் எய்தும் வழி கூறும் இலக்கணங்களும் இலக்கியங்களும் பல இயற்றியுள்ளமையால், இதனை இழிந்த காமம் என்று ஒதுக்குதல் பொருந்தாது. இதனைத் திருவாய் மொழி உரையிலே பரக்கக் காணலாம். பேரின்பத்தைச் சொல்லால் விளக்குதற்கு இதுவே சிறந்தவழி என மெய்யடியார் கொண்டுள்ளனர்.

அகமாவது "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுங்காலத்துப் பிறந்த பேரின்பம். அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப்

புல்னுகை இவ்வாறு இருந்ததெனக் கூறப் படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளா தலின் அதனை அகம் என்றார்'' எனத் தொல்காப்பிய உரை நூலும் கூறிற்று. அந்த அகம் (அன்பு) களவியல், கற்பியல் என இருவகையாகப் பிரிந்து பின் ஏழு வகை உறுப்புக்களைக் கொண்டு நின்றது. இதில் கற்பியல் என்னும் பகுதியிற் காணப் படும் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங் கல், ஊடல் என்ற ஐவகை ஒழுக்கங் களிலும் மருத நிலத்துக்குரிய ஊடலே சிறப்புடைத்து. ''ஊடலினாலே கூடல் இன்பம் சிறந்தது'' என்பதும் முதுமொழி யாகும்.

அகவழிநின்ற ஆழ்வார்கள் : ''தொண் டர்க்கு அமுது கொலோ'', ''பார்பரவின் கவி'' ''அடியார்க்கு இன்பமாரி'' என்றெல் லாம் புகழ்ந்து போற்றப்பட்ட ஆழ்வார் களின் அருளிச் செயல்களில் இத்தகைய அக ஒழுக்கத்தின் விரைவும் நிறைவும் எழுத்துகள் தோறும் சூழல்கொண்டிருக் கும். அகத்தின் நிறைவில் அலமந்து பாடிப்பரவிய ஆழ்வார், ஞானத்தில் தன் பேச்சும், பிரேமையில் பெண் பேச்சுமாகவே பேசினார் என்பதைத் திவ்வியப்பிரபந்தத்திற் பழகும் உள்ளம் நன்கறியும். ஆழ்வாரின் அடங்காக் காதல் நிலையைப்பற்றி ஈட்டில் ''எம்பெருமான் பக்கல் பிறந்த ஆசை முதிர்ந்து, நினைத்தபடி பெறுவிட்டவாறே சோகமோகங்கள் பிறக்கும். இப்படியுள்ள கலவியாலும் பிரிவாலும் ஆழ்வார்க்கு வந்ததசை''...... எனக் கூறப்பட்டமை காண்க! முதன்முதலில் '' உன்னைக் காணுமோர் ஆசையினால்'' என்றும் ''கோலத் திருமாமகளோடு உன்னைக் கூட்டாதே'' என்றும் பேசி, ''ஒருநாள் காண வாராயோ'' என்றும் இரங்கி நிற்பர். அவன் உருக்காட்டினதும், ''ஆவிக் கோர் பற்றுக்கொம்பு நின்னலால் அறிகின்றி லேன்'' ''களைவாய் துன்பம்'' என்றெல் லாம் கெஞ்சியும் கொஞ்சியும் பேசி மகிழ் வர். இவருடைய அடங்காக் காதலைத் தணியவிட்டாலல்லது சமநிலைபெறுது என்று திருவுள்ளம் கொண்ட எம்பெரு மான், சிறிது புறம் காட்டி நிற்பான். அந்தோ! இங்நிலை பொறுக்கவொண்ணாது ஆழ்வாரின் உள்ளத்தை நீர்ப்பண்டமாய் உருக்கிடும். உடனே ஊடல் தொடங்கும். ''உன்னுடைய சுண்டாயம் நான் அறி வேன்''. ''பந்தும்கழலும் தந்துபோகு நம்பி'' என்று பேசுவர். இதே துறையில் திருமங்கை ஆழ்வாரும் ''மறுத்துப் புறமே வந்து நின்றீர் ஏதுக்கு இது! என்னிது! என்னிது'' என உள்ளம் விள்ள நிற்பார். குலசேகராழ்வாரும் ''மார்வுதழுவுவதற்கு ஆசையின்மை அறிந்து அறிந்தே உன்றன் பொய்யைக் கேட்டு'' என்று இப் புடையிலே அலமந்தார். பொதுவாகக் கூறின் நம்மாழ்வார் ''மின்னிடை மடவார்'' பதிகத்திலும், குலசேகரர் ''ஏர்மலர்ப் பூங் குழல்'' பதிகத்திலும், திருமங்கை மன்னன் ''காதில் கடிப்பு'' என்ற பதிகத்திலும், இவ் வாறு ஊடல் நிலையில் உயிரிட்ட பாசுரங் களே திவ்வியப் பிரபந்தங்களுக்கு உயிர் நாடிகளாயின. இவர்களின் ஊடல்நிலை உள்ளடங்காமல், புறத்தே பெருகிக் காண்பன தோறும், கேட்பன தோறும் ஊடுருவிப் பாய்ந்தது. ஒரு பாசுரத்தை ஈண்டுக் காணலாம்.

குணத்திலே ஊடல்: பதியே பரவித் தொழும் திருமங்கையாழ்வார், திருநறை யூர் நம்பியைக் காணவிழைகிறார். வயலும், வரப்பும், சோலையும், சாலையும் சூழ்ந்தது சோழ நாட்டுப் பாதை. நம்பியைக்காண ஆயிரம் கண்கள் வேண்டுமே, இரண்டு கண்களைத் தானே அந்தோ! பிரமன்படைத் தான் என்று எண்ணமிட, தெய்வக் காதல் வெள்ளத்திலே கருத்து மிதந்து ஓட, நம் நாற்கவிப்பெருமாள் போய்க்கொண் டிருக்கிறார். நறையூர் என்ற நாச்சியார் கோவில் கிட்டுகிறது. ஊரின்மருங்கே, அருளாளர் உள்ளம்போல் தெளிந்த நீர் வழிகின்ற பொய்கை ஒன்று தென்படு கிறது. பொய்கையில் ஒரு பக்கம் ஆம் பலும், மற்றோர் பக்கம் தாமரையும் பூத்துத் துலங்குகின்றன. அங்கொரு காட்சி இதனைத் திருக்கண் சாற்றிய கலியன் உள்ளம் ஒத்ததன்மை கொண்டு, அக் காட்சியில் பதிந்தது, இயற்கைக் காட்சி யில் இன்பச் சுவையை வடித்துக் காட்டி யது. உடனே ஆழ்வார் உள்ளத்தி லிருந்து பெருக்கெடுத்தது ஒரு தென்றமிழ் வெள்ளம்.

"பள்ளிக் கமலத் திடைப்பட்ட
பகுவாயலவன் முகம் நோக்கி
நள்ளியூடும்வயல் சூழ்ந்த
நறையூர் நின்ற நம்பியே"

என்பதே அவ்வமுதத்தமிழ்.

இவ்வடிக்குப் பட்டர் என்ற ஆசாரிய வள்ளல் அருளிச் செய்த உரைநயம் ஈடும் எடுப்பும் அற்றது :—

"ஒரு ஆம்பல் மலரிலே இரண்டு நண்டுகள் தம்பதிகளாக இனிது வாழ்கின்றன. நள்ளி என்ற பெண் நண்டு கருவுற்றது. கருவுற்ற காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் "மசக்கை" அதாவது ஆசை என்ற நிலை அதற்கும் ஏற்பட்டது. நறுமணத் தேன் பருகவேண்டும் என்பதே அந்த ஆசை. இதனைக் குறிப்பால் உணர்ந்த ஆண் நண்டான அலவன், தேன் உள்ள தாமரை மலரை நோக்கி விரைகிறது. தாமரை மலர்புக்குத் தேனைப் பெரிய வாயினால் முற்றும் பருகிற்று. நேரம் போனதும் தெரியவில்லை. மாலை வந்தது. இயற்கையாகத் தாமரை மூடிக்கொண்டது. அதனுள்ளே அகப்பட்ட அலவன், தாமரையை மலர்த்திக்கொண்டு எப்படியாவது வெளியே வரவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தது. ஆனால் அது தலைவிக்குத் தேன் தந்த அம்மலரைச் சிதைக்கவிரும்பவில்லை. இங்குக் காதல் கரைகடந்தது. இரவெல்லாம் அம்மலருக்குள்ளேயே கிடந்து, தலைவியின் பிரிவால் புரண்டு ஏங்கி விழித்து நின்றது. பொழுது விடிந்தவாறே தாமரையும் மலர்ந்தது. மலர்ந்த தாமரையிலிருந்து வெளிப்பட்டுத் தாதும், சுண்ணமும் உடம்பிலே நிழலிட்டுத் தோற்றத் தன்மனைக்கு விரைந்துவந்து கொண்டிருந்தது. பகற்பொழுதானபடியால் குடியிருந்த ஆம்பல்மலர் மூடிக்கொண்டது. இதற்கிடையில் பெண் நண்டு தன்னைப் பிரிந்த தலைவனைக்காண இரவெல்லாம் ஏங்கிநின்றது. தலைவன் வரும் வழியிலே விழிவைத்து நின்றது. வரக்காணவில்லை. காலையில் விரைந்துவரும் தன் காதலனைக் கண்டு களிப்புற்றது. காதலனின் உடலைத் தொலைவிலேயே உற்று நோக்கியது. ஆ! கூடலின்பம் கொழிக்கும் பெண் நண்டின் உள்ளத்திலே ஊடல் ஊற்றம் பெற்றது. தலைவனின் உடல் நிலையையும் களைப்பையும், கண்களில் காணும் கலக்கத்தையும், தவறாக நினைத்து விட்டது. பரத்தையரின் புணர்வினால் ஏற்பட்ட நிலைமாற்றம் என்று உறுதிகொண்டது. உடனே சட்டெனக் கதவைத் தாளிட்டது. ஆம்பல் தானாக மூடிக் கொண்டதனை இவ்வாறு இன்பச் சுவையிலே மிழற்றுகிறது ஆழ்வார் திருவாக்கு. இவ்விடத்து, பெரியவாச்சான் பிள்ளையின் உரைநடை :

"பகுவாய் அலவன் கமலத் திடைப் பள்ளி பட்டது; நள்ளியானது கர்ப்பதாரணத்தாலே கேதித்திருக்க, அதுக்கு இனியது இடவேணும் என்று மதுவுக்காகப் போந்த அலவனானது, தாமரைப் பூவிலே வந்திழியக்கொள்ள, போது அஸ்தமிக்கையாலே உடம்பைக்கொண்டு அங்கேயிங்கே புரண்டு, இராத்திரி அதிலேதங்கி, அதில் தாதும் சுண்ணமும் உடம்பிலே நிழலிட்டுத் தோற்றப்போது விடிந்தவாறே வந்தது. இதுபோனபோதே தொடங்கிக் கதவைத் திறந்து வரவு பார்த்துக் கொடுநின்ற நள்ளியானது, இதைக் கண்டு இராத்திரி தங்கினபடியாலும், உடம்பில் சுவடிருந்தபடியாலும், இது வெறுமனல்ல என்று முகம்மாறிக் கதவையடைத்து உள்ளே போய்ப்புக்கது"

இந்த இன்சுவை ததும்பும் கருத்தைப் பட்டர் அருளிச் செய்ததும், பிள்ளை திருநறையூர் அரையர் என்ற மகான் "ஆராய்ந்து குற்றம் நிரம்பினால் பின்னையன்றோ தண்டிப்பது" என்ன "என்செய்வோம்! கேள்வியில்லாதபடி பெண்ணரசு நாடாய்த்தே" எனப் பட்டர் சோதிவாய் திறந்து மாற்றம் பணித்தார். இவ்வாறு பட்டர் பெருமான் உரைத்தது ஏன் எனில்! திருநறையூருக்கு நாச்சியார் கோயில் என்றே திருநாமம். அவ்வூரில் ஸ்ரீவில்லிபுத்தூரைப்போல் எம்பெருமானைவிட நாச்சியாருக்குத்தான் சிறப்பு. அது ஒரு பெண்ணரசு நாடு. இன்றும் அங்குத் திருவீதிப் புறப்பாடுகளில் நாச்சியார் முன்னே எழுந்தருளுவதும், எம்பெருமான் பின்னே எழுந்தருளுவதுமான பழக்கம் உண்டு. ஆகவே ஆணரசு நாடென்றால் நாம் கேட்கலாம். அது பெண்ணரசு நாடாயிற்றே! எனப் பட்டர் உரைத்ததின் வகை. இவ்வாறே, இன்சுவையே வடிவெடுத்த பாசுரங்கள் பல உண்டு.